www.padippakam.com

# கொக்குகள் பறந்து போய்விட்டன

## ஜி. காசிராஜன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கொக்குகள் பறந்து போய்விட்டன

**ஜி. காசிராஜன்**

**சக்கரம் புக்ஸ்**

படிப்பகம்

www.padippakam.com

KOKKUGAL PARANDHU POIVITTANA

G. KASIRAJAN

First Edition : March 1991

Printed at : Manian Achagam, Madras - 4

Published on behalf of

Tamil nadu Progressive Writers Association
Nellai District Committee

by

Chakkaram Books
21, Jan mohammed st,
Madras-600 002.

Rs. 16-00

கொக்குகள் பறந்து போய்விட்டன

ஜி. காசிராஜன்

முதல் பதிப்பு : மார்ச் 1991

அச்சு : மணியன் அச்சகம், சென்னை - 4

வெளியீடு : தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
நெல்லை மாவட்ட குழுவுக்காக

சக்கரம் புக்ஸ்
21, ஜான் முகமத் தெரு,
சென்னை - 600 002.

ரூ. 16-00

படிப்பகம்

www.padippakam.com

MC . LOGANADAN
RINGPARKEN 8.ST TH
7500 HOLSTEBRO

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அம்மா அறிந்தது | 1 |
| 2. | அண்ணனின் பனியன் | 12 |
| 3. | மதிப்பு | 20 |
| 4. | அழிந்த கோடுகள் | 29 |
| 5. | அம்மா அறியாதது | 37 |
| 6. | வாளிச்சத்தம் | 45 |
| 7. | உத்தியோகம் | 55 |
| 8. | தடயம் | 65 |
| 9. | இருட்டு | 77 |
| 10. | கரைதல் | 84 |
| 11. | பாலம் | 92 |
| 12. | மிச்சமாயிருக்கும் வேலைகள் | 98 |
| 13. | கண்காணாத் தொலைவு | 110 |
| 14. | கொக்குகள் பறந்து போய்விட்டன | 120 |


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அம்மா அறிந்தது

பஸ் விட்டு இறங்கிய போது கும்மிருட்டு. யுகயுகமாய் இருட்டை ஏற்றுக் கொண்டது மாதிரி மரங்கள், செடிகள், கிழடு தட்டிப்போன புளியமரம் பத்து வருஷமாக அப்படியேதான் இருக்கிறது. நிலவுடைமையின் வண்டிப் பாதை. வண்டிப்பாதை மனதை இழுத்து வீட்டுக்குள் விட்டது. மனதுக்குள் திண்ணையில் படுத்த அமமா, கட்டிலில் அப்பா என்று ஆறுமாசம் முந்திய அமைப்பில் வீடு. பாதை இளகி புழுதியாய் இருந்தது. கோடையில் குப்பை அடித்திருப்பார்கள். செருப்பும் பாதமும் புழுதியாய்ப் போச்சு.

இப்ப மனசுக்குள் வெறுமை. மதியம் புறப்படும் போது மனதில் இதம். கார்காலக் கரிசலில் மயில ஆடிக் கொண்டிருப்பது போல மனசு மதியம். நினைச்சுப் பார்க்கும் போது எல்லாமே சந்தோசமாக இருக்கு. நடைமுறையில் அப்படி இல்லை. சின்ன வயசில் ஊர்தான் சொர்க்கம். இப்ப ஊருக்குப் புறப்படுமபோது சந்தோஷமாக இருந்தாலும், ஊருக்குப் போன பிறகு மனசுக்கு ஊமைச் சோகம். ஊரெல்லாம் வெறுமை.

அம்மாவை நினைக்கும்போது மனசெல்லாம் மதிப்பும் மரியாதையோடும் அன்பு பொங்கிப் பெருகும் நீரூற்று.

## 2

அம்மா மனசில் எப்பவும் சிரிச்ச முகமாகத்தானிருக்கா. ஊருக்கு வரும் போதெல்லாம் நிஜ அம்மாவிற்கும் மனசு அம்மாவிற்கும் நிறைய வேறுபாடு. நிஜ அம்மா காட்டில் வேலை செய்து விட்டு அழுக்கோடு கிறங்கிப் போய்... கற்பனை எப்பவுமே அலங்காரம்தான்.

மாரியப்ப நாடாரின் கொல்லையில் இப்ப சீமைக் கருவேலமரங்கள் வண்டிப்பாதையில் போறவர்களைத் தொடக் காத்திருக்கின்றன. சின்ன வயசில் இதே இடத்தில் பூசணி, பீர்க்கங், பாவைக் கொடிகள் படர்ந்து காற்றில் ஆடும். எவ்வளவு கஷ்டப்பட்டாலும் மாரியப்ப நாடார் கடையில், சின்னப் புள்ளையில் பத்து காசுக்கு வாங்கித் திங்கலாம். அம்மா பருத்தி போட்டு சிறுவாடு வைத்திருந்ததில் இருந்து தினமும் காசு கொடுப்பாள்.

அம்மாவுக்குப் பிள்ளைகள் என்றாலே கரிசலில் பூவும் பிஞ்சுமான மனசு.

வண்ணாக்குடியில் நாகரிகமாக நிறைய அதிசயங்கள். அதைக் கடக்கும் போது கழுதையும் கழுதைச் சாணமும் கலந்த ஒரு வாடை. திடீரென்று பெரிய நாய் குரைத்து வேகமாக ஓடி வந்தது மனசில் லேசாகப் பயம். ஏழாம் வகுப்பு பெரியம்மா ஊரில் படித்ததிலிருந்து இப்பக் காலேஜ்ல வேலை பார்க்குற வரை எப்ப ஊருக்கு வந்தாலும் இங்கு ஒரு நாய் குரைக்கும். இங்கு நிறைய நாய் இருந்து இதே மாதிரிதான் அதுவும் குரைத்தது என்பது அந்த நாய்க்குத் தெரியுமா?

பாதைமேலே அரசாங்கத்தின் நஷ்டமான ஓவர் டேங்க். அதன் படிக்கட்டில் படுத்துத் தூங்கிய வண்ணான் எழுந்து நாயை அதட்டினான்: "சேடு... சும்மா இரு கழுதை... நம்ம நாய்க்கர் மவனைத் தெரியலை...ச் சேடு..."

www.padippakam.com



அம்மாவுக்கு ரொம்ப பயந்த மனசு. ஊருக்கு வழியனுப்பிவிட்டுக் கற்பனை பண்ணுகிற மனசு. யாரோ தன் மகன்களிடம் திருடுகிற மாதிரி. காசில்லாமல் டவுனில் அலைகிற மாதிரி. அதனால் மனசு துடித்துப் பயம்... பஸ்சில் தூங்கும் போது யாரோ பையை எடுத்துக் கொள்வது மாதிரி. "பஸ்சுல பாத்துப் போகணும் கண்ணு... காலமே சரியில்ல... ஊர்ல எப்படியெல்லாமோ பேசிக்கிறாங்க... ஒங்கள நம்பித்தான் இருக்கேன்பா... பத்திரமா போ... தூங்கிடாதே..." —என்பாள். பஸ்சுல ஏர்ற வரைக்கும் நூறு தடவையாச்சும் ஜாக்கிரதை கண்ணான்னு சொல்லுவாள்.

விளக்கு வெளிச்சத்தில் வரிசையாய் பூட்டிக் கிடக்கும் வீடுகள். பூச்சிகள் விளக்குக் கண்ணாடியை உடைக்க முயற்சி செய்தன. தாத்தா காலத்து வண்டிக்கடியில் கரிசலைத் தோண்டித் தோண்டி கன்ன எலும்பு துருத்திப் போன சுப்பையா கட்டிலில்.

ஐயர் சந்தைத் தாண்டியவுடன் கட்டிலில் ஆழ்ந்த நித்திரையில் அய்யா. விதைப்பு நெல்லில் எச்சி துப்ப முடியாதிருந்த களைதான் அய்யா நித்திரைக்குக் காரணமாயிருக்கும். படிக்கட்டு மூலையில் செருப்பைக் கழட்டிப் போடும்போது சாணத்தில் விழுந்து அமுங்கியது.

கிராமமே இப்பவோ அப்பவோன்னு இழுத்துட்டிருக்கும்போது ஊரில் சாணத்திற்குப் பஞ்சம். காலையில் வாசல் தெளிக்க இப்பவே சேமிக்க வேண்டும். ஊரில் நிறைய வீடுகள் செத்துப் போயிருந்தன.

அம்மா திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தாள் அறவமில்லாமல் விட்டத்தில் இருந்த சாவியை எடுத்துக் கதவில் நுழைத்தபோது இருட்டைக் கிழித்துச் சத்தம் அதிர்ந்தது. அம்மா பட்க்கென்று எழுந்து கொண்டாள்

www.padippakam.com

## 4

"யாரு..."— படுக்கையில் தளர்ந்திருந்த சேலையை இறுக்கிக் கொண்டே கேட்டாள்.

"நான்தாம்மா..."— என் குரல் அம்மா காது வழி இறங்கி மனசில் என் உருவம் வரைந்தது. அம்மாவின் மனசெல்லாம் பூக்கள். "மய்யா... கண்ணா... இப்பத் தான் வாரியா... சாவியைக் கொடு... நான் தொறக்கு றேன்..."— என்றாள்.

அம்மா அவசரமாக திறந்தாள். திறந்ததும் கும்மிருட்டு. இருட்டில் எலிகள் அடுக்குப் பானை வழியாக மேலே ஏறுகிறது. அம்மாவுக்கு இருட்டு மிகப் பழக்கம் வீட்டின் இருட்டு அம்மாவுக்கு பாட்டி கொடுத்த சீதனம்.

"பிடீ... மியாவ்... எலிக அநியாயம் பண்ணுது கண்ணா..."

எனக்கும் இருட்டு கொஞ்சம் பரிச்சயம். பையை எங்கு வைக்கலாம் என்று தேடிக் கொண்டிருந்தேன். அம்மா சொன்னாள்: "இரு... இரு... லைட்டைத் தூண்டி விடுறேன்... யாராரோ கரண்ட் போட்டாச்சு... நமக்குத் தீரலையே..." செத்துக் கொண்டிருப்பவனுக்கு அழகான போர்வை கொடுப்பதுபோல ஊரில் தெருக்களிலும் சில வீடுகளிலும் கரண்ட் வீடுகள்.

வெளிச்சம் வந்தது. அம்மா பக்கத்தில் வந்து உற்றுப் பார்த்தாள். "என்னடா... கண்ணா... இப்படிக் கிறங்கிப் போயிட்டே..."

பெட்டிகள் அங்கங்கு கிடந்தன. தரையெல்லாம் தூசி. வீடும் கிராமமும் நோய்வாய்ப்பட்டிருக்கிறது.

வெளி உலகம் தூங்கிப் போயிருந்தது. நானும் அம்மாவும் மட்டும் முழித்திருக்கிறோம்.

பேண்ட் கழட்டிப் போட்டு, கொடியில் கிடந்த அப்பா வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டேன். அம்மா கேட்டாள். "லீவா... கண்ணா..."

படிப்பகம்

www.padippakam.com



"ம்... நாலு நாள்ளக்கு லீவு... அம்மா, அப்பா ஏன் வெளியில படுத்துட்டாரு... கூதலடிக்காது..."

"என்னமோ படுத்துட்டாரு... கூதலடிச்சா நடுச்சாமம் உள்ளே வந்துடுவாரு... சாப்ட்றியாடா... கண்ணா..."

"ம்... என்ன இருக்கு..."

அம்மா சிரித்தாள். கம்மஞ்சோறோட வச்சுட்டேன்... களை உயிரை வாங்குது பாரு... கருவாட்டுக் குழம்பு இருக்கு... கொஞ்சம் சாப்புடு... வெள்ளன சமைச்சுடு றேன்..."

"சரி... அதுக்கென்னம்மா..." காலையில கூட நீ கஷ்டப்படவேணாம்... நான் கம்மஞ்சோறே சாப்ட்டுக்கு வேன்..."

"அட... ஏன் ராசா... நல்லாயிருக்கே... இது கூடக் கஷ்டமா... படிச்சு வேலைபாக்குற ஒனக்கு தகுந்த மாதிரி சாப்பாடு வேணாம்... மதியம் ஒரு கோழி அடிச்சுடு வோம்..."

ஏதாவது விசயமாக அயலார் வீட்டுக்கு அம்மா போக நேரும்போது, அவர்கள் வீட்டில் பலகாரம் சுட்டிருந்தால் அம்மாவுக்கு ருசி பார்க்கக் கொடுப்பார்கள். ஆனால் அம்மா அதை மடியில் மறைத்து சாப்பிட்டதாக பாவனை பண்ணி நல்லாயிருக்கு என்று சொல்லிவிட்டு எங்களுக்காகக் கொண்டு வருவாள்.

அம்மா சாப்பாடு வைத்தாள். குழம்பு அதிகமாக விட்டாள். நான் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"எத்தனை மணிக்குக் கிளம்பியிருப்பே..."

"மதியம் ரெண்டு மணிக்கு..."

www.padippakam.com

## □ 6

"மய்யா...கண்ணா...எல்லாரும் ஒன்ன... சாரு சாருன்னுதானேக் கூப்புடுவாங்க..."

"ம்..."

"வணக்கம் சார்..."—என்று சொல்லி அம்மா நெற்றியில் கைவைத்து "அப்படிம்பாங்க..."—என்றாள். களத்துல பேசிக்கிட்டாங்களாம்...இனி அவங்களுக்கு என்ன...நடுவுள்ளவன் மூவாயிரம் வாங்றான்...பெரியவன் மில்லுல இருக்கான்...மூணாவது பையனைப் படிக்கப் போட்டுடுவாங்கன்னு...எல்லார்க்கும் நம்ம மேலே பொறாமைடா..."

"அண்ணன் வந்துச்சாமா ... பாரதி நல்லா இருக்காளா..."

"நான்தான் போயி ரெண்டு நாள் இருந்துட்டு வந்தேன். பாரதி பாட்டி பாட்டின்னு விடமாட்டேனுட்டா... அவளுக்கு பிரியம் பூராவும் நம்ம பக்கந்தான்..."

"ம்"—சந்தோஷமாக இருந்தது.

"பக்கத்து வீட்டு அக்கா அவகிட்ட ஒங்க சின்னையா எங்க இருக்காருன்னு கேட்டா...திருநெல்வேலில காலேஜ்ல...அது என்னது லக்சரா... அப்படின்னு எவள அழகா சரியா சொல்லிருச்சு..."

"மதினி எப்படி இருக்கா..."

"இருக்கா ... அவளுக்கென்ன ... வீட்ல உட்காந்து திங்றதுக்கு..."

முந்தி அம்மா மனசில் தரிசாக இருந்தது எங்கள் வாழ்க்கை விசயம். அம்மா மிகப் பயந்திருக்கிறாள். முந்தி பண்ணைகள் ஆளைப்பார்த்துதான் வேலைக்குக் கூப்பிடு வார்களாம். நாங்கள் பிறந்தவுடனே அம்மா ஊமையான எண்ணங்களால் அழுதிருக்கிறாள். "நம்மளையே

www.padippakam.com



கழிச்சுக் கழிச்சு வேலைக்குக் கூப்ட்றாங்க...இந்த மூணு பேரும் எப்படி வேலை செஞ்சு பொழைக்கப் போறாங்களோ..." அம்மா பின்னாளில் எங்களிடம் சொல்லியிருக்கிறாள். "வசதியானவங்க சொன்னாங்க' மூணும் பையனாப் பொறந்து நெலம் இல்லாம என்ன செய்ய..."

அம்மா கரிசலில் சம்சாரிக்கு மழை மாதிரி என்னை நம்புகிறாள். முக்கால்வாசி ஆற்றல் உழைப்புக்குப் போய் விட்டது. ஆற்றல் செலவழித்த அளவுக்கு சேமிக்க வருமானம் இல்லை. உழைப்பின்றி தொங்கி பிடித்திருப்பவர்களைக் கண்டால் அம்மா மனசு பொறாமைப்படும்.

அம்மா திண்ணையில் பாய் விரித்து வெள்ளாவி வைத்த சீலையை விரிக்கக் கொடுத்தாள். வெள்ளாவி வைத்த சீலையில் முகம் புதைத்து படுத்துறங்குவது பேரானந்தம். அம்மா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

அம்மாவுக்கும் வெளி உலகத்துக்கும் சம்பந்தமே கிடையாது. ஊரும், ஊரின் காடுகளும், வீடும் குழந்தைகளும்தான் உலகம். இந்த உலகத்திலேயே அம்மாவுக்கு நிறைய விஷயங்கள் இருந்தன. அம்மாவை இந்த ஊரில் விட்டு எல்லை போட்டு அடைத்து விட்டார்கள். பாட்டி அவளுடைய பாட்டி வளர்த்தது. சொன்னது சொல்லும் கிளி. அம்மா பாட்டி வளர்த்த கிளி. அவர்களுக்குக் கூண்டை விட்டு வெளியே வர பயம். வெளியில் எல்லைக்கப்பால் நிறைய விஷயங்கள் அவர்களை மிரட்டும்.

அம்மா என் தலையை வருடியபடியே கேட்டாள். "சரிய்யா எவ்ள சம்பளம் வாங்குவே..."

படிப்பகம்

www.padippakam.com

☐ 8

அம்மாவை சுற்றி இருந்த எல்லைகளில் எப்படியாவது பணம சமபாதிப்பவர்கள்தான் திறமைசாலிகள் என்பதும் ஒரு எல்லை.

"மூவாயிரத்து நூறு..."

"மய்யா...கண்ணு..." — அம்மா கொஞ்சினாள். "அதான் ராசா எல்லா முண்டைகளுக்கும் பொறாமை. எல்லாரும் ஏங்கூடப் பேச மாட்டேங்றாங்களே...எல்லாம் முடியாமத்தான் பேசாம இருக்காங்க...ஒனக்கு என்ன தெரியும் ... சின்னப் புள்ளயில பொறாமைன்னா என்னன்னு கேட்பியே...நமக்கு பேரம்மா தொணை... அந்த சீனிவாசன் ஏழுமலைவாசன் தொணை..."

கொஞ்சம் மௌனம். பின் கேட்டாள்.

"வீடு பார்க்கனும்னியே...பார்த்துட்டியா..."

"பார்த்துட்டு இருக்கேன்..கூடிய சீக்கிரம் ஒன்னையும் அப்பாவையும் கூட்டிட்டுப் போறேன்..."

இப்படி சொன்னதும் அம்மா என் தோளில் முத்தமிட்டாள். என் தோளில் கண்ணீர் சொட்டு சொட்டாக விழுந்தது.

"என்னம்மா...ஆச்சி..."

"ஒண்ணுமில்லே...எனக்கு இப்பத்தான் விடிவுகாலம் வந்துருக்கு..."—மீண்டும் அழுதாள்.

"மூக்கையா ஒன்னப் பார்க்க வந்தப்ப என்னை கூலி வேலைக்குப் போக வேண்டாம்னு சொன்னியாமே... அவன் வந்து எல்லாரும் இருக்குறப்பச் சொன்னான். ஒருத்தி ஒண்ணும் பேசலையே...எனக்கு எவ்ளோ சந்தோசப தெரியுமா?"

அபமா அமைதியானாள்.

www.padippakam.com



எனக்கு மனசு கனமானது. மனசுக்குள் பாறாங்கற்கள் உருண்டன. அம்மா அழுது வடித்த கண்ணீர் கற்கள் சிறு வயதில் மனதில் ஏந்திய பாறாங்கற்கள்.

அப்ப மொட்டைமச்சி வீடு. நாலாம் வகுப்பு படிக்கிறேன். குண்டியில் சிலந்தி வந்து கோவணம் கட்டி இருக்கிறேன். அண்ணன் ஆடுகளுக்கு குலை கட்டிக் கொண்டிருந்தான். ஆடுகள் கட்டியிருந்த இடமெல்லாம் இப்ப வெறுமையாய்ப் போயின. அந்த உரல் மட்டும் இன்னும் அப்படியே இருந்து காலம்காலமாய் நடப்புகளைப் பார்த்து வருகிறது. அடை மழையில் இரையின்றி கொடேர் என்று இருக்கும் ஆடுகள் மாதிரி நாங்கள். அம்மா அப்பா.

பாட்டி காலத்து அடுக்குப் பானைகளில் தானியம் இன்றி பழம்பெரும் இருட்டு மட்டும். கடகப் பெட்டியில் இருந்த கொஞ்சம் குதிரேவலியை அம்மா உரலில் குத்திக் கொண்டிருந்தாள். அப்பா முகத்தில் பெருஞ்சோகம். சொந்தக்காரர்கள் எல்லாம் தானியம் இல்லையென்று கை விரித்தார்கள். எல்லார்க்கும் அம்மா மனசு வருமா? கொல்லையில் படரும் பீர்க்கங் கொடியாய் அம்மா மனசு.

அம்மா குதிரேவலியைக் குத்திக் கொண்டிருந்த பொழுது மழை தூர ஆரம்பித்துவிட்டது. குதிரேவலி நனைந்து உலக்கையில் ஒட்டிக் கொண்டு தவிடு போக மாட்டேன் என்கிறது. அம்மா தூரலில் நின்று அப்பாவைப் பார்க்கும் போது கண்ணெல்லாம் நீர். உதடு துடிக்க எச்சில் முழுங்கும் போது கண்ணீர் துளிகள் கன்னம் வழியாக இறங்கியது. அந்த வழியாக வெளியே போன காரவீட்டுக் குருவம்மா இதைப் பார்த்து, “அடப்பாவி மகளே...ஏங்கிட்டச் சொல்ல வேண்டியது தானே...”—என்று சொல்லிவிட்டு இரண்டுபடி குதிய கம்பு கொடுத்தாள். தூரல் வலுத்து குருவம்மா வீட்டு

## 10

ஓடுகள் நனைந்து சொட்டு சொட்டாக வீட்டு முன்னால் வரிசையாக விழுந்தன.

மழை பெய்யும்போதெல்லாம் மொட்டைமச்சி ஒழுகும். மழை ஆரம்பமானவுடன் அப்பா கொங்காணி போட்டு, கூடை நிறைய மண் எடுத்து மேலேறி ஓட்டைகளை அடைத்துக் கொண்டிருப்பார். மழை ஓயும் வரை அப்பா மொட்டை மச்சி மேலே. பெருஞ் சோகங்களை உள்ளடக்கியது அம்மாவின் வாழ்க்கை.

அம்மா இரண்டு தடவை பெருஞ் சோகமெடுத்து அழுதிருக்கிறாள்.

நானும் அண்ணனும் வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கிறோம். சித்தி பையன் நாலு வெள்ளரிப் பிஞ்சுகளை கொண்டு வந்து கொடுத்தான். அவனுடைய சித்தப்பா வாங்கி வந்ததாகச் சொன்னான். அண்ணன் அதை வாங்கி அவனும் சாப்பிடாமல், எனக்கும் கொடுக்காமல், 'அம்மா வரட்டும்' என்று ஒரு பெட்டியில் போட்டு வைத்தான்.

அம்மா வேலையிலிருந்து வந்து தம்பிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தபோது நான்தான் கேட்டேன்.

"அம்மா...வெள்ளரிக்கா..."

"வெள்ளரிக்காவுக்கு நான் எங்கே போவேன்" என்று அம்மா பார்க்க, உடனே அண்ணன் எடுத்து வந்து ஆளுக்கொன்றாய்க் கொடுத்தான். அப்பொழுது சித்தி வந்துவிட்டாள். "என்ன...வெள்ளரிக்காயா... பையன்க சாப்டலையா...எங்க வீட்ல அந்த ஆளும் அவரு தம்பியும் "அந்தப் பையன்க தீனிக்கு அலையுறாங்க...அப்பவே பூஜை போட்டுருப்பாங்கன்னு சொன்னாங்க..."—

www.padippakam.com



என்றாள். அம்மாவுக்கு மனசு சங்கடமாகி கண்ணீர் வந்து அழுது அண்ணனை இழுத்து முத்தம் கொடுத்தாள்.

பிறகு ஒரு நாள் அம்மாவிற்கும், அப்பாவுக்கும் ஏதோ மனஸ்தாபமாகி அப்பா அம்மாவை வைதுவிட்டார். அன்று இரவு வரை சோகத்தை சுமந்து இரவு மூலையில் உட்கார்ந்து ஓவென்று சத்தம் போட் டுஅழுதாள். நாங்கள் படுத்துக்கொண் டிருந்தோம். அப்பா வெளியே கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். அம்மாவை யாரும் ஒன்றும் கேட்கவில்லை. நீண்ட நேரம் அழுது அவளாகவே ஓய்ந்து போனாள்.

எனக்கு இப்ப கண்ணெல்லாம் நீர். அம்மாதான் மெல்லக் கேட்டாள்.

"தூங்கலையா இன்னும்... தூங்குடா கண்ணா... நேரமாச்சுல்ல..."—என்றாள்.

படிப்பகம்

www.padippakam.com

# அண்ணனின் பனியன்

"கூச்சப்படக்கூடாது சம்பத்... நம்ம வீட்டுக் குள்ளேயே கூச்சப்பட்டா... வெளியே எப்படிப் பேசுவே... சாப்பாடு போடுக்கான்னு தைரியமாக் கேட்கணும்... இங்க நீ வந்து ஒரு வருஷம் ஆச்சு... சாப்பாடு போடவா...''

"போதும்கா..."

"ஆறாம் வகுப்புல வந்து சேர்ந்தே... நம்ம வீட்ல வசதி இல்லேன்னுதானே... இங்க வந்துப் படிக்கறோம்னு நினைக்காதே... நான்தான் நமக்கு தம்பி இல்லையேன்னு அப்பாகிட்டச் சொல்லிக் கூட்டியாரச் சொன்னேன்... ஏங்கூட வௌாடுறதுக்கு யாரு இருக்கா... அக்கா ஒம் மேலே எவ்வளவு பிரியமா இருக்கேன் தெரியுமா?''

"வைச்சது வைச்ச இடத்துல இருக்காதே..." பொன்ராஜ் அண்ணன் மச்சு வீட்டுக்குள்ளிருந்து அலுத்துக் கொண்டான். உடம்பு மாதிரி குரலும் கனமானது.

"என்னடா..."— என்று சலித்து திண்ணையிலிருந்து அம்மா கேட்டாள்.

"இங்க... பனியன் வைச்சேன்... இந்தக் கொடியில தான் போட்டேன்... காணோம்..."

படிப்பகம்

www.padippakam.com



"யாரு எடுப்பா... அங்கதான் இருக்கும். எங்க போகும்... நல்லா தேடு..."

சம்பத்துக்கு பக்கென்றது. சொல்லவா வேண்டாமா. என்று யோசித்தான். சொல்ல வெட்கமாகவும் இருந்தது பயமாக இருந்தது. முகமெல்லாம் வேர்வை. "சொன்னா எல்லாரும் சிரிப்பாங்களே..."

"குழம்பு வேணும்னா ஊத்திக்க..." என்று சொல்லி விட்டு அக்காவும் மச்சி வீட்டுக்குள் போய் தேடினாள்... இந்நேரம் பனியன் எதுக்குண்ணே..."

"வெள்ளன உழுகப் போகணும்னு இப்பவே தேடிட் டிருக்கேன்... சம்பத்... நீ பாத்தியாடா..."

"இல்லண்ணே... நான் பாக்கலை...

"யாருக்கும் தெரியாதே... சே... வீட்ல வச்சது வச்ச இடத்துல இருக்காதே..."

"ஏன் இப்படிக் கத்தறேண்ணே... வண்ணாத்தி வர்ற நேரம்... வெளுக்க போட்ருப்போம்... கேப்போம்..."

சம்பத் சாப்பிட்டு விட்டு வெளியே போக முயற்சித் தான்.

"டேய் சம்பத்...ராத்திரி சாப்பிட்டதும் வெள்ளாட்டா... உட்கார்ந்துபடி... அக்காவும் ஒங்கூடப் பேசிட்டே வேலையை முடிச்சுடுவேன்... அப்பா வந்ததும் சாப்பாடு போட்டுட்டு பாத்திரம் தேய்க்கணும்."

சம்பத்துக்கு இடுப்பெல்லாம் கூசியது. பனியனை நினைத்தவுடனே உடம்புக்கு பாரம் கூடியது. புத்தகம் எடுத்து உட்கார்ந்தான். மனம செல்லவில்லை. அப்பாவும் அண்ணனும் மனசில் தோன்றி பனியன் போட்டதுக்காக அவனை அடித்தார்கள். பயம் கவ்வியது.

www.padippakam.com

## 14

சம்பத்துக்கு ரொம்ப நாளாக பனியன் போட வேண்டும் என்று ஆசை. ஆனால் பனியன் இல்லை. இவனும் பனியன் வேண்டும் என்று கேட்கவில்லை. வீட்டிலும் எடுத்துத்தரவில்லை. அறிவியல் வாத்தியார் பாடம் நடத்தும் போதெல்லாம் அவருடைய சட்டையையும் நன்கு வெளியே தெரியும் பனியனையும்தான் பார்ப்பான். சட்டையில் ஒரு பித்தானைக் கழட்டிவிட்டு முக்கோணம் மாதிரி பனியன் தெரியப் போட்டிருப்பார். பின்னால் திரும்பினாலும் பனியன் அப்பட்டமாகத் தெரியும். சம்பத்துக்கு கவர்ச்சியாக இருக்கும்.

"கருத்த வாத்தியாருக்கே இவ்ளோ நல்லா இருந்தா நமக்கு எப்டி இருக்கும்..."— எண்ணிக் கொள்வான்.

அஞ்சாம் வகுப்பு படிக்கிற வரை பின்னால் கிழிந்த கால் சட்டையும் தொள தொள மேல்சட்டையும்தான் போட்டுப் போவான். அதுகூட ரெண்டு ஜோடிதான். எல்லாப் பையன்களும் "டேய் தாத்தா வாராண்டா"— என்று கேலி பண்ணுவார்கள். மற்றவர்களின் கேலிப் பேச்சு சம்பத்தை ஊமையாக்கியது. மனசில் சதா ஏக்கம். யாராவது நல்ல சட்டைப் போட்டுப் பார்த்தவுடனே ஏமாற்றம், இயலாமை, வருத்தம்.

இவனுடன் படிக்கும் வெங்கடேஸ்வரன் டாக்டருடைய பையன். சாயங்காலம் விளையாட பனியன் போட்டுத்தான் வருவான். அது சிங்கப்பூர் பனியனாம். அவனுக்கு ரொம்ப அழகாக இருக்கும். சம்பத்துக்கு தொட்டுப் பார்க்க வேண்டும் போல இருக்கும்.

"அய்யா கூலி வேலை செஞ்சு பனியனா வாங்கித் தரமுடியும்... அய்யாவே ரொம்ப நாளா சட்டை போடலை... ஏதோ பெரியம்மா பெரியப்பா இருக்கப் போயி படிக்கப் போடுறாங்க..."

படிப்பகம்

www.padippakam.com



பெரியம்மாவையும், பெரியப்பாவையும் அவன் அம்மா, அய்யா என்றுதான் கூப்பிடுவான். பெரியப்பா வீட்டில் மூன்று அண்ணன்களும் ஒரு அக்காவும். இரண்டு பேர் படித்து சாத்தூரிலும் மதுரையிலும் வேலையில் இருக்கிறார்கள். மூன்றாவது பொன்ராஜ் அண்ணன், நான்காவது அக்கா. அக்காமேல் இவனுக்கு கொள்ளைப் பிரியம். பிரியத்தை வெளிக்காட்டாமல் மனசுக்குள்ளேயே வைத்திருப்பான்.

"சம்பத் படிக்கிறியா..."— அக்கா கேட்டாள்.

"ம்..."

"பரீட்சை எப்படா... இன்னும் ஒரு மாசம் இருக்குமில்ல... ஆமா... நீ அண்ணன் பனியனைப் பாத்தியா..."

சம்பத் அக்காவை நிமிர்ந்து பார்த்தான். கொஞ்சம் யோசித்து "இல்லேக்கா"— என்றான். அக்கா பாத்திரம் தேய்த்துக் கொண்டே, "எங்க போயிரும் வண்ணாத்திசுப்பு வரட்டும்... கேட்போம்... நீ படி..."

"ஒண்ணுக்குப் போயிட்டு வந்துர்றேன்கா..."

சம்பத் வெளியே ஓடினான். சற்று தள்ளிப் போய் சட்டையைத் தூக்கி உடம்பைப் பார்த்தான். உடம்பு முழுவதும் தெரிந்தது. இரண்டு கயிறு மட்டும் புஜத்திலிருந்து தொங்க... முழங்கால் வரை வந்த பனியனை மடக்கி டவுசருக்குள் திணித்து வைத்திருந்தான். சம்பத்துக்கு அழுகையாய் வந்தது. என்ன செய்யலாம்?...

இன்னிக்குப் பாத்தா அண்ணன் பனியனைத் தேடணும்...

மெல்ல நடந்து வந்தான். மாட்டு வண்டியில் கொஞ்ச நேரம் உட்கார்ந்தான். இந்த வண்டியில்தான் சாத்தூரில் உள்ள அண்ணன் வந்தால் தன் நண்பர்களுடன் உட்காருவார். அவர் ஊருக்கு வந்தவுடனே பனியன்

www.padippakam.com



மட்டும்தான் போடுவார். சட்டையே போட மாட்டார். வெளியூர் போகும்போது மட்டும்தான் சட்டை போடுவார். சம்பத் திண்ணையில் உட்கார்ந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருப்பான். ஒவ்வொரு அங்கமாய் பார்த்து நாமும் இப்படி இருக்க வேண்டும் என்று எண்ணுவான், கற்பனை பண்ணுவான்.

உடனே உள்ளே போய் மச்சி வீட்டுக்குள் அண்ணன் சட்டையை எடுத்துப் போட்டுப் பார்ப்பான். தொளதொள வென்று இருக்கும. கழட்டிவிட்டுப் பனியன் எடுத்துப் போடுவான். முழங்காலிலிருந்து டவுசர் வரை மறைக்கும். உடம்பெல்லாம் தெரியும. ஏற்கெனவே சம்பத்துக்கு நோஞ்சான் உடம்பு. ஊரில்கூட இவனை குச்சிக் கருவாடு என்றுதான் அழைப்பார்கள்.

ஒண்ணுக்குப் போய் விட்டு வீட்டுக்கு வந்தான். வண்ணாத்தி சுப்பு சாப்பாட்டுக்காகக காத்திருந்தாள். அக்கா சாப்பாடு போட்டுவிட்டு, "சுப்பு... அண்ணனோட பனியனை வெள்ளாவி வைச்சுருக்கியா" என்றாள்.

"பனியனா...ரெண்டு வேட்டி, அம்மா சேலை, துண்டு நாலுதான் போட்டீங்க...பனியன் இல்லை தாயே..."

"இல்ல...இங்க காணோம்...அதான் ஓங்கிட்டப் போட்டோமோ...என்னமோன்னு..."

"பனியன் போடலேம்மா..."

"எதுக்கும் வீட்ல பாரு சுப்பு..."

சம்பத் புத்தகத்துப் பக்கத்தில் உட்கார்ந்தான் சம்பத்துக்கு ஒரே யோசனை, "காலைல சீக்கரம் எந்திரிச்சு கழட்டிப் போடு...மூட்டைக்குக் கீழே இருந்துச்சுன்னு சொல்லிரனும்"—என்று எண்ணினான்.

www.padippakam.com



“இங்க போட்ட பனியன் எங்க போகும்...அண்ணன் எங்கயாச்சும் குளிக்கிற இடத்துல போட்டுருக்கும். மறந்து போயி...நம்மளப் போயி தொந்தரவு பண்ணிட்டு...’ என்று சொல்லிக் கொண்டே திண்ணையைக் கூட்டி படுக்கையை விரித்தாள். அங்குதான் அம்மா, அக்கா, சம்பத் படுத்துக் கொள்வார்கள். அண்ணன் பொன்ராஜ் கொஞ்ச நேரம் கழிச்சு வந்து விரிப்பானை எடுத்துப்போய் தொழுவத்தில் படுத்துக்கொள்வான்.

“சம்பத் படிக்கப் போறியா...படுக்கப் போறியா...”

“படுக்கப் போறேன்கா.:”—மெதுவாகச் சொன்னான்.

“ஏண்டா...ஒரு மாதிரியா இருக்கே...தலைகிலை வலிக்குதாடா...”

“இல்லியே...”—வேகமாகச் சொன்னான். அக்கா வந்து கழுத்தில் கை வைத்துப் பார்த்தாள், காய்ச்சலடிக் கிறதா என்று, சம்பத் மனசு பக்பக் என அடித்துக் கொண்டது.

“ஏண்டா...இப்படிப் பயந்து நடுங்குற...நான் உன் அக்காடா...”

அப்பொழுது பொன்ராஜ் அண்ணன் வந்தான்.

“என்ன ... பனியன் கேட்டியா ... சுப்பு என்ன சொன்னா...”

“வெளுக்கப் போடலியாம்...எதுக்கும் பாத்து காலைல சொல்றேன்னு சொன்னா...”

சம்பத் படுத்துக் கொண்டான். தன்னையே நொந்து கொண்டான். “இவ்ள பெரிய பனியனை யாராச்சும்



படிப்பகம்

www.padippakam.com



போடுவாங்களா...'' பனியன் போட்டவர்கள் அறிவியல் வாத்தியார் உட்பட ஒவ்வொருவராக மனதில் வந்தார்கள். சமபத பலவிதமாக எண்ணிக கொண்டு தூங்குவதுபோல கண்ணை மூடிக்கொண்டிருந்தான்.

''சம்பத் ... சம்பத்... என்னடா தூங்கிட்டியா...இந்த அம்மாவைக் காணோமே... பக்கத்து வீட்ல அரட்டை அடிச்சுட்டு இருப்பா...''—என்று சொல்லிக் கொண்டே அக்கா படுத்துக் கொண்டாள். அவள் பக்கத்தில் படுத்தது காதுவழி மனசில் தெரியும். அக்கா தன்னையேப் பார்ப்பதாக எண்ணி கண்ணை அசையாமல் வைத்திருந்தான்.

அவளுக்கு ஒரே புழுக்கமாக இருந்தது. சம்பத்தைப் பார்த்தாள்... ''இந்தப் புழுக்கத்துல எப்ட்றா சட்டை போட்டுத் தூங்றே...'' அக்கா எழுந்து அவன் சட்டையை கழட்ட ஆரம்பித்தாள். அவன் தூங்குவது போல கைகளை இறுக்கிக் கொண்டான். கழட்டிப் பார்த்தால் அவளுக்கு ஒரே ஆச்சர்யம். பூணூல் மாதிரி இரண்டு தோள்களிலும் இரண்டு பனியன் கயிறு. சுருட்டி வைத்திருந்த பனியனை வெளியே எடுத்தாள். அவனுக்கு முழங்கால் வரை வந்தது.

அக்காவுக்கு சிரிப்புத் தாங்க முடியவில்லை. சம்பத் எழுந்து கொண்டான். அக்கா விழுந்து விழுந்து சிரித்தாள். சம்பத்தை பனியனை பிடித்து இழுத்துங் கேலி பண்ணினாள்.

''அடே ... படவா ... திருட்டுப் பயலே ... கல்லுளி மங்கா...''

சம்பத் ஓவென்று அழ ஆரம்பித்து விட்டான். விக்கி விக்கி அழுதான்.

www.padippakam.com



"டேய்...டேய்... அழுகாதே...சத்தம் போடாதே...டா அம்மா வந்துடுவா...கழட்டு, கழட்டு...சீக்கிரம் கழட்டு... யாருக்கும் தெரியாம வைச்சுடுவோம்..."

சம்பத் விசும்பி விசும்பி அழுதுகொண்டே கழட்டிக் கொடுத்தான். போர்வையால் முகத்தை மூடி வெட்கப்பட்டு அழுது கொண்டிருந்தான். அக்காவுக்கு சிரிப்புத் தாங்க முடியவில்லை. அவன் முகத்தை மூடிக் கொண்டிருந்த போர்வையைப் பிடித்து இழுத்தாள். அவன் பலமாகப் பிடித்துக் கொண்டிருந்தான்.

"டேய் சம்பத்...அழுகாதே...நாளைக்கு அப்பாகிட்டச் சொல்லி ஒனக்கு ஒரு பனியன் வாங்கித் தரச் சொல்றேன்...என்ன..."—என்று மீண்டும் போர்வையை இழுத்துப் பார்த்தாள். முகத்தை மூடிக்கொண்டு சிரித்துக் கொண்டே அழுதான். அக்காவுக்கு சிரிப்பு அடங்கவே இல்லை.

www.padippakam.com

# மதிப்பு

அந்த வீடு கொஞ்சம் சுறுசுறுப்பாய் இருந்தது. அந்த வீட்டினுள்ளே சந்தோஷம் விளையாடியது. கூடவே கொஞ்சம் அச்சமும் இருந்தது. அம்மா மனசில் ரொம்ப பயம். சீர் செனத்தி அதிகம் கேட்டா போட முடியாதே என்ற பயம். அதிகாரத் தோரணையில் பெரிய வீட்டு அம்மா இருபது வருஷங்களாக அந்தத் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறாள். நினைக்கவே அம்மாவுக்குப் பீதி.

அப்பா அம்மா இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த சாந்தா பெண்பார்க்க வருகிறார்கள் என்றதிலிருந்து ரொம்ப அமைதியானாள். பழைய சுறுசுறுப்பு மனசில் ஒடுங்கி முகத்தை மாலை நேர மல்லிகையாக்கியது. வீட்டுக்கு வெளியே வெளி வெட்கத்தை வைத்துக் கொண்டு அலைந்தது. சாந்தா வெளியே வந்தால் கபக்கென்று அமுக்கிக் கொள்ளும். சாந்தா வீட்டுக்குள்ளேயே இருந்தாள். நாலு சுவத்துக் குள்ளே இருந்த வெளி, சாமான்கள் வெட்கத்தை உதுத்துக் கம்மென்றிருந்தன.

இந்தக் கிராமம் சாந்தாவுக்கு கிராமத்துக்கேயான ஒரு தோற்றம் கொடுத்திருந்தது. காடும் வெயிலும் சாந்தாவுக்குக் கொடுத்தது கொஞ்சம் முரட்டுத்தனம்.

படிப்பகம்

www.padippakam.com



களையெடுக்க காடெல்லாம் அலைச்சல். உளுந்து பூவும் பிஞ்சுமாய் ஈரம் பாய்ந்த மண்ணும், வெயிலும் சாந்தாவின் நிறத்தைக் குறைத்தது. இருந்தும் அவள் அழகாக இருந்தாள்.

சூட்டு போட்டக் கால்கள் சாந்தாவையும் சாந்தா மாதிரிப் பெண்களையும் மயக்கியது. வேட்டி வாட்ட சாட்டமாயிருந்தும் இவர்களிடம் எடுபடவில்லை. பலராமன் ஒவ்வொரு தடவையும் சூட்டு போட்டுக் கொண்டு மூன்றரை பஸ் விட்டு இறங்கும் போது சாந்தா கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தாள்.

கிராமத்தில் செடிகளும், வெளியும் பூவும் பிஞ்சுமான முருங்கை மரமும் வெட்கத்தை நிறைய வைத்திருந்தன. அதனால் சாந்தாவுக்கும், பலராமனுக்கும் இடைவெளி அதிகம். அவன் எவ்வளவு முயன்றும் அதை குறைக்க முடியவில்லை.

ஒரு இரவு அம்மாவும், அப்பாவும் குசுகுசுத்தார்கள் கிட்ணம்மா சொன்னதாக அம்மா அப்பாவிடம் சொன்னாள்.

"அந்தப் பையனுக்கு நம்ம பொண்ணைப் பிடிச்சுப் போச்சாம். இவளைத்தான் கட்டுவேன்கிறானாம்".

"ம்..."—அப்பா கேட்டுக் கொண்டிருந்தார்.

"அதான்...சீனி அண்ணாச்சி கிட்ணம்மா கிட்டச் சொல்லி கேட்டுப்பார்க்கச் சொல்லியிருக்கார்..."

"பெரியவூட்டுக்காரங்க நம்ம பொண்ணைக் கேட்குறது நமக்குப் பெருமைதான்...அவங்க நம்ம தரத்துக்கு தக்கமாதிரி நகை நட்டு கேட்டா நல்லாருக்கும்..."

www.padippakam.com

□ 22

"அதான்...நான் ஒங்ககிட்டக் கேட்டுச் சொல்றேன்றுக்கேன்...நமக்கு இவ கடைசிப் பொண்ணு... உள்ளூர்லயே முடிச்சா நமக்கு நல்லது...கூடக் குறைச்சுக் கேட்டாலும் வித்துப் போட்டுரலாமான்னு..."

"ம்...அப்ப சரின்னு சொல்லு..."

இன்று கல்யாணம் பேசி முடிக்க வருகிறார்கள். களையெடுக்கும் பெண்கள் சாந்தாவை விட்டுவிட்டு மேலக்காட்டுக்கு களையெடுக்கப் போனார்கள். சாந்தாவுக்குக் கல்யாணம் என்று கேலியும் சிரிப்புமாக களையெடுக்கிறார்கள். சாந்தா மேலே அவர்களுக்குப் பிரியம் ஜாஸ்தி. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ரொம்ப ஜாஸ்தி.

மதிப்பு பிடித்துக் களையெடுக்கும் பெண்களுக்கு சாந்தாதான் தலைவி. இவர்கள் களை எடுத்தால் காடு சுத்தமாக இருக்கும். களையை மண்ணை வைச்சு மூடிப்போட்டுப் போகத் தெரியாது.

களையெடுக்க மதிப்பு பிடிப்பதில் சாந்தா கெட்டிக்காரி. லாவகமாகப் பேசி லாபத்துக்கே முடித்து விடுவாள். குறைந்த நேரத்தில் நிறைந்த கூலி. களைகள் மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகும்.

மதிப்பு பிடிக்குமுன்னால் சாந்தா காட்டைப் பார்த்து வருவாள். காட்டில் உள்ள களைகள் அவளோடு பேசும். அந்தப் பேச்சு இத்தனை ஆள் தேவை என்று சொல்லும். அதைவிடக் கூட்டிக் கேட்பதுதான் சாந்தாவின் சாமர்த்தியம். காட்டுக்காரரின் சாமர்த்தியம் சாந்தாவின் பேச்சுக்கும் களையெடுக்கும் நேர்மைக்கும் அடிபணியும். பின் களையெடுத்துக் கூலி வாங்கி பங்கு போட்டுக் கொள்வார்கள்.

முந்தாநாள்தான் பெரியவீட்டு அம்மா சாந்தாவை காட்டில் களையெடுக்கச் சொல்லியிருந்தாள். சாந்தாவை

www.padippakam.com



அவள் கூப்பிட்டு விட்டிருந்தாள். சாந்தா போனதும் நன்கு வரவேற்றுக் கேலி பண்ணினாள்.

“மருமகளுக்கு மதிப்பு கூடிப் போச்சு...”

“போங்கத்தே...கேலி பண்ணிக்கிட்டு...”

“என்னத்தைக் கேலி பண்ணிட்டோம் மருமகளே... எங்க வடகாட்டைப் போய் பாத்தியா...அதைக் களையெடுத்துக் குடுத்துடனுமே...”

“நேத்து அதுக்குப் பக்கத்துலதானக் களை யெடுத்தோம். களை ரொம்ப இருக்கத்தே...கீரை என்ன அப்படி முளைச்சிருக்கு...”

“குருசாமிக்கு எடுத்தீங்கல்ல...அதை விடவா அதிகம்? சரி... சரி எத்தனை ஆளுக்குச் சொல்றே?”

சாந்தா யோசித்தாள்—பின்னர், “நீங்க சொன்னா... நான் கேட்டுக்குறேனே...” என்றாள்.

“நான் சொல்லவா...”— சிறிது யோசித்துவிட்டு, “நாப்பது ஆளு போட்டுக்கோ...”— என்றாள் பெரிய வீட்டு அம்மா.

“அப்பப்பா... நாப்பது ஆளு... நாப்பது ஆளு வைச்சு நீங்களே எடுத்துக்குங்க... எழுபது ஆளுகூடக் கட்டுபடி யாகாதுங்றாங்க...”— சாந்தா சொன்னாள்.

பின் நீண்ட பேச்சு இருவரின் வாதத் திறமையையும் காட்டியது. பின் அறுபது ஆள் தேவை என்று பேசி முடித்தாள் சாந்தா...பெரிய வீட்டு அம்மா முணு முணுத்துச் சொன்னாள், “துப்புரவா எடுப்பாங்கன்னு இவளைப் பிடிச்சா...உச்சி மரத்துல நிக்கிறாளே... அம்மாடியோவ்... பொல்லாதவ...”

## 24

அம்மாவின் நடையிலும் அன்றைய சுறுசுறுப்பிலும் உள்ளூரில் பெண் கொடுக்கப் போகும் சந்தோஷம் இருந்தது.

"ஏங்க... அந்த ராமசாமியைக் காட்டுக்கு அனுப்பிட்டு நீங்க இருங்க... இப்ப அவங்க வந்துருவாங்க."

"சரி... சரி... கத்தாதே... வெத்தலை போட்டுட்டுப் போயிட்டு வாரேன்..."

"ஏண்டி... சாந்தா... வந்து சாப்புடு... அவங்க வர்ற நேரம் சந்தோஷமா அடக்கமா இருக்கணும்... வாயைத் தொறக்காதே..."

சாந்தா அடுப்பறையில் நுழைந்தாள். அம்மா அப்பா அருகில் அமர்ந்து கொண்டாள்.

"கொண்டாங்க... நான் வெத்தலையை மடக்கித் தாரேன்... என்னங்க... அவங்க கூடக் குறையக் கேட்டாலும் நீங்க கோவத்துல முடியாதுன்னு சொல்லிடாதீங்க... காடுகரையை வித்தாவது போட்டுருவோம்... உள்ளூர்னா நமக்குக் கடைசிக் காலத்துல வசதி..."

"ம்.. நானும் அப்படித்தான் நெனைச்சேன்... நமக்கு தெரிஞ்சு நல்ல பையன்... அன்னியத்துல யாரை நம்ப முடியுது..."

உள்ளூர்க்குள்ளேயே பெண் எடுப்பதால் பெண் பார்க்கும் படலம் எல்லாம் நடப்பதில்லை. மாப்பிள்ளை யின் அப்பா, அம்மா, கூட இரண்டு பெரிய மனிதர்கள் வந்து பேசுவதைப் பேசிவிட்டு... பிறகுதான் நிச்சய தார்த்தம், இத்யாதிச் சடங்குகள்.

வெற்றிலையை மடக்கிக் கொண்டிருந்த சின்னச்சாமி, "வாங்க... வாங்க..."— என்று சந்தோஷமாகக் கூவினார். அதைக் கேட்ட பார்வதி அடுப்பறையிலிருந்து கையை

www.padippakam.com



சேலையில் துடைத்துக் கொண்டே ஓடி வந்தாள். "வாங்க... வாங்க உட்காருங்க..."— எனக் கூறிக் கொண்டே பாயை விரித்தாள். பெரிய வீட்டு சீனி நாய்க்கர், அவரது மனைவி, மற்ற இருவரும் பாயில் அமர்ந்தனர்.

சீனி நாய்க்கர் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே, "சாந்தாவைக் காணோம்"— என்றார்.

"சாப்புடறா..."— அம்மா சொன்னாள்.

"சாப்புடட்டும்... சாப்புடட்டும்... என்னதான் மை வச்சிருக்காளோ இந்தப் பொண்ணு... பையன் கட்டுனா இவளைத்தான்ங்றான்..."

சாந்தா அடுப்பறையில் வெட்கப்பட்டு ஒரு கையால் முகத்தை மூடிக் கொண்டாள். சாப்பாடு இறங்கவில்லை. சாதத்தை பிசைந்து கொண்டே இருந்தாள்.

"இந்தக் காலத்துப் புள்ளைங்கள சொல்ல முடியாதுங்க...நம்ம காலத்துல பெரியவங்க சொன்னா மறுபேச்சு கிடையாது... இப்ப அதெல்லாம் மலைஏறிப் போச்சு..."— வெற்றிலையை மென்று கொண்டே ஒருவர் சொன்னார்.

"ஒரே பையன் பாருங்க... அதான் அவன் மனசு மாதிரியே முடிச்சுடுவோம்னு இருக்கோம்..."

"அதுசரிதான்க... உங்களுக்கு கூளிபட்டி சங்கதி தெரியுமா..."

எல்லாரும் என்னவென்று அவர் முகத்தையே பார்த்தார்கள்.

"நம்ம கொத்தமல்லி லிங்கையா மகன் பொன்ராஜுன்னு மில்லுல வேலை செஞ்சுட்டிருந்தான்ல.. அவன் முந்தாநாத்து கூட வேலை பாக்குற பொண்ணோட

www.padippakam.com



வந்து நிக்றான்... அவங்க அம்மா குய்யோ முறை யோன்னுக் கத்தறா... என்ன கத்தி என்ன செய்ய... முடிஞ்சது முடிஞ்சு போச்சு..."

"அவ நம்மாளுகதான... வேற சாதியா..."

"நம்ம சாதிதான்... அதான் ஒண்ணும் சொல்ல முடியல..."

"இங்க பொண்ணுக்கு சம்மதம்தானே"— என்று கேட்டவுடன் கதவிடுக்கில் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த சாந்தா சட்டென்று உள்ளே மறைந்தாள்.

"பொண்ணுக்கு நாங்க சொன்னதுதான் வேதம்..."

சீனி நாய்க்கர் சொன்னார்: "அப்ப... லட்சுமி... நீ பேச வேண்டியதை பேசிக்கோ... நல்ல நாளாப் பார்த்து நிச்சயம் பண்ணிக்குவோம்..."

பெரிய வீட்டு அம்மா பேச ஆரம்பித்தாள். "சீரு நாங்க அதிகம் கேட்க நினைக்கல... பக்கத்துல விதவிதமா பேசக கூடாது பாருங்க... பையனும் காலேஜ் வரைக்கும் போய்ட்டு வந்துருக்கான்... ஒரு பீடி செகரட் கிடையாது..."

"அதையெல்லாம் நீ ஏன் நொனநொனக்குற... நம்ம சின்னச்சாமிக்கு பலராமனைத் தெரியாதா..."

"சொல்லட்டும்... சொல்லட்டும்..."

"அதனால... ஒரு இருபத்தைஞ்சு பவுனு போட்டுடுங்க. அப்புறம் ஒரு அய்யாய்ரம் ரொக்கம்..."

அம்மாவின் சிரித்த வாய் மௌனித்தது. லட்சுமி அம்மாளை கெஞ்சும் பார்வை பார்த்தாள்.

மதனிக்கு எங்க நிலைமை தெரியாததுல்ல... கொஞ்சம் குறைச்சீங்கன்னா..."— அம்மா இழுத்தாள்.

www.padippakam.com



அப்பா சொன்னார்: "இவ கடைசிப் பொண்ணு... நாங்க இவளுக்குச் செய்யாம யாருக்குச் செய்யப் போறோம்... ஒரு பதினைஞ்சு பவுனும் பத்தாயிரமுமா நாங்க நெனச்சோம்..."

"நாங்க எதுக்குக் கேட்குறோம்னா... எங்க சொந்தக் காரங்கல்லாம் எங்களை மட்டமா நினைச்சுடக் கூடாது பாருங்க... மீசலூர்ப் பொண்ணுக்கு முப்பது பவுனும் பத்தாயிரம் தர்ரேன்னாங்க... பையன்தான் இங்க மனசு வைச்சுட்டானே..."

"சின்னச்சாமி... நீங்க போடலாம்... நல்லா யோசிச்சு... நாளைக்கு சொல்லுங்க முடிவ... பொறகு நிச்சயம் பண்ணிக்குவோம்..."— என்றார் கூட வந்த ஒருவர்.

"அப்ப நாங்க கிளம்புறோம்... அம்மா சாந்தா... என்ன ஆளையேக் காணோம்... நாங்க போய்ட்டு வாரோம்..."— எல்லோரும் கிளம்பினார்கள்.

அம்மாவும் அப்பாவும் கணக்குப் பார்த்தார்கள். மோதிரம், கம்மலு எல்லாம் சேர்த்து பதினேழு பவுன் இருக்கு என்றார்கள், மல்லி அளந்ததுல செலவு போக மூவாயிரமும் பசுமாடு வித்ததுல ஆயிரத்து ஐநூறும் இருக்கு என்றார்கள். பின் என்ன வழிகள் இருக்கிறதோ எல்லாத்தையும் யோசித்தார்கள். ஒன்றும் அடைபட வில்லை. கடைசியில் மேலக்காடு பத்து ஏக்கரை விக்கலாம் என்று முடிவு பண்ணினார்கள். காடு ரொம்ப தூரம் என்று சமாதானம் பண்ணிக் கொண்டார்கள். முப்பதாயிரத்துக்கு விக்கலாம் என்றார் அப்பா.

"காடு வாங்குறதுன்னா... சலுக்குவார்பட்டி காளிமுத்துத் தேவர்தான் வாங்குவான். வட்டிக்காசு... அவனைப் பார்த்துப் பேசணும்..."— அப்பா...

www.padippakam.com



"நல்ல சக்கரை... வெலய குறைச்சுடாதீங்க... பணத்தை உடனே வாங்கிடுங்க..."

"சரி... சரி... நான் மந்தப் பிஞ்சை வரைக்கும் போய்ட்டு வாரேன்..."

"சரி... போயிட்டுவாங்க... அம்மா சாந்தா... ரெண்டு குடம் தண்ணி எடுத்து வந்துரு... நான் மாவரைக்கிறேன்.',

"அது என்னம்மா கணக்கு இருபத்தைஞ்சு பவுனும் ஐயாயிரம்னு... மாட்டையா விலைக்கு வாங்றோம்..."

"நாயே... நாயே அதிகப் பிரசங்கித்தனமா பேசாதே... போ... போ... தண்ணி கொண்டா..."

"இப்ப நான் என்னம்மா பேசிட்டேன்— எப்பிடி இந்த நகையும் பணமும் ஒவ்வொரு ஆளுக்கும் கேட்கு றாங்கன்னுக் கேட்டேன். இது தப்பா?"

"தப்புத்தான்..."

"ஆமா... தப்பு?... காலேஜ்ல பெயிலானவருக்கு இருபத்தைஞ்சு பவுன்னா... என்னமோ படிச்சுட்டு பேங்ல வேலைபாக்குறாரே செங்கையா அண்ணன்... அவருக்கு நூறு பவுன்னுல்ல கேட்பாங்க... எப்படி இந்த ஆம்பளைங் களை மதிக்கிறதுன்னு தெரியலையே... அதான் கேட்டேன்..."

"சீ... அதிகப்பிரசங்கி... பேசாம மாவாட்டு... இல்ல தண்ணி எடு... எது செய்யறே... இப்ப..."

சாந்தா குடங்களுடன் கிணற்றுக்குக் கிளம்பினாள். அம்மா சிரித்துக் கொண்டாள்.

www.padippakam.com

# அழிந்த கோடுகள்...

கம்மாக்கரை மேலே இருக்குற நாலு புளிய மரங்களும் சங்கு நாடாரின் பேரைத் தாங்கிக் காலங்காலமாய் நிக்கும். ஊரின் வாழ்க்கையை வெட்ட வெளியோடு பேசும். அந்த மரங்களுக்கு இன்னிக்கு இனந் தெரியாத சோகம். அதை ஒவ்வொரு இலையும் காட்டிக்கொண்டிருந்தது. கரைக்குக் கீழே ஒரு வண்டிப்பாதை. வண்டிப் பாதைக்கு அடுத்து வெறும் சீமைக் கருவேல மரங்கள். அது பெருகி ஊர் ஜனங்களை மிரட்டும். கண்மாய்க்குள்ளே ரெண்டு கிணறுங்க ஜனங்களின் பல ஜாதிகளை சொல்லிக் கொண்டிருந்துச்சு. ஒரு கிணறு ஒரு வமிசம் மாதிரியே தீண்டத் தகாததாய்ச் சோகப்பட்டுக் கிடக்கு. அந்த வமிசத்தோட குணங்கள் முந்தி நிறைய ஊறி, இப்ப வத்திக் கொண்டிருக்கு. மேல் ஜாதிக் கிணத்துப் பாதைக்குப் பக்கத்துல ஒரு பிள்ளையார் கோயில். டவுண் பஸ் கோயிலுக்கு முன்னாலதான் நிக்கும். கருப்பான எண்ணெய் அழுக்குக்குள்ளே இருந்த பிள்ளையாருக்கு பஸ் தெரியாது. அந்த அழுக்கு நிறைய வருசங்களை தின்னு செமிச்சிருச்சு.

☐ 30

இன்னிக்கு எட்ரை பஸ் வரக் காணோம். பஸ்சை எதிர்பார்த்து ஒரு கூட்டம் உட்கார்ந்துருக்கு' பஸ் எல்லார் மனசிலும் புகுந்து—ஆடி ஆடி வருகிறது. டிரைவர் முன்னாடி உட்கார்ந்து பஸ்சை ஒடிச்சுத் திருப்புகிறார்—பேச முடியாமல் செய்தது. எல்லார் முகத்திலும் எதிர்பார்ப்புக் குறி.

சில கிழடுகள் செம்மறி ஆட்டுப் பார்வை பார்த்து, குத்துக்காலிட்டு புளியமரத்தடியில் உட்கார்ந்து ரோட்டையே வெறிச்சுப் பார்த்தாங்க. ரோட்டுக்கு மேலே காற்று வீசியது. அதனுடன் சேர்ந்து பஸ்சில் நிழலும் ஆடியது. வெள்ளையாபுரத்துக்கு அங்குட்டு பஸ்சின் சத்தம் பிரமையாய் வந்து காற்றில் கலந்து போச்சு. ஓடிப்பிடிச்சு வெளையாண்ட சின்னப் பசங்க கோயில் மேலேறி அமைதியானாங்க.

“எதுக்கு பஸ் வல்ல”

தண்ணி டாங்கிக்கு கீழே சமுசாரி வீட்டுப் பொம்பளைங்க கூடி குசுகுசுத்தாங்க. பஸ்சுக்கு ஏதோ என்னமோ என்ற குசுகுசுப்பு. எட்ரை பஸ் வர்ர நேரம்தான் காட்டுக்குப் போற நேரம். பஸ்சைப் பாத்துட்டுக் காட்டுக்குப் போகலாமுன்னா பஸ்சைக் காணோம். ரெண்டு குமருங்க கிணத்துல நீர் இறைச்சுட்டு இருந்தாங்க. கண்டக்டரையோ, டிரைவரையோ யாரையோ பார்க்க வந்திருக்கும். ஒரு பெண் வாளியைப் பாதிக் கிணத்துல வுட்டுட்டு ரோட்டையே பார்த் துட்டிருந்தா. வாளி கிணற்றின் பாதியில் அவள் மனசு மாதிரியே ஆடியது. முழங்கால் அளவு தண்ணியில் நின்று ஈர மணலை எடுத்து பல் தேய்க்கிறவங்க தேய்ச்சுக்கிட்டே பஸ் வரும் திக்கையே வெறிச்சுப் பார்த்தாங்க ... ஆலமர ஊஞ்சலில் வெறியோடு ஊஞ்சலாடிய சிறுவன் நின்னு ரோட்டையும், ரோட்டில் பஸ் வர்ற நேர்த்தியையும் மனசுல நினைச்சுக் கேட்டான்.

www.padippakam.com



"ஏன் பஸ் வல்ல?"

... ... ...

அந்த கிராமத்துக்கும் பஸ்சுக்கும் மூன்று மாச சினேகம். காலங்காலமாக ஜனங்க காடே மனசாக வாழ்ந்தாங்க. இந்த ஊருக்கு கோடு போடாத ஒரு எல்லை இருந்தது. சரித்திர சாதனைகள் அநத எல்லையில் வந்து நிக்கும். காலமான காலத்துல வெளி உலக சாதனைங்க ஊருக்குள்ள வம்படியா வந்து நுழைஞ்சுச்சு. அதனால சில பேர் கவர்ச்சியான பொழைப்பு பொழைச்சாங்க. ரெட்டியா பட்டியின் நிறமே மாறிப் போச்சு. அது ரோட்டுமேல இருக்கு. இந்த ஊர் அனாந்தரமான காட்டில் இருக்கு. பையன்க அஞ்சுமைல் நடந்து ரெட்டியாபட்டியில போய் படிச்சாங்க...நடப்பது கஷ்டமான கஷ்டம. சுப்பிரமணிய நாடார் ஒரு மூடை நிறைய சாமான் வாங்கி ரெட்டியாபட்டியிலிருந்து இறக்காமல் கொண்டு வருவார். வேர்வை உடமபில் வழிந்து அவரோட திறமையைக் கதைகதையாய்ச் சொல்லும்.

ஊர் ஜனங்களுக்கு ரோடும், பஸ் வசதியும் கட்டாயம் தேவை என்று பட்டுச்சு. படிச்ச பையன் சொன்னான் அது நமது உரிமைன்னு. தாசில்தார் ஆபீஸ் முன்னாடி ரெண்டு நாள் உண்ணா விரதம். அக்கையா நாயக்கர் கெக்கலிகட்டிச் சிரிச்சுக் கேலி பண்ணாரு. "கோட்டிப் பசங்க...சாப்பிடாம இருந்தா பஸ் வருமா..."

அக்கையா நாயக்கர் வாயடைக்க மறுவாரமே ரோடு போட்டாங்க. நம்மவரின் மானம் கத்தியில்தான் போல மற்ற எல்லாத்திலும் நம்மோட மானம் ஒரு அடைபடாத கோணல். அதனால்தான் ரோட்டின் குறுக்கே இருக்குற ஓடையில பாலம் கட்ட அதை மறுமாசமே தண்ணீர் அடிச்சுட்டுப் போச்சு.

www.padippakam.com



ஜனங்களுக்கு அரசாங்க வேலை ஒரு புரியாத வில்லங்கம். பிறகும் அதே ஆளா காண்ட்ராக்ட் எடுத்து, பாலம் கட்டி முடிச்சு, அடுத்த மழையில உட்காந்து போச்சு. ஜனங்க நம் பாரம்பர்யத்தை மெச்சிக்கிட்டாங்க.

“கெட்டிக்காரன்...பாலத்துல சம்பாதிச்சுட்டானே...’

பொறகும் இன்னொரு ஆள் காண்ட் ராக்ட் எடுத்துக் கட்டி முடிச்சார். அப்புறமும் பஸ் ஒரு கனவாக இருந்துச்சு...

பொறகு அக்கையா நாயக்கர் கூட கலந்துக்குற மாதிரியா ஒரு உண்ணாவிரதம் சாகுறவரைக்கும். நாலைஞ்சு கிராமமே உண்ணாவிரதப் பந்தலுக்குள்ளே... என்ன மாயமோ மந்திரமோ அருப்புக் கோட்டை பஸ் முதலாளியின் கார் வந்து நின்னுச்சு...கார் பேசிச்சு.

“ஒவ்வொரு ஊருக்கு ஒரு ஆள்னு ஒரு அஞ்சு பேரை முதலாளி கூப்ட்றாரு...”

முதலாளியைப் பாத்துப் பேசிய பேச்சு, மண் ரோட்டில இருந்த குழிகளை செம்மண் போட்டு நிரப்பியாச்சு. அடுத்த நாள் பஸ் வந்துச்சு...

ஊர்க் கூட்டமே பிள்ளையார் கோயில்ல பஸ்சைப் பார்க்க...வெள்ளை பஸ்க என்றார்கள். “நம்மூரு பேரு கூடப் போட்ருக்காங்களே...”ன்னாங்க. சின்னப் பசங்க டவுசரைப் பிடிச்சுக்குட்டு ட்ரூன்னு ஓடி வந்தாங்க, பஸ்சை ஈயாய் மொய்ச்சாங்க...அக்கையா நாயக்கர் பசங்களை அடிச்சு விரட்டினார்.

“டேய் கோட்டிப்பசங்களா...இது பஸ்டா...தள்ளிப் போங்கடா...”

பசங்க பஸ் மாதிரியே உறுமினாங்க...பஸ்சைத் தொட்டுப் பாத்தாங்க...ஏறிப்பார்த்து சந்தோஷப்பட்டு

www.padippakam.com



இறங்கிக்கிட்டாங்க...ஒரு சோலியும் இல்லாம நாலைஞ்சு பேரு அருப்புக்கோட்டை வரை போய்ட்டு வந்தாங்க...

அந்த ஊரின் கோடு போடாத எல்லை அழிஞ்சது. தினம் மூணு தடவை ஊர், பஸ்சைப் பார்த்தது. எட்ரை, மூன்ரை, பத்தரைன்னு, ஒவ்வொரு தடவையும் பஸ் வர்றதுக்கு முன்னாடியே பஸ்சின் சத்தம் ஊர் வரும... சின்னவன்க அடி பஸ்...பஸ்சுன்னு கீக்கீ...ன்னு பிள்ளையார் கோயில் வந்தாங்க...பஸ் நிக்கும் இடத்துக்கு நேர் எதிரே மேட்ல, பொம்பளைங்க நின்னு யாரு பஸ்ல வர்ராங்க...யார் பஸ்ல போறாங்கன்னு பார்ப்பாங்க...

"கண்ணம்மா எங்கே போறாளோ?"

"ம்... அவ போறதுக்கென்ன...ரெண்டு மகன்க மில்லுல இருக்குறப்ப போகாம என்ன..."

"செவனி பஸ்ல போற மாதிரி இருக்கு...அது கூட் பஸ்ல ஏறிடுச்சு..."

இப்படி ஒரு மாசத்துக்குள்ள டிரைவர் கண்டக்டர் ஊருக்கே சொந்தக்காரங்களாயிட்டாங்க... எட்ரை பஸ் வந்து ஒரு அரைமணி நேரம் நிக்கும். டிரைவர், கண்டக்டருக்கு தண்ணீர் கொடுக்க ரெடியா ஒரு பையன் நிப்பான். அவங்க கை கால் மூஞ்சி கழுவ ஒரு பையன் தண்ணீர் இறைச்சுத் தருவான். அதுக்குள்ளே ஏஜெண்ட் மூக்கையா கம்மங்கூழை நல்லாக் கரைச்சு, தொட்டுக் குறதுக்கு மாங்கா ஊறுகா கொண்டு வருவாரு. டிரைவர் கண்டக்டர் மூக்குமுட்டக் குடிப்பாங்க.

கண்டக்டருக்கு அதிகமான மரியாதையாப் போச்சு... வாட்டசாட்டமான, லேசா பழகக் கூடிய ஆளு. ஊர்க் காரங்க சுத்தி வளைச்சு கண்டக்டரை சொந்தக் காரனாக்கி முறை வச்சிப் பேச ஆரம்பிச்சுட்டாங்க...



படிப்பகம்

மூன்ரை பஸ் வந்ததுமே செம்பில் தண்ணீருடன் ரெடியா நிப்பான் ராமசாமி. பஸ் போனதும் அவங்கவங்க வீட்டுக்குப் போவாங்க.

கண்டக்டர் இந்த ஊர்ல கல்யாணம் பண்ண ஆசைப் பட்டு ரெண்டு பேரை பெண்ணு பாத்துட்டுப் போனாரு.

அருப்புக் கோட்டையிலர்ந்து ரெட்டியாபட்டி வரைக்கு தார் ரோடு. ரெட்டியாபட்டியிலர்ந்து வெறும் மண்ரோடு, குண்டும் குழியுமாக வண்டிப்பாதை மாதிரி. மழைபெஞ்சா சகதியாய்ப் போய் பஸ்சே வரமுடியாது.

“கோடைகாலத்துல மழை எதுக்கு... மழை வராட்டா நல்லா இருக்கும்...”— ஊரே நினைச்சது.

பஸ்ஸினால் தினமணி ஊருக்குள்ளே நடமாடிச்சு... ஒரு ஆளு படிக்க, மத்தவங்க கேட்டு நாட்டு நடப்பு சரியில்லேன்னாங்க... உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கூட்டுனது தெரிஞ்சு ரொம்ப வருத்தப்பட்டாங்க.

“தாயோளி... கவர்மெண்டு நமக்கு ஒண்ணும் செய்யாது... கேடுகெட்டவன் இந்த விவசாயிதான்...”ன் னாங்க.

பெரும்பாலும் ஊராரெல்லாம் கண்டக்டருக்குப் பரிச்சயமானாங்க...எந்த ஊருன்னு கேட்காம ஆளைப் பார்த்தே கரெக்டா டிக்கட் கொடுப்பாரு...சில பேரு கடன் கூடச் சொன்னாங்க...

“நேண்டு னுவ்வி வேசுகா...ரேவிட்டிகி நா இச்சேசேனு...”னு தெலுங்குல கடன் சொல்லுவாங்க...

“இன்னிக்கு நீ போடு...நாளைக்குத் தந்துடுறேன்”னு

பஸ் வந்து நின்னு கண்டக்டர் இறங்குனவுடனே ‘வாங்க வாங்க தம்புன்னு ஒரே வரவேற்பு. ஊர் இளவட்டங்களை ஏமி சுறுசுறுப்பு ரேதேன்பார். படிக்கிற

www.padippakam.com



ரெண்டு பேரை "எப்புரு காலேஜ்"ன் பார். பஸ் வர்ற வரைக்கும் கண்டக்டரும் இந்த ஊருதான்

... ... ...

இன்னிக்கு ஏன்னு தெரியலை பஸ்சைக் காணோம். மணி ஒன்பதாச்சு, எல்லார் மூஞ்சியிலும் காரணம் தெரியாம சோகம். அக்கையா நாயக்கர் மெதுவா சொன்னார். "நேத்து சாயந்திரம் மறவர் பெருங்குடிப் பக்கம் நல்ல மழை மேகம் இருந்துச்சு..."

"மௌனம், என்ன பதில் சொல்றது. மழை இப்டிச் செய்யும்போது. அப்பத்தான் ரோட்டு வழியா ராமசாமி வந்தான். வந்துட்டே சொன்னான். "நம்மூர்க்கு இனிமே பஸ் வராதாம்...பெரிய ஓடையில பாலம் கட்டுனாத்தான் வருமாம்..."

ராமசாமிக்கு மதிப்பு கூடிப்போச்சு. ஆளாளுக்கு கேள்வி, அவன் திக்குமுக்காடினான்.

"நீ எங்கே போனே...எந்தப் பாதையில வர்ற?"

"கரிசல்குளம் பெரியம்மா வூட்டுக்குப் போயிருந்தேன், எட்ரைக்குப் பார்த்தேன். போகாதுன் னுட்டாங்க" ஓடையில தண்ணி போயி ஒரே சகதி..."

"நீ எந்தப் பாதையில வந்தே?"

"நான் நேர் பாதைதான் வந்தேன்...எவன் ரோட்டுப் பாதை வருவான்...பத்து மைலு..."

அக்கையா நாயக்கர் சொன்னார். "சரி...சரி ஊருக்குப் போறவங்கல்லாம் நேர்பாதையில நடந்து போங்க...."

நாலைஞ்சு சின்னப் பசங்களைக் கூட்டிட்டு ரெண்டு பேரும் ஒரு பொம்பளையும் போனாங்க...அவங்க மனசுக்குள்ள அஞ்சு மைல் பாதை ஏறி மனசு கனமாச்சு.

காலுக்கு சோம்பலாச்சு...வண்டித்தடம் பட்டு ரெட்டைப் பாதை மனசை இழுத்து ரெட்டியாபட்டிக்குள் விட்டது. வெம்பரப்பில் வேகாத வெயிலில் கானலில் ஆடிக்கிட்டேப் போனாங்க...கானல்பட்டு வெக்கையாய் ஒரு சின்னவன் அழுதுட்டேப் போனாள். பாதையெல்லாம் நிலம் பொரிஞ்சு போய் இருந்துச்சு. எல்லார்க்கும் பாதம் புழுதியாய் முகமெல்லாம் சுண்டிப் போச்சு...

ரெட்டியாபட்டிக் கடைவீதியில பஸ் நின்னுட்டு இருந்துச்சு... பஸ்ஸைப் பார்த்தவுடனே முகத்தில் களை. "அந்தோ... நம்ம பஸ் நிக்குதுல்ல..."

"ஏம்மா... நம்மூர்க்கு பஸ் வல்ல..."

"ம்... நம்ம நேரம் நடக்க வேண்டிருந்துருக்கு... மழை பேஞ்சிருச்சு..."

"அது நம்ம பஸ் தானம்மா..."

"ம்..."

கண்டக்டர் ஒரு பெட்டிக் கடையில பீடி குடிச்சுக் கிட்டே இவங்களைப் பார்த்துட்டார். ஓடி வந்து "வாங்க வாங்கன்னார்" சோர்ந்து சோகமாகி சொன்னார்: "வான இட்ட சேசேசனே மழை இப்டி செஞ்சுருச்சே..."

"ம்... எல்லாம் நேரம். நம்ம என்ன செய்ய முடியும்..."

இப்பக் கிளம்பிடுவோம்... நீங்க ஏறிக்குங்க..."

எல்லாரும் ஏறிக்கிட்டாங்க... கூட்டமே இல்ல. சின்னப் பசங்க எல்லாச் சீட்லயும் பறந்து பறந்து உட்காந்தாங்க. படுத்துப் பார்த்தாங்க...

"எம்மா... இதி மன பஸ் தானேம்மா..."

"போரா... இதி நா பஸ்சு..."

"போ... இதி நா பஸ்சு..."

இப்படி இவங்களோட சந்தோஷமான சண்டை. தாய்க்காரிக்கு எரிச்சலாகி மூத்த மகனை இழுத்து முதுகில் ஒரு போடு போட்டாள்.

www.padippakam.com

# அம்மா அறியாதது

**வே**லுச்சாமியும் அவனும் மூக்கையாவுக்கு காத்திருந் தார்கள். இருவரின் மனசிலும் மூக்கையாவும் பேப்பருந் தான். வேலுச்சாமிக்கு ரொம்ப பயம்.

"நீ பாசாயிடுவே... நான்தான் எப்பிடியோ..."

"நல்லா எழுதலியா... எனக்கும் சந்தேகம்தான் வேலு..."

"பெயிலாயிட்டா என்னடா செய்ய...?"

"அதான் பயமாயிருக்கு..."

ஊரே பேசும். படிப்பின் மீது நம்பிக்கையற்ற ஊர் பெயிலானால் ரெண்டு வீட்டுக்கான பண நஷ்டத்தைக் கணக்கெடுக்கும். சந்தோஷப்படும்.

"இவனுங்கள படிக்கப் போட்டதுக்கு... பேசாம வட்டிக்கு கொடுத்திருக்கலாம்..."— என்று யோசனை சொல்லும்.

மூக்கையா பனைமரத்து ஓடையைத் தாண்டி இருப்பான். விறுவிறு என்று நடந்து வர்ரான். ராத்திரி

படிப்பகம்

www.padippakam.com



ரெட்டியாபட்டி மடத்துல படுத்திருப்பான். அவனது ராத்திரி தூக்கம் அவன் பெயிலா பாஸா என்பதைப் பொறுத்திருக்கும்.

இப்ப ஆசாரி பிஞ்சையைத் தாண்டி இருப்பான். துக்கமோ சந்தோசமோ பேப்பரில் உள்ள நம்பரில் இருக்கும். இவர்களின் அவ்வளவு துக்கத்தையும் சந்தோஷத்தையும் கக்கத்தில் இடுக்கி இருப்பான். இல்லை கையில் மடக்கி வைத்திருப்பான். புழுதியான வண்டிப்பாதை வேகமாக அவன் பின்னால் ஓடும்.

பேப்பரைப் பார்த்த பிறகுதான் மனசு எதையாவது யோசிக்கும். பாசாயிட்டால் மனசு துள்ளும். பேரு கூடிப் போகும். அம்மா சந்தோஷப்படுவாள். கம்மங் கூழ் சாப்பிட வேண்டியதில்லை. காலேஜ் போகலாம்.

"வேலு நீ இந்த மரத்துல ஏறிப் பாரேன்... சலுக்குவார் பட்டிக்கு வந்துட்டா கூட ஏறிப் பார்த்தா தெரியும்..."

வேலு மரத்தில் ஏறிப் பார்த்தான். வெயிலையும் செடிகளையும் தூரத்தையும் ஊடுருவிப் பார்த்தான். 'காணோம்' என்றான். பேப்பர்கூட வராத ஊரிலிருந்து படிக்கிற பையன்கள் எதற்கெடுத்தாலும் ரெட்டியா பட்டிக்கு அஞ்சு மைல் நடை. பாதையின் வளைவுகளும், தூரமும் ஊரில் ஒவ்வொருவரின் மனசிலும் பதிஞ்சுருக்கும்.

"வந்துட்டான்டா... சலுக்குவார்பட்டியைத் தாண்டிட் டான்..."

"வந்துட்டானா..." அவன் வரவர மனப் பயம் அதிகரித்தது. இரத்த ஓட்டம் கூடிப் போய் நாடித்துடிப்பு அதிகமாகியது. ஊரில் உள்ள எல்லாச் சிலைகளும் துடியான சாமிகளாகத் தெரிந்தன. எல்லாச் சிலைகளுக் கும் சிதறு தேங்காயும் பொங்கலும் என்று எழுதப்படாத ஒப்பந்தம்.

www.padippakam.com



இருப்புக் கொள்ளாமல் அவனை எதிர் கொண்டு நடந்தார்கள். அந்தப்பாலத்தில் அமர்ந்து கொண்டார்கள். பேச முடியவில்லை. கைகாலை சும்மா வைத்திருக்க முடியவில்லை. யதார்த்தமாக இருக்க இரண்டு பேரும் முயற்சித்தார்கள். அவன் பேச்சு தூரத்தில் வரும் பொழுதே இருவரும் கேட்டார்கள். "என்னடா... நமபர் இருக்கா..." அவன் பேசாமல் வந்தான். பேப்பரைக் கொடுத்தான். தேடினார்கள். தேடினார்கள். ரெண்டு பேரின் நம்பரையும் காணோம்.

"என்னடா... ரெண்டு பேரோட நம்பரும் இல்லை..."

பாலத்திலிருந்து எழுந்து நடக்க மனசில்லை. ஊருக்குள்ளே நுழையவே பயம். அவர்களுக்காக மூக்கையா கொஞ்சம் வருத்தப்பட்டான். அவன் சந்தோஷம் அவனை ஊருக்குள்ளே இழுக்கும். மூக்கையாவைப் போகச் சொன்னார்கள். அவன்தான் மாரை நிமிர்த்திச் சொல்லலாமே— பாசாயிட்டேன்னு...

வேலு சொன்னான்; "வீடு போகவே பயமாயிருக்கு..."

"எனக்கு எங்கண்ணனை நெனைச்சுத்தான் பயமா இருக்கு..."

"வீட்ல வஞ்சா, நா எங்கயாச்சும் ஓடிரலாம்னு நினைக்கேன்..."

"எங்க போறது... என்ன வேலை செய்றது..."

யோசிக்கும் போது எல்லா இடத்திலும் ஆதரவு இல்லைபோல் பட்டது. காலங்காலமாக அந்தப் பாலம் வெயில்பட்டு சூடேறிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இவர்களுக்கு அது புரியவில்லை. நீண்ட நேரம இருந்து விட்டு வீடு போனார்கள்.

தெருவில் வரிசையாய் பூட்டிக்கிடக்கும் வீடுகள். காடெல்லாம் பருத்தி. காட்டில பருத்தி எடுத்து எடுத்து

படிப்பகம்

www.padippakam.com



வீட்டில் பூட்டி வைத்தார்கள். இவன் வீட்டுக்குப் போனான். வீட்டின் படியில் உட்கார்ந்தவுடனே அழுகை வந்தது. கண்ணீரை அடக்கிக் கொண்டான். அம்மாவும் அப்பாவும் பருத்தியைத் தலைச் சுமையாய்க் கொண்டு வரப் போயிருக்கிறார்கள்.

வீட்டில் இருந்த அடுக்குப் பானைகள் இவனிடம் நிறையப் பேசிப் பயமுறுத்தின. இருட்டையே தனக்குள் வைததிருக்கும் அடுக்குப் பானைகள். சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்தான். காப்பித் தண்ணீ சிந்திய இடத்தில் எறும்புகள் மொய்த்தன. எதிரே சின்னையா வீட்டில் ஓடுகள் வெயில் பட்டு ஒளியை வாங்கிக் கொண்டிருந்தன. ஒளிபட்டுச் சூடாகும். இரவில் சூட்டை உமிழும்.

அம்மா அப்பா அண்ணன்களின் எதிர்பார்ப்புத்தான் இவன் மனதில ஏறிக் கனத்தது. உரலின் நிழல் மேற்கி லிருந்து உரலுக்கு வந்து மறைந்தது. கொஞ்சம் கொஞ்ச மாக கிழக்கே நிழலை நீட்டிக் கொண்டிருந்தது. உரல் ஒரு அடி நீளம் நிழலை கிழக்கில் விட்ட பொழுது அமமா அப்பா பருத்தியை சுமந்து வந்தார்கள்.

பருத்தி மூட்டையை திண்ணையில் பொத்தென்று போட்டு "கண்ணா..."—என்றாள்.

அம்மா அழைத்ததும் ஓவென்று அழுதுவிட்டான். கண்ணீர் தாரைதாரையாய் வழிந்தது. விசும்ப முடியாமலே விசும்பல். அவனை அறியாமலேயே அழுகை கூடியது. அம்மா பக்கத்தில் உட்கார்ந்து 'அழாதேடா' என்றாள்.

"மூணு பேருல நீதானடா நல்லா படிச்சே..." —என்றாள். கேட்டவுடனே எக்கல் கூடியது.

"வாத்திமார்களுக்குப் பிடிக்காம ஏதாச்சும் செஞ்சிருப் பாங்களோ..."

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றும் பதில் சொல்லாமல் அழுது கொண்டிருந்தான். ஆறுதல் கூடக்கூட அழுகை கூடும் போல.

அப்பா வந்தார். கூட யாரோ பேசிக் கொண்டே வந்தார்கள். "நல்லாப் படிக்கிறவன் பெயிலாப்போனா நம்ம கிரககாரம்தான்..."

"இவன்தான் பேரு போனானே...நல்லாப் படிக்கிறான் நல்லாப் படிக்கிறான்னு.. இங்கிலீஷ் மீடியத்துலகூட படிச்சான்... இவன் பெயிலாப்போகக் காரண மில்லையே..."

ஒவ்வொருவராக வந்தார்கள். பெயிலாப் போவது ஒரு கவர்ச்சி போல. எல்லாரும் விசாரித்தார்கள் நிறைய மார்க் எல்லாரையும் வரவிடாமல் செய்யும். யாரையும் வந்து விசாரிக்க விடாது. ஆனால் இப்ப நிறைய பேர் வந்தார்கள். வந்து வந்து கேட்கும்போது அவனுக்கு அழுகைக் கூடிக்கொண்டே போனது.

"சரி...சரி...இதுக்கெல்லாம் அழுகலாமா ஆம்பளை... ஒரு வருஷம் வெட்டியாப் போச்சுன்னு நினைச்சுக்க வேண்டியதுதான்...என்ன செய்ய...நீ அழாதேப்பா..."

அப்பா சொன்னார். "நல்லாப் படிக்கிறவன் எப்டிப் பெயிலாப் போனான்னுதான் எனக்கு ஆச்சர்யம்."

"அதான் நேரம்"னு எல்லாரும் போனார்கள்.

அம்மா சமைக்க ஆரம்பித்தாள். விறகை ஒடித்து அடுப்பில் வைத்தாள். "திருத்துனவன் கையில புத்து வர...எப்பிடித்தான் மனசு வந்துச்சோ ... பெயில் போடுறதுக்கு ... அவனுக்கும் புள்ள குட்டி இருக்குமுல்ல..."

இவன் அழுது கொண்டிருக்கும் கண்ணீரில் பள்ளியின் ஒவ்வொரு அறையும் ஒவ்வொரு சொட்டாகத்

www.padippakam.com



தெறித்து விழுந்தன. பன்னண்டாம் வகுப்பில் வாத்தியார் மாற்றி வாத்தியார் கம்பீரமாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அறைச் சுவர்கள் எல்லாம் அறிவியலை ஆங்கிலத்தில் வாங்கி வெளிவிட்டு எதிரொலித்தன.

ஒவ்வொரு பாட வேளையிலும் ஆங்கிலமும், இவன் வயசும் இவனை வகுப்பறையை விட்டுத் துரத்தின மனசில் கஞ்சம்பட்டி, கூளிபட்டி காடு மேடு ஓடைக் காடுகளிலெல்லாம் அலைந்தான். எருமை மாட்டோடு புல்லுக்கு இவனும் அலைந்தான். ஜோடிப் பையன் களெல்லாம் ஓடைகளில் தேனெடுத்தார்கள். ஒவ்வொரு கூட்டிலும் தேன் நிரம்பி வழிந்தது. தேனில் ஊரில் உள்ள பெண்களெல்லாம் தெரிந்தார்கள்.

எங்கு பார்த்தாலும் முருங்கை மரம் பூவும் பிஞ்சுமா யிருந்தது. ஒடைசகாடுகளில் எருமைப் போத்து கடேரியை விரட்டிக் கொண்டிருந்தது. லாவகமாகத் தவ்வி ஏறியதும் கடேறி குன்றிப் போனது. எல்லாரும் உற்றுப் பார்த்தார்கள். ரவி குணாவைக் கேலி பண்ணினான்.

''ஒங்கக்காவ இப்படித்தான்டா விரட்டணும் மாப்ளே...''

''ஆமா கிழிச்சே...''

''அப்பப் பார்த்தல்ல...ஒங்கக்காவக் கிழிச்சுடும்...'' காடு கரையெல்லாம் சிரிப்பொலி அதிர்ந்தது.

பத்மா நாளெல்லாம் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறாள். இவன் ஆடுகளுக்குக் குழை பிடுங்கப் போனான். அண்ட வெளியில் என்ன மாயமோ தோட்டத்தில் யாரும் காணோம். பக்கத்தில் பத்மா வருகிறாள்.

www.padippakam.com



“பள்ளிக் கூடம் போகலையா?”

“ஊகூம். ஒன்னப் பாக்கத்தான் வந்தேன்...”

பிறகு தோட்டமெல்லாம் அவர்கள் ராஜ்யம்தான். பத்மா மதர்த்துப் போய் இருந்தாள். வாழைத் தோப்புக்குள் இருந்த ஒவ்வொரு வாய்க்காலும் அவர்களை வரவேற்கும். வாழைத்தோப்பு இருட்டு உள்ளே நடப்பதை வெளியே சொல்லாது. அந்த இருட்டு இவன் மனசுக்குள். இருளில் இவனும் பத்மாவுமாய் இருக்கிறார்கள். வகுப்பறையில் எச்சிலைக் கூட்டிக் கூட்டி விழுங்கினான். வாத்தியார் செடிவகைகளைக் கைகளை ஆட்டி ஆட்டிச் சொல்லிக் கொண்டிருந்தார். இவன் பக்கம் வாத்தியாரின் கை நீண்டதும் வாழைத்தோப்பு இருளிலிருந்து பத்மா மறைகிறாள். இவன் வேகமாக எழுந்து நின்றான். அறையெல்லாம் கொல்லென்று சிரிப்பு நிறைந்தது.

“பாருங்கய்யா இவன் இந்த உலகத்துலயே இல்ல... எங்கேயோ...கற்பனைல இருந்துருக்கான்...”—என்றார் வாத்தியார்.

அவன் அப்பொழுது கடும் வெயிலில் நின்று கொண்டிருந்தது மாதிரி, அவமானமாய் இருந்தது. ஒருத்தன் சொன்னான்...“கணக்கெல்லாம் நல்லாப் போடுவான் சார்...”

“ம்ஹூம்...போட்டான்...உட்காரு...உட்காரு...”

சனி ஞாயிறுகள் பொன்னான நாட்கள். ஆரம்பப் பள்ளியிலும் மந்தப் பிஞ்சையிலும் உட்கார்ந்து பேசினால் எந்திரிக்க மனசு வராது. பேச்சில் வந்த பெண்கள் வீட்டையும், கணவனையும் லாவகமாக ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு குருசாமி இரவோடு இரவாக தொப்புலாக்கரை கிழவி வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்ததை. ராமசாமி

www.padippakam.com



ராத்திரி ஒண்ணுக்குப் போய்விட்டு வந்து அவன் அண்ணியின் பக்கத்தில் படுத்துக் கொண்டதை, கார வீட்டு அம்மா மூல வீட்டு நாயக்கருக்கு குழந்தை பெற்றதை, வண்ணான் மேல வீட்டுச் சுமதியுடன் ஓடைக் காடுகளில் சுற்றுவதை.

ஒவ்வொரு பாடவேளையிலும் நிர்மலா மஞ்சள் முகத்தைக் காட்டிக் கண்ணடித்துக் கொண்டிருந்தாள். நிர்மலாவுக்காக பூமியையேப் புரட்ட எண்ணினான். பரம்பரைக் காதல் வரிகளை எடுத்து ஒரு கடிதம் எழுதினான். அவனுடைய வகுப்பறையிலேயே நிர்மலா பதில் எழுதினாள். சொக்கிப் போனான். 'என் பிரிய காதலரே' என்றாள்.

வாத்தியாரின் பாடங்களையெல்லாம் சுவர்களும் வெளியும் கேட்டுக் கொண்டிருந்தன. பெட்டைகளே கிடைக்காத சேவல் கல்மீதும், ஆடு மீதும் காதல் கொண்டது போல அண்ட ஆகாச வெளியில் அலைந் தான். அங்கு நிறையத் தெரிந்த பெண்கள் தாகத்துடன் இவனை அண்டினார்கள். காதல் கடிதம் எழுதினார்கள். இவனைக் கண்டு உருகினார்கள்.

இப்படி ஆகாச வெளியில் கண்ட கண்ட பெண்களை எண்ணியதால் இப்பொழுது அழுகை நின்றபாடில்லை. சுவற்றில் சாய்ந்து அழுது கொண்டிருந்தான். கொடியில் தொங்கிய அம்மாவின் சேலையால் கண்ணீரைத் துடைத் தான். அம்மாவும் அப்பாவும் தங்களுக்கு விதித்திருந்த வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். இவனது அழுகையைக் கண்டு அம்மாவுக்குப் பொறுக்கவில்லை.

"நல்லாப் படிக்கிற பையனை இப்படி மூலையில் ஒக்கார வச்சுட்டாங்களே... எந்த முண்டைக் கண்ணாச்சும் பட்டுருக்கும், நம்ம கும்பிட்ட சாமி நல்ல சாமி இல்ல.. நல்ல... சாமியா இருந்தா திருத்துனவனுக்கு நல்ல புத்தி கொடுத்திருக்காது... நீ எந்திரிய்யா... கண்ணு எந்திரி..."

www.padippakam.com

# வாளிச் சத்தம்

முழிப்புத் தட்டியவுடனே உடம்பு ஒண்ணுக்குப் போக அவசரப்பட்டது. இந்த அவஸ்தை இல்லாவிட்டால் இன்னும் கனவு நீண்டு போயிருக்கும். இப்பவும் லட்சுமி அம்மாவுக்குப் பயமாக இருந்தது. அந்த நஞ்சைக் கண்மாய்க்கரைகூட வேத்து இடமாகப் பட்டது. எந்திரிக்க சோம்பல். ஒண்ணுக்குப் போக வேண்டுமே. தண்ணி எடுக்க வேண்டுமே. கொஞ்சம் மௌனித்துக் காதைத் தீட்டினாள் கிணத்துப் பக்கமிருந்து சத்தம் வரவில்லை. கனவை நினைக்கும் போது ஒண்ணுக்குப் போகக் கூடப் பயமாக இருந்தது. பாம்புகள் நடமாடுமோ? பக்கத்து முள்வேலியிலிருந்து பாம்பு எட்டிப் பார்ப்பதாய்ப் பயம். நெஞ்சு தாளம் போட்டது. மனசுத் திரையில் மீண்டும் கனவு ஓடியது.

...நஞ்சைக் கண்மாய்க் கரையில் வரிசையான பனை மரங்களில் ஒன்றில் மட்டும் குலைகுலையாய் நுங்குகள். அடுக்கி வைத்தது மாதிரி. அதற்காக அந்த மரம் பெருமைப்பட்டது மாதிரி நின்றது. செங்கையா மரம் ஏறி நுங்கு வெட்டப் போகிறான். பக்கத்துக் கீழக் காட்டில்

படிப்பகம்

பருத்தி எடுத்துக் கொண்டிருந்த லட்சுமி அம்மாள் பனை மரத்தில் செங்கையாவைப் பார்த்தவுடன் ஓடி வருகிறாள். "டேய்... சாத்தூர்லர்ந்து எப்படா வந்தே... டேய் நீ நுங்கு வெட்டலாமா... இறங்குடா இறங்குடா கீழே" செங்கையா கேட்காமல் வெட்டிக் கொண்டிருக்கிறான். வெட்டி முடித்தவுடன் பாதி மரம் இறங்கி விட்டான். லட்சுமி அம்மாள் பார்த்துக் கொண்டே இருந்தாள். இவன் தரையில் கால் வைக்கப் போகும்போது அனைத்து நுங்கு குலைகளும் பாம்பாக மாறி சீறிக் கொண்டு வருகின்றன. செங்கையா "அய்யோ... அம்மா..."— என்றலறி பாதி மரத்துக்கு ஏறிவிட்டான். பாம்புகள் மரத்தைச் சுற்றி வட்ட மிடுகின்றன.

பாம்புகள் அழகாக ஒன்று போல் இருந்தன. படம் எடுத்து ஆடும் போது அது என்ன அழகாக இருக்கிறது.

... ... ... ... ...

எழ முடியாமல் எழுந்தாள். உட்கார்ந்தவுடன் முழங்கால் மடக்க முடியாமல் பத்து வருட கால்வலி. எவ்வளவோ நாட்டு மருந்து போட்டாகிவிட்டது. ஒரு பிரயோசனமில்லை. மெல்ல மடக்கித் திண்ணையில் இருந்து இறங்கினாள். இரவிலும் நன்றாகப் பார்க்க முடிந்தது. தென்னந்தட்டி, மழைச்சாரல் வராமல் போடப் பட்டிருந்த, சுருட்டிக் கட்டப்பட்டிருந்த சாக்கு எல்லாமே நன்கு தெரிகிறது. சோறாக்கிய பானையை வெளியே கழுவி விட்டு, படியேறும்போது சுவத்தைப் பிடித்த இடத்தில் விழுந்த கைகூட தெரிகிறது. வெளிச்சத்தில் இருந்து இருட்டுக்கு வரும்போதுதான் சரியாகக் கண் தெரியாது. இப்பொழுது நன்கு தெரிகிறது.

எல்லாமே மௌனம். ஆடாமல் அசையாமல் எதற்கோ, யாருக்கோ காத்து இருப்பது மாதிரி மரங்கள்.

www.padippakam.com



முள்வேலி, வீடுகள். இவ்வளவு அமைதியாக எப்படி இருக்க முடியும்? மனிதர்கள் நடமாட்டம் இல்லாமல் அனைத்திற்கும் சோகம் போலும். முன்வாசலில் கயிற்றுக் கட்டிலில் அவர் படுத்துக் கொண்டிருக்கிறார். போர்வை தரையில் விழுந்து கிடப்பது கூடத் தெரியாமல் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக் குறட்டைச் சத்தம் நாலு வீடு கூடத் தள்ளிக் கேட்கும். லட்சுமி அம்மாளுக்கு இந்தச் சத்தம் இருபது வருடங்களாகப் பழக்கம். கல்யாணம் முடிந்த பொழுது குறட்டைச் சத்தம் கிடையாது. மூன்று பசங்களும் பொறந்த பிறகுதான் பொடி போட்டு... சே... மூக்குல ஒரு கோட்டைப் பொடி போட்டா... குறட்டை வராம என்ன செய்யும்.

மெல்ல இறங்கி கீழே போனாள். எல்லா பொருளும் செத்தது மாதிரிதான் இருக்கின்றன. பாம்பு முள்ளிலிருந்து எட்டிப் பார்ப்பது மாதிரிக் கற்பனை. கற்பனை என்றாலும் பயமாக இருந்தது. எதிர்த்த வீட்டில் சுப்பையா இருமுவது கேட்டது. அமைதியான பூமியில் எங்கோ குழந்தை பிறந்து அழுதது மாதிரியான இருமல். ஒண்ணுக்கு இருக்கும்போது பழைய ஞாபகம் வந்து சிரிப்பூட்டியது. கல்யாணம் பண்ணி வந்த புதிதில் சுப்பையா நல்ல வாலிபப் பையன். அப்ப இளவட்டங்க எல்லாம் மடத்துல போய்தான் படுப்பாங்க. சுப்பையா ரொம்ப பயந்தாங்கொளி. ராத்திரி ஒண்ணுக்கு வந்துட்டா யாரையாச்சும் துணைக்குக் கூப்பிட்டுத்தான் வருமாம். ஒரு நாள்... மடத்து முன் வாசலில் மேடாக மண் போட்டிருப்பார்கள். அந்த சரிவில் இவன் மேட்டை நோக்கி ஒண்ணுக்கிருக்க, சிறுநீர் கால்களுக்கிடையே நெளிந்து போக... அதைப் பார்த்து இவன் ‘அய்யோ பாம்பு’ என்றலறி, எல்லாரும் எழுந்து தேடினப்ப... லட்சுமி அம்மாவுக்கு இப்ப சிரிப்பாய் வந்தது.

www.padippakam.com



அவர் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் படிக்கட்டில் அமர்ந்து கொண்டாள்: "தண்ணி... எடுக்கணுமே...யாராச்சும் இப்ப எடுத்துட்டு இருப்பாங் களோ...சத்தம் வல்ல..." அவரை மெல்ல எழுபபினாள். எழுப்புமபோது பயம். இப்பல்லாம் எதற்கெடுத்தாலும சுள்ளென்று விழுகிறார் நம்மீது வெறுப்போ என்று கூடப் பயம் பிறகு கடவுளைக் குமபிட்ட மாதிரி ஒரு சமாதானம். "வயசாயிடுச்சுல்ல...முந்தி மாதிரி ஒழைக்க முடியறதுல்ல ...அந்த ஏலாமை நம்மகிட்ட வெறுப்பா வருது...எழுபது வயசுல இவருமாதிரி யாரு உழைக்கிறா..."

"ஹூம்...என்ன"—மெல்ல புரண்டு படுத்தார்.

"கிணத்துல அரவம் கேட்கல ... தண்ணி எடுத்துருவமா?"

"உம்...என்ன நேரம் இருக்கும்...இப்ப யாராச்சும் எடுத்துட்டிருப்பாருங்களே..."

"இல்ல...சத்தமே வல்ல..இன்னும் கொஞ்ச நேரத்துல கோழி கூப்ட்றும்..."

கொஞ்ச நேரம் மௌனம். லட்சுமி அம்மாள் அவர் அரைத் தூக்கத்தில் இருப்பதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சரி...சரி...பானைகளைக் கழுவு..."

லட்சுமி அம்மாள் முழங்காலைப் பிடித்து எழுந்தாள். "அய்யோ...இந்த வலி எப்ப தீருமோ...பேரம்மத் தாயே..." நொண்டி நொண்டி உள்ளே போனாள். அவர் பொடி உறிஞ்சுவது பலமாகக் கேட்டது.

உள்ளே பானை கழுவும்போது தரையை உரசி, உரசி பலமாகச் சத்தம் கேட்டது. "இந்தாங்க குடம்... வாளி இங்க இருக்கு. இறைச்சிக்கிட்டு இருங்க...நான் அடுத்த பானை கொண்டாறேன்..."

www.padippakam.com



“வடிகட்ற துணி இருக்கா...”

“வாளியிலேயே இருக்கு ... நல்லா துவைச்சு வைச்சிருக்கேன்...”

இரண்டாவது பானையைக் கழுவும்போது அவர் போவது சன்னல் வழியாகத் தெரிகிறது. தூக்கக் கலக்கத்தில் மெதுவாகப் போகிறார்.

கதவை மூடி, பானையைத் தூக்கி கிணத்துக்குப் புறப்பட்டாள். இவள் வெளியே வந்தவுடன் ஓலையால் வேய்ந்த தட்டியிலிருந்து எலிகள் ஓடுவது கேட்டது. தட்டியின் மேலிருந்த ஆந்தை கத்திக் கொண்டே எதிர்த்த வீட்டில் அமர்ந்து ஆறுமுறை கத்தியது. லட்சுமி அம்மாள் போய்க் கொண்டே ஆந்தை கத்தலை எண்ணினாள். “ஆறு வாட்டம் கத்துதே...யாராச்சும் உறவுக்காரங்க வருவாங்க...செங்கையா வந்தாலும் வருவான்...அவன் பஸ்ல வரும்போது நீதான் துணை செய்யணும் பேரம்மத்தாயே...”

“சாத்தூர்ல செங்கையா வாடகை வீட்ல இருந்தாலும் நாள் முழுக்க குழாயில தண்ணி வரும். எப்பத் தொறந் தாலும் ஒரு வேகத்துல தண்ணி பீச்சுக்கிட்டு வரும். அடுப்பங்கரையில ஒரு குழாய். குளிக்க, வெளியே போக இப்படி வேண்டிய இடத்துல எல்லாம் குழாய் மாட்டி, தண்ணி எடுக்கக் கஷ்டமே இல்ல.”

“இப்படி எல்லாமே சுளுவா இருந்தும் மருமக நமக்கு செய்ய மாட்டேங்றாளே...வேலைக்குப் போறான்னாலும் என்ன பெரிய வேலை. அலங்காரம் பண்ணிட்டு போனா, நாலு மணிக்கு அலங்காரம் கலையாம வந்துட்றா... சுத்தம்னா அப்பிடியொரு சுத்தம். டவுண்ல இருக்குறவங் களுக்கு பாசமே இருக்காது போல...அப்படியும் சொல்ல

கொ.—4

படிப்பகம்

www.padippakam.com



முடியாது. செங்கையாகிட்ட. குழந்தைக்கிட்ட எவ்வளவு அன்யோன்யமா இருக்கா...''

முந்தி மாதிரி கிடையாது இப்போ...முந்தி நான் கல்யாணம் பண்ணி வந்தப்ப குடும்பத்துல பத்துப் பன்னெண்டு பேர் காலையில கோழி கூப்ட எந்திரிச்சா, ராத்திரி படுக்கப் போற வரைக்கும் வேலை. அப்பப்பா... எவ்வளவு வேலை...கம்பு குத்த...களைக்குப் போக... தட்டை அறுக்க...ஆனா இப்ப மாதிரி தண்ணிக்கஷ்டம் கிடையாது. அப்ப குளத்துல தெக்கு தெக்கென தண்ணி இருக்கும். அதனால் கிணத்துலயும் நிரம்ப இருக்கும். அந்தக்காலம் வேற...

லட்சுமி அம்மாள் பெருமாள் வீட்டைத் தாண்டி வண்டிப்பாதைக்கு வந்து விட்டாள். பெருமாள் அவுரி வியாபாரம் செய்றவன். தாட்டு தாட்டா...அவுரிக்காய் வாங்கி அதுக்கு காவலா படுத்து இருந்தான். பெருமாள் தான் சொன்னான்.

''எம்மோவ்...கிணத்துக்கு ஓய்வே கிடையாதா... போங்க...போங்க...சித்த முன்னாடிதான் காரவீட்டுக் காரங்க எடுத்துட்டுப் போனாங்க...போய்ப் பாருங்கம்மா... இல்லன்னா யாராச்சும் வந்துடுவாங்க...மழை இப்படிச் செய்தே தாயி...நம்மூர்க்கு இந்த நிலைமை தகாது...''— சலித்துக் கொண்டே கொட்டாவி விட்டான்.

கண்மாய்க்கரை மரங்களைப் பார்த்துக் கொண்டே போனாள். மரங்கள் அசையாமல் நின்றன. கண்மாய்க் கரை ஏறும்போது, பாதையின் பக்கத்தில் பன்றிகள் கும்பலாகப் படுத்திருந்து, இவள் போனவுடன் வீச்சென்று கத்தி எழுந்து ஓடின. கிணத்துப் பக்கத்தில் போனவுடன், ''என்ன...தண்ணி அரை வாளி வருமா?''—என்றாள்.

''இல்ல நிரம்பி வழியுது...வந்து பாரும்மா''— அங்கிருந்து இப்படி ஏளனம் வந்தது.

www.padippakam.com



“நிஜமாவா ... இப்பத்தான் காரவீட்டுக்காரங்க எடுத்தாங்களாமே...”—என்று பக்கத்தில் போனாள்.

“இல்லத்தே...மாமா கேலி பண்றாரு”—என்றாள் பலமாக சிரித்துக் கொண்டே குட்டியம்மா. குட்டியம்மா சொந்தக்கார வீட்டுப் பெண்.

“நீ எப்ப வந்தே...நாங்க யாரும் இல்லேன்னுட்டுல்ல வந்தோம்”

“நானும் எங்கம்மாவும் ஒரு மணி நேரமா காத்துட்டிருக்கோம்த்தே... ரெண்டு பானை கிடைச்சது. மூணாவது பானைக்குக் கொஞ்சம் ஊறப் போட்டுட்டு இருக்குறப்ப மாமா வந்துட்டாரு...”

“மழை இப்படி செய்தே தாயி...”

“இந்த ஒரு மாசமா தூக்கமே இல்லம்மா...நல்லா தூங்கிட்டிருப்பேன். அப்பத்தான் எழுப்புவா. தண்ணி இருக்காதுன்னாலும் கேட்க மாட்டா... புலம்பிட்டே இருப்பா... அப்படி இல்லேன்னாலும் தண்ணி கிடைக்காது போல... சே...”

லட்சுமி அம்மாள் “சும்மா இருங்க”— என்று அதட்டினாள். குட்டியம்மா கொஞ்ச நேரம் கழித்து, “நம்ம ஊருக்கு நல்ல தண்ணியே கிடைக்காதா மாமா...” என்றாள்.

“கரிசல்ல எங்க தோண்டினாலும் உப்புத் தண்ணி தாம்மா... பேரம்மன் கோயில் பக்கத்துல இருக்குற அடிபம்பு... ஒரு எலக்ஷன்ல போட்டதுதான். உப்புத் தண்ணியாப் போச்சு... பள்ளிக் கூடத்துப் பக்கத்துல இருக்குற அடிபம்பு போன எலக்ஷனுக்குப் போட்டது... அதுல ஊர்க்காரங்கல்லாம் சேர்ந்து நூத்தம்பது அடியோட நிப்பாட்டிட்டோம்... நூத்தம்பது அடிதான் பாரு... அதுலயும் சரியான உப்பு...”

www.padippakam.com

□ 52

லட்சுமி அம்மாள் கிணத்துச் சுவரில் உட்கார்ந்திருந்தாள். கண்மாயில் கரிசல் மண் இரவுக்கு அதிகமாக இருள் சேர்த்தது. வவ்வால்கள் அத்தி மரத்தில் பழம் தின்று கத்திக் கொண்டிருந்தன. பெரிய ஆலமர நிழல் கறுப்பாயும், வெறுமையாயும் இருந்தது.

"இந்தக் கிணத்தைக் கொஞ்சம் ஆழப்படுத்தினாலும் உப்புத் தண்ணி ஆயிடும். அதான் கம்மா ஆழத்துக்கு கொஞ்சம் அதிகமா தோண்டிக் கட்டி வைச்சுட்டாங்க... கம்மாயில ஒரு வாட்டி தண்ணி நிறைஞ்சா... ஒன்றரை வருசம் கஷ்டம் கிடையாது..."

"சரி... சரி...தண்ணி ஊறிருக்கும்...நீங்க இறைங்க"— என்று சொல்லிவிட்டு, "கொஞ்சம் பொறும்மா...அம்மாடி.. வயசானவங்க நாங்க ரெண்டு குடம் எடுத்துட்டுப் போயிட்றோம்"— என்றாள். இவள் பேசுவதை இரவு நிசப்தம் அமைதியாய் கேட்டது.

"சரித்தே... நானும் வேனும்னாலும் இறைச்சுத் தாரேன்... எனக்கும் துணை வேனுமில்லே... ஏங்குடம் நிறையுற வரைக்கும் மாமா இருக்கட்டும்..."

"அதுவும் சரிதான்... பார்த்திபனூர்லம்மா... சுப்புராஜ் வீட்ல குழாய் போட்டுருச்காங்க... அவங்க பிடிச்சு மீதியை ஊர்க்காரங்கல்லாம் பிடிச்சுட்டுப் போவாங்க... நாங்க வயசானவங்க... இங்க தண்ணிக்கு அல்லாடுறோம்..."

"நீங்க அங்க போயிட வேண்டியதுதானேத்தே..."

"ஏம்மருவகிட்ட ஒரு நாள் இருக்க முடியாதுடி..." குட்டியம்மாவுக்கு சிரிப்பாய் வந்தது. அந்தக் காலத்துக் கிழடுகள் என்று.

"இந்தக் காலத்துல யாரும் செய்யமாட்டாங்க... நீங்க ஓங்க காலத்தையே நெனக்காதீங்க..."

படிப்பகம்

www.padippakam.com



“கலி முத்திப் போச்சு...”— பெருமூச்சு விட்டாள்.

கொஞ்ச நேரம் கழிச்சு ஒரு குடம் நிறைந்தது. அதை லட்சுமி அம்மாளுக்குத் தூக்கி விட்டார்கள். இடுப்பு வலித்தது. மெல்ல மெல்ல விந்தி நடந்தாள்.

“நீ இனி வரவேணாம்... இந்தப் பானையை நா கொண்டாந்துடுறேன்”— அவர் சொன்னார்.

லட்சுமி அம்மாள் குடத்தை இறக்கிவிட்டு திண்ணையில் வந்து படுத்தாள். படுத்தவுடன் அசதி நெஞ்சுக்கு வந்து நெஞ்சு வலித்தது. முதுகுத் தண்டுக்கு ஓய்வு வந்ததும் லேசாக இருந்தது. கொஞ்ச நேரத்தில் சரியாகி விட்டது. மூன்று மகன்களையும் எண்ணிக் கொண்டாள். அவர்களை வளர்க்க எவ்வளவு கஷ்டங்கள். நினைத்துப் பார்த்தாள்...

பையன்கள் சின்னவன்களாக இருந்த போது அவர் ரெண்டு கூலிக்கு வேலைக்குப் போவார். கடுமையான உழைப்பு. செங்கையா ஐந்து மைல் நடந்து படித்த பொழுது, கொல்லையில் விளைந்த பாகற்காயை மூடையில் சுமந்துபோய் விற்று புத்தகம் வாங்கினான். இன்னிக்கு மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறான். அவரோட உழைப்பு அதுக்கு ரொம்பக் காரணம்.

கிணற்றில் வாளியின் சத்தம் கேட்டது. கிணற்றுக்குள் சின்னக் குழியில்தான் நீர் இருக்கும். அந்தக் குழி இந்த திசையில்தான் என்று வாளியைப் போடும்போது தரையில் மோதி சத்தம் வரும். தரை, சரளிக்கற்களில் பாசிபடிந்து கறுப்பாக இருக்கும். அந்தப் பாசி, குழியில் உள்ள நீர், ஈரப்பதம் படிந்த அடிச்சுவர் எல்லாமே லட்சுமி அம்மாளுக்கு கண்ணில் தெரிந்தது... அந்தக் குழியில் வாளி விழவேண்டும் என்பதற்காக கயிற்றை இழுத்து இழுத்து விடும்போது கையும், இடுப்பும் வலிக்கும். “இப்ப அவருகூட அந்த வலியோடுதான் இறைச்சுட்டிருப்பார்.”

www.padippakam.com



அவர் இறைக்கிற தோரணை, இறைக்கிற போது முகத்தை வைத்துக் கொள்ளும் பாவனை எல்லாமே அவள் கண்ணில் தெரிந்தது.

இரவின் நிசப்தத்தில் அரவம் கேட்கிறது. அவர் வருகிறார். பானை கொண்டு வரும்போது அலுப்பு மூச்சு கூடக் கேட்கிறது. பக்கத்தில் வந்து விட்டார். "இன்னும் கிணத்துல வாளிச் சத்தம் கேட்குதே... யாரோ புதுசா வந்திருப்பாங்க..."

படிக்கட்டுக்கருகில் நின்று கொண்டு தலையில் இருந்த பானையை "இறக்கி வை" என்றார், வாளியைக் கீழே வைத்துக் கொண்டே. லட்சுமி அம்மாள் மெல்ல எழுந்து பானையை வாங்கி வீட்டினுள் இறக்கி வைத்தாள்.

அவர் கட்டிலில் உட்கார்ந்து பொடி உறிஞ்சுவது கேட்டது. லட்சுமி அம்மாளுக்கு எரிச்சலாக வந்தது.

"இப்டி பொடி போட்டுக் குறட்டை விடுறதுனாலதான பையன்களுக்குப் பிடிக்க மாட்டேங்குது"— என்றாள்.

"பிடிச்சாலும், பிடிக்காட்டாலும் இந்த உடம்பு உழைச்ச உழைப்புதானே அவங்கள வசதியா வச்சது..."

"ஆமா...அதான் கட்டையில போறவரைக்கும் ஒரே ஒழைப்புன்னு எழுதியிருக்கானே... என்ன இன்னும் கிணத்துல சத்தம் வருது..."

"அதையேன் கேட்குற...நாங்க இறச்சி முடிச்சவுடனே ஆசாரி சுப்பு வந்துட்டா... பின்னாடியே நம்ம குருசாமி வந்துட்டான்... ஒரு வாளிக்கு லோட்டா தண்ணிதான் வருது..."

www.padippakam.com

# உத்தியோகம்

கணேசனை ஊர்மடம் பிடித்து இழுக்கும். ஊர்மடம் ஊர்க்கதையெல்லாம் சொல்லும். வீட்டில் இருக்கப் பிடிக்காவிட்டால் ஊர்மடம்தான் எல்லார்க்கும். மெலிந்து போன உடம்போடு அம்மா நச்சரித்துக் கொண்டே இருக்கிறாள் அவள் பாட்டியோட பாட்டியிடம் வாங்கி வந்த நச்சரிப்பு.

"எய்யா...ராசா... நான் கண்ண மூடுறதுக்குல்ல ஒனக்குக் கல்யாணம் பண்ணனும்யா...என்னால..முடியல ...நேத்து பொறந்ததுக எல்லாம் மில்லுல கல்யாணம் பண்ணிட்டு நல்லார்க்குக...நம்ம ராமானுஜம் மகன் என்னத்துக்காவான்...அவனுக்குப் பத்துப் பவுனு போட்டுப் பொண்ணு...பேசாம மில்லுல சேரு...ராசா..."

"நீ சும்மா கிட...தொன தொனன்னு—"

அம்மா மனசெல்லாம் பொசுங்கிப் போகும். இவனை இயலாமை மடத்துக்குப் பிடித்துத தள்ளும்.

www.padippakam.com



உழுகுறப்ப வரும் ஈர மண்கட்டியில் எல்லாம் பத்மா சிரிக்கிறாள். அவள் கண்மாய்க் கிணத்துல தண்ணி எடுக்குப போதெல்லாம் இவன் பிள்ளையார் கோயிலில், பத்மாவை நினைக்கும்போது மனசெல்லாம் தென்றல்.

முறைப் பெண்ணான பத்மாவை இவனுக்குத்தான் என்று சின்ன வயசில் எல்லாரும் மனசில் விதை போட்டார்கள். உடம்பில் பருவம் ஏற ஏற அது முளைத்து இப்ப பூவும் பிஞ்சுமாய் இருக்கிறது.

ஊர் மடத்தில் எப்பவும் போலவே கூட்டம். ஊர் மடத்துக்கு வந்தாலே வீட்டுப் பிரச்னைகள் மறந்து சிரிக்கலாம். அக்கையா நாயக்கர் இருந்தாலே ஒரே சிரிப்புதான். விதவிதமான கதை சொல்லுவார். மடத்துக்கு முன்னாடிதான் டவுண்பஸ் நிக்கும். பஸ் சத்தம் கேட்டவுடனே பேச்சை நிறுத்தி பஸ்ஸைப் பார்த்தார்கள். பஸ்சிலிருந்து வழக்கத்துக்கு மாறாகக் கூட்டம் அதிகம் இறங்கியது. பெரும்பாலும் அடையாளம் தெரியாத வெளியூர் முகங்கள்.

ஊர் மடமே அவர்களை உற்றுப் பார்த்தது.

"என்னப்பா...நம்மூர்ல விசேஷம்...ஒரு கெடைக் கூட்டமே போகுது..."—அக்கையா நாயக்கர் மடத்தின் சார்பாகக் கேட்டார்.

"விசேஷமுமில்லை...ஒரு மண்ணாங்கட்டியுமில்லை ...மூல வீட்டுக்கு பொண்ணு பார்க்க வந்துருக்காங்க..."

"பொண்ணு பார்க்கவா...யாரை...அந்த ரெண்டாவது பொண்ணு பத்மாவையா...இதுக்கு முன்னாடி ரெண்டு தடவை வந்தாங்காள் எப்பா..."

"ஆமாமா...எதுவும் அமையல ... இப்ப இவங்க வந்துருக்காங்க...மாப்ள மில்லுல மேஸ்திரியாம்..."

www.padippakam.com



“எப்பிடியோ...கொஞ்சம் துட்டுக் கூடுனவுடனே... படிச்ச மாப்ள தானக் கேட்கும்...நம்ம கணேசனுக்கு என்னய்யா குறை.. ஆளு என்ன குறைச்சல்...முறைப் பையன்...நல்ல குணசாலி...”

“பொட்டை நாயி வேத்தூரு நாயைத் தானே பாக்கும்...”—அக்கையா நாயக்கர் ஒரு வெடிச் சிரிப்பு சிரிக்க வைத்தார்.

சூட்டு போட்டக் கால்கள் கிராமத்துப் பெண்களை மயக்கியது. என்ன மாயமோ மந்திரமோ இந்தக் காடெல்லாம் அவர்களுக்குப் பிடிக்காமல் போய் விட்டது. கிராமத்துப் பெண்களெல்லாம் சும்மா உட்கார்ந்து கற்பனை பண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

ஊர் மடம் பேசியது.

“ஊர்ல பொம்பளப் புள்ளங்கள சொல்ல முடியல... கட்டுனா...அம்பது ரூவா வாங்குனாலும் மாசச் சம்பளம் வாங்குறவனைத் தான்றாங்க... காலம் மாறிப் போச்சு...”

“ஊர்ல உழுகுறவனுக்கு ஒரு பையன் பொண்ணு தர மாட்டேன்கிறான்... வெவசாயி கேடுகெட்டவனாப் போய்ட்டான்...என்ன காலமோ...”

அக்கையா நாயக்கர் சொன்னார். “ஏன்... தர மாட்டான்...இந்தப் பயலுகளுக்குத்தான் துப்பு காணாதுப்பா...நெஞ்சுத்திடம் இல்லாத பயலுக...நம்ம வயசுல...இப்டியா மடத்துல உட்கார்ந்துட்டிருப்போம்... எப்படா... எந்தப் பொண்ணு வீட்டை விட்டு ஒத்தையில வெளியே போறான்னுதானே இருப்போம்...”

“ஆமா ஒங்களுக்கு வேற வேலையில்ல...”

“சம்சாரிக்கு வாக்கப்பட்டு எவ கஷ்டப்படுவா... கோழி கூப்ட எந்திரிக்கணும் நாலைஞ்சு மாடுக இருக்கும்...

www.padippakam.com



கூட்டிப் பெருக்கி, சமைச்சு வெள்ளனக் காட்டுக்குப் போகணும்... போகலைன்னா கட்டுப்படியாகாது... குளிக்கக்கூட நேரம் இல்லாம வேலை செய்யணும்... ராத்திரி படுத்தோம்னா... எல்லார் வீட்டுத் தூக்கமும் வரும்... மாசச் சம்பளம்னா... துரைங்க... ஒரு ஆறு ஏழு மணிக்கு எந்திரிக்க வேண்டியது... இப்பல்லாம் நூதனுக்கமா அடுப்பு வந்துடுச்சு... மேல்வலிக்காம காபி போட்டு சாப்ட வேண்டியது, புருஷனுக்கு மட்டும் ரெண்டு இட்லியோ தோசையோ சுட்டுத் தந்துட்டு அவனை வேலைக்கு அனுப்பிட்டு... அம்மா பத்து மணிக்குச் சாப்பிடுவாங்க... பொறகென்ன... கண்ணாடியில அழகு பாத்துட்டு தூங்க வேண்டியது... பொறகு மூணு மணிக்கு எந்திரிச்சு... இத்துனூக்கூண்டு சட்டியில சோறாக்கிட்டு புருஷன் வரும்போது பவுடர் போட்டு அலங்காரம் பண்ணி எதிர்பார்ப்பா... ஒரு சினிமாவுக்குப் போவாங்க... அந்த சுகம் இங்க வருமா...

"எல்லாம் சுகம் கண்டுக்கிட்டாங்க..."

"நாங்கூட... கணேசனுக்கு அந்தப் பொண்ணை மூலவீட்லக் கேட்டேனே... இவனுக்குத்தானே முத உரிமை... அதுக்கு மூல வீட்டுக்காரன் என்ன சொல்றான்னா... நாங்கதான் வெயில்லக் கஷ்டப் படுறோம்... புள்ளயாச்சும் நிழல்ல இருக்கட்டுமேன்னு பார்க்குறோம்ங்றான். அவன் பெண்டாட்டி அதுக்கு மேலே...மில்லு வேலைக்காரனுக்காச்சும் கொடுப்போம்... உள்ளூர்ல சம்சாரிக்காரனுக்குத் தரதாயில்லங்றா..."

கணேசனுக்கு மடம் வெறுத்தது. எழுந்து வந்தான். எல்லா வீட்டிலும் ஆள் இருந்தார்கள். அப்பத்தான் காட்டிலிருந்து வேலை முடிஞ்சு வர்ர நேரம். வீட்டுக்கு வந்து சேர்ந்த பொழுது அம்மா தட்டுத் தடுமாறி சமைத்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு பாவமாக இருந்தது. உதவி செய்ய வேண்டும் போல் இருந்தது.

www.padippakam.com



"தள்ளும்மா... நான் அடுப்பெரிக்கிறேன்... விலகு..."

"போடா... அந்தப் பக்கம். ஆம்பளை அடுப்பறைக்கு வரலாமா...அப்டி ரோஷமுள்ளவன் கல்யாணம் பண்ணு... இவ்ள நேரம் தெக்கு வீட்டுக் கலா வந்து ஒத்தாசை பண்ணுனா...அந்தப் பொண்ணு... தங்கமான பொண்ணு... யாரு குடுத்து வைச்சுருக்காங்களோ... அத்தை அத்தைன்னு ஏம்மேலே உயிரை விடறா..." என்று பேசிக் கொண்டே போனாள்.

கணேசனுக்குக் கோபம் வந்தது. "யம்மா... நீ கொஞ்சம் சும்மாயிரு... கொஞ்சம் துட்டு இருந்துச்சுன்னா இவளும் மாசச் சம்பளகாரனைத்தான் கேட்பா... பாவம்... ஏழையாப் பொறந்துட்டா ஒன்ன அத்தை அத்தேன்னு... குழையிறா..."

பத்மா மச்சி வீட்டுக்குள் இருந்தாள். அவளுக்குப் படபடப்பாக இருந்தது. அவளது தோழி சிச்சலாங் காட்டிக் கேலி பண்ணிக் கொண்டிருந்தாள். பத்மா கதவிடுக்கு வழியா மாப்ளயப் பார்த்து மனசில் படம் பிடிச்சிருந்தாள். மனசில் பதிஞ்சு போய், அவளுக்கும் பிடிச்சிருந்து, ஒரே சந்தோஷம்.

"அவங்க எங்கடீ இருக்காங்க..."

"எதுக்க... ஒங்க பெரியப்பா வீட்ல உட்கார்ந்துருக் காங்க... மாப்ள ஜம்முன்னு 'இன்' பண்ணிட்டு வந்துருக் காரு... சும்மாவா... மில்லுல மேஸ்திரியாமில்ல..."

"அதுசரி...எந்தச் சேலை போட்டுட்டுப் போகலாம்... எதுடீ நல்லா இருக்கும்."

"யேய்... சீக்கிரம் ஒனக்குப் பிடிச்சதப் போட்டுட்டு வா... நாம சும்மாக்காச்சும் தண்ணீக்குப் போறோம்... அவங்க ஒன்னைப் பாக்குறதுக்காக... இடுப்புத் தெரிய வாடி... அந்த சதையிலேயே மயங்கிட மாட்டாரு..."

www.padippakam.com



"போடி..."— பத்மாவுக்கு வெட்கமாக இருந்தது. கொஞ்சம் பயமாகவும் இருந்தது. இதுக்கு முந்தி இது மாதிரி மூணு பேரு பார்த்துட்டுப் போய் ஏமாத்திட்டாங்க..."

அப்பா அம்மா, பெரியப்பா வந்தவர்களுடன் ஊர்கதையெல்லாம் பேசிட்டிருக்கும்போது இவர்கள் தண்ணிக்குக் கிளம்பினார்கள். உடனே கொஞ்சம் மௌனம். வந்தவர்களின் எல்லார் கண்களும் பத்மா மேலேயும் தோழியின் மேலேயும். போன பிறகு பெரியப்பா சொன்னார்.

"செவப்பா இருக்குல்ல... அந்தப் பொண்ணுதான்..."

மாப்பிள்ளையின் முகத்தில் சந்தோஷம். மாப்பிள்ளையின் அப்பா பேசினார். "எங்களுக்கு ஒங்களப் பத்தியும் பொண்ணப் பத்தியும் சுப்புராஜ் சொல்லும்போதே பிடிச்சுப் போச்சு... எதுக்கும் ஒரு பார்வை பார்த்துட்டு மத்த விஷயம் பேசிமுடிவு பண்ணலாமென்னு வந்தோம்..."

"அதுக்கென்ன... நம்ம நேரா பார்க்குறதுதானே நல்லது..."— என்றார் பெரியப்பா.

பெண்ணைப் பற்றி எல்லாரும் பெருமையாகச் சொன்னார்கள். வந்தவர்கள் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அலுத்துப் போயிற்று போல.

"அப்ப... நாங்க கிளம்புறோம்... பஸ் அஞ்சரைக்குத் தானே... மணி என்னப்பா ஆச்சு..."

மாப்பிள்ளை கடிகாரத்தைப் பார்த்து சொன்னான்: "அஞ்சு ஆகுது..."

"அப்ப பஸ் ஸ்டாப்புல இருக்கோம்...நாங்க போய்ட்டு வாரோம்... எல்லாம் சுப்புராஜ்கிட்டச் சொல்லியிருக்கோம்...நீங்களும் முடிவா...திங்கட்கிழமை அவன் கிட்டேயே சொல்லி அனுப்புங்க..."

www.padippakam.com



"நான் பேசிக்கிறேன்...நீங்க போய்ட்டு வாங்க..."—என்றான் சுப்புராஜ். சுப்புராஜ் மாப்பிள்ளையுடன் மில்லில் வேலை செய்கிறான். மாப்பிள்ளை மேஸ்திரி, இவன் தொழிலாளி.

எல்லாரும் சிரித்த முகத்தோடு வழியனுப்பி வைத்தார்கள். சுப்புராஜ் கூடவே போனான். வீட்டில் மாப்பிள்ளை பையனைப் பற்றி பேசிக் கொண்டார்கள். நல்ல பையன் என்றார்கள். மாசச் சமபளம் ஆயிரம் ரூவா என்றார்கள். பத்மா தண்ணிக் குடத்தோடு வந்தாள். உள்ளே போய் வெளியே வர அவளுக்கு வெட்கம்.

"நம்ம தரத்துக்குத் தக்கமாதிரி நகை நட்டு கேட்டா... கொடுத்துட வேண்டியதுதான்..." காட்ல நம்ம மாதிரி இவங்கல்லாம் வேலை செய்ய முடியுங்களா...நிழலுதான் லாயக்கு..."

சுப்புராஜ் வந்தான். 'சுப்புராஜ் சுப்புராஜ்' என்று தேவைக்கு மீறிய வரவேற்பு. கெட்டிக்காரன் நல்ல பையன் என்ற உபசரிப்பு.

"மாப்ள ஒங்கூடத்தானே வேலை செய்றார்..."

"ஆமா...அவரு எங்களுக்கெல்லாம் மேஸ்திரி... மாசம் ஆயிரதுதுக்கு மேலே சம்பளம்...அவங்களுக்கு பெண்ணெல்லாம் பிடிச்சுப் போச்சு...செய்றதைததான் கொஞ்சம் ஜாஸ்தியா கேட்கிறாங்க..."

"எவ்வளவு கேட்குறாங்க..."—பத்மாவின் அம்மா கேட்டாள்.

"முப்பது பவுனும் பத்தாயிரமும் எதிர்பார்க்குறாங்க."

www.padippakam.com



எல்லார் முகமும் சுண்டிப் போய் விட்டது. அப்படி இப்படி என்று இருபது பவுன் போடலாம், ஒரு அயயாயிரம் கொடுக்கலாம் என்றார்கள். சுப்புராஜை எப்படியாவது நீதான் பேசி முடிக்கனும் என்றார்கள்.

"எனக்கு நம்ம வீடு நெலமை தெரியாதா...என்ன சொன்னாலும் கேட்க மாட்டேங்றாங்க...ஒங்க பொண்ணு வந்து நிழல்ல உடகாரப் போறா...எங்க பையன் காட்டு வேலையா செய்றான்...மாசச்சம்பள காரன்ங்றாங்க..."

எல்லாரும் யோசித்தார்கள். "அதான் நான் திங்கட்கிழமை கேட்டுட்டு வந்து சொல்றேன்னு சொல்லி யிருக்கேன். நீங்க முடிவு பண்ணிக்குங்க...அந்தம்மா ஒரு பணக்கிறுக்கு ... நகை அவ்ளவுக் கண்டிப்பா கேட்பாங்க..."—என்று சொல்லிவிட்டு சுப்புராஜ் போய் விட்டான்.

பத்மாவுக்கு மனசெல்லாம் வற்றிப்போனக் குளம் ஆகி விட்டது. அப்பா அம்மா நொந்து போய் அவர்களுக்கான வேலையை செய்து கொண்டிருந்தார்ாள். பத்மா மச்சு வீட்டுப் படியில் உட்கார்ந்து யோசிக்கிறாள். ஊருக்குப் பத்தரை பஸ் வருகிறது. அரும்புக்கோடை பஸ் ஸ்டாண் டில் என்றோ ஒரு நாள் பார்த்த ஆள் மாதிரி ஒரு ஆளுடன் பஸ்ஸில் பக்கத்தில் உட்கார்ந்து வருகிறாள். கழுத்தில் மஞ்சள் கயிறுடன் நகையெல்லாம் மின்னுகிறது கண்கள் மாதிரி. அவர் பூட்ஸ் செருப்பு போட்டு, சூட்டுப்போட்டுக் கொண்டு சூட்கேஸ் தூக்கிவர இவள் பின்னால் தலை நிறையப் பூவுடன் பஸ்ஸிலிருந்து இறங்கி வருகிறார்கள்.

முகம் தெரியாத அந்த ஆளுக்காக மனசு அலையும். குளித்துவிட்டு சேரில் உட்கார்ந்து ஃபேனில் தலை முடியை உலர்த்திக் கொண்டு டி. வி. பார்க்கிறாள்

www.padippakam.com



தோட்டத்தில் களை எடுக்கிற பத்மா எல்லாம் ஆனானப் பட்ட தூரத்திற்கு ஓடி மறைகிறாள். வெளியே வந்தால் கேவலம்.

முகம்தெரியாத ஆட்களெல்லாம் நிறைய நகை கேட்க, முடியாமல் ஒரு காலத்தில் அப்பா அம்மா. கணேசனுக்கே தன்னைக் கொடுத்து விடுவார்களோ என்ற பயம். அம்மா மாதிரி களைக் குச்சியுடனும், அரிவாளுடனும் காட்டில் திரிகிறாள் பத்மா. மத்மாவுக்கு அதற்கு மேல் நினைக்க முடியாமல் மனசை இழுத்துப் பிடித்தாள். கண்ணீர் சொட்டு சொட்டாக விழுந்தது. வெளியில் உள்ள இருளெல்லாம் மனசில் புகுந்து பய முறுத்தியது.

அம்மா திண்ணையில் உட்கார்ந்தாள். அலுப்பாக இருக்கும் போல... "அம்மா பத்மா...குழம்பு கொதிச்ச வுடனே இறக்கி வைச்சுட்டு, அப்பா வந்தவுடனே சாப்பாடு போட்டு நீயும் சீக்கிரம் சாப்பிடு..."

... ... ... ... ...

நீ சாப்பிடுய்யா... என்ன யோசிக்கிறே...அம்மா நச்சரிச்சிக்கிட்டே இருக்காளேன்னா என்னோட ஆசை யைச் சொன்னே...எனக்கு பொண்ணே கிடைக்காட்டா என்ன செய்றதுன்னுதான் பயம்...நீ சாப்பிடு ஏ...ராசா..."

"இல்லம்மா...அந்தப் பத்மாவை பொண்ணு பார்க்க வந்திருந்தாங்களே ... முடிச்சுட்டாங்களோ... என்னவோ..."

"அத்தச் சிறுக்கிக பேச்சை நீ ஏன் எடுக்கிற... முடிச்சா என்ன...தொலைஞ்சா என்ன...அமமா பொல பொலவென்று கண்ணீர் வடித்து அழுதாள். கணேசன் மௌனமானான்.

ஏ... ராசா... ஒனக்கு இந்த வெவசாயமெல்லாம் வேண்டாம்யா... காலம் போற போக்கு ஒரு மாதிரியா இருக்கு... வெவசாயம் பன்றதுனால... ராசா மாதிரி மாப்பிள்ளைக்கு எவன் பொண்ணு தாரான்... எப்பாடு பட்டாவது அருப்புக்கோட்டை மில்லுல சேர்யா... அங்கேயே கல்யாணம் முடிச்சு... நீ இருக்குற இருப்புக்கு இந்த சிறுக்கிக நாண்டுக்கிடனும்..."— அம்மா வடிவில் மானாவாரி விவசாயமே கண்ணீரோடு தலைகுனிகிறது. பார்க்கும் திசையெல்லாம் மனசு எரிகிறது.

www.padippakam.com

# தடயம்

பஞ்சவர்ணத்துக்கு வீடு வந்து வீட்டைப் பார்த்ததும் அது முந்தி மாதிரியே இருந்தது. எந்த மாற்றமும் இல்லாமல், குழந்தைகளும புருசனும் அழுக்கில்லாத சட்டைத் துணிகளுடன் வீட்டினுள்ளும், அம்மாவின் மனசிலும் வளைய வளைய வந்தார்கள். குழந்தைகளைப் பார்த்துப் பார்த்து அம்மா மனசு பூரிச்சுப் போனது இவளுக்குத் தெரிந்தது. தாத்தா போடும் சீரணிச் (இனிப்பு மிட்டாய்) சட்டியையும், அடுப்பையும் அம்மா பெருமையாக விவரித்துக் கொண்டிருந்தாள். குழந்தைகளுக்கு அதுதான் குடும்பத்தைக் காப்பாற்றியது என்றாள். உங்கம்மாவுக்குப் பத்துப் பவுன் நகை போட்டதும் அதுதான் என்றாள். தாத்தா நாளைக்குக் காலைல சீரணி போட்டதும் சாப்பிடலாம் என்றாள். தாத்தா இப்ப சீரணி வித்துக் கொண்டு ரெட்டியாபட்டி ஒவ்வொரு தெருவா அலைந்து கொண்டிருப்பார்.

பஞ்சவர்ணத்துக்கு தஞ்சாவூரில் வாடகை வீடும், வீட்டிலிருந்த பொருள்களும் ஞாபகத்துக்கு வந்தன. தஞ்சாவூரில் இருக்குறப்ப தினமும் ஊர் ஞாபகம் வரும்.



படிப்பகம்

www.padippakam.com



ஊரில் சீரணித் தட்டோடு அப்பாவும், கருவக்காட்டுப் புதருக்குள்ளே கைகட்டிச் சிரித்துக் கொண்டே பாண்டியும்தான் இருப்பார்கள். இருவரும் மனசுக்குள் வந்து ஊருக்கு வாவா என்பார்கள். எப்படா ஊர்ப் பொங்கல் வரும் என்று காத்திருந்து இப்ப வந்திருக்கிறாள் குழந்தைகளோடும் புருசனோடும்.

கிராமத்தில் காய்கறி கிடைக்காது என்று வரும்போதே வாங்கி வந்ததை பஞ்சவர்ணம் எடுத்து வைத்தாள். அம்மா காய்கறியைப் பார்த்துக் கொண்டே ஊர்ல தண்ணிக் கஷ்டம் என்றாள். பஞ்சவர்ணத்தின் மனசு வண்ணாக்குடியையே வட்டமிட்டதால் நான் எடுத்தாரேன் என்று குடத்துடனும் வாளியுடனும் கிளம்பினாள். ஓட்டுத் தண்ணி எடுத்து இவளுக்கு மிகப் ப்ழக்கம். முந்தி ஓட்டுத் தண்ணி எடுக்கும் போதெல்லாம் கிணத்தடியில் இவளும் பாண்டியும் குசுகுசுத்துக் கொண்டிருப்பார்கள்.

வீட்டுப் படியிலிருந்து இறங்கும்போது படியைப் பார்த்தாள். படிக்கல் அப்படியே இருந்து காலங்காலமான நடப்புகளை உள்வாங்கிக் கொண்டே இருக்கும். படிக்கல்லுக்குள்ளே பாண்டியும் பஞ்சவர்ணமும் கல்லோடையில் கருவ மரத்து நிழலில் ஜோடியாகச் சிரித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

வீட்டின் முன்னால் ஈரம் படிந்த சாம்பல் நிறம் சின்னப் புள்ளயிலிருந்து அப்படியே இருக்கிறது. புழுதி படாத பஞ்சவர்ணத்தின செருப்புப் போட்டக் காலைப் பார்த்து அதிர்ச்சியுற்றது அந்த சாம்பல் நிறம்.

வீடு தாண்டியதும் பக்கத்து வீட்டில் காமாட்சி அக்கா ஆடுகளுக்குக் குழை கட்டிக் கொண்டிருந்தாள்.

''எப்ப வந்தே பஞ்சு...வீட்டுக்காரர் வந்துருக்காரா...'

www.padippakam.com



“இப்பத்தான் வந்தோம் காமாச்சிக்கா...நல்லா இருக்கியாக்கா...”

“இருக்கோம் ... ஒடைக்காடெல்லாம் முள்ளு பொறுக்கிக்கிட்டு ... எனக்கு இந்தக் காடுதான் லவிச்சிருக்கு... தண்ணிக்கா...”

“ஆமாக்கா...தண்ணீ எடுத்தாந்துரேன்...”

“காமாட்சியின் பேச்சில் ஒற்றை ஊமைப் புறாவின் சோகங் கலந்த குரல்.

வண்டிப் பாதையில் கால் வைத்தவுட்னே, பாதை மனசை இழுத்து வண்ணாக்குடியில் விட்டது. பாண்டியின் குடிசை வீடு. முந்தி குடிசை வீட்டில் அவனுடைய அம்மாவுக்கும் தங்கச்சிக்கும் அவன்தான் ராஜா. வண்ணாக்குடியின் நேர் மேற்கே கண்மாய்க் கரையில்தான் குடிதண்ணீர்க் கிணறு.

வண்டிப்பாதையின் இருபக்கத்திலும் சீமைக் கருவேல் மரங்கள் முளைத்து எல்லாரையும் மிரட்டும். சீமைக் கருவேல் மரங்கள் பஞ்சவர்ணத்தின் மனசுக்குள் புகுந்து மனசின் பிடிபடாத எல்லை வரை செல்லும். அந்த மரங்களின் முற்கள் நெஞ்சில் குத்தி பழைய ஞாபகங்களை நினைவூட்டும். நினைவூட்டி மனசுக்கு வலியைக் கொடுக்கும்.

சின்னப் புள்ளயில அந்த முட்கள் எல்லாம் பஞ்சவர்ணத்துக்கு மிகப் பழக்கம். எவ்வளவு அடர்த்தியான புதரானாலும் உள்ளே புகுந்து சர்வசாதாரணமாக நடந்து போகிறாள். எல்லாக் கிளைகளும் இவளைக் கண்டு வழிவிடும்.

கூடையுடன் செருப்பில்லாமல் ஒடைக் காடெல்லாம் சட்டைப் பாவாடையுடன் அலைகிறாள். எருமை மாடுகள் சாணி போட்டுக் கொண்டு ஒடைக்காடெல்லாம்

www.padippakam.com



மேய்கிறது. மாடு சாணிபோட்ட வாலை எடுத்தவுடன் கூடையுடன் ஓடி கீழே விழாமல் பின்னாடிருந்து பிடிக்கிறாள் பஞ்சவர்ணம். மாடு மேய்க்கும் மூக்கையாவின் அரட்டுச் சத்தம் "மாட்டை மேய விடுங்கடி..." காடெல்லாம் கேட்கும். அரண்டு போய் ஒளிகிறாள் பஞ்சவர்ணம்.

ஓடைக்காடுகளில் இடுப்பில் கூடையுடன் குண்டும் குழியுமாக ஏறி நடக்கிறாள். பஞ்சவர்ணத்துக்கு சாணி எங்கிருக்கிறது என்று கொக்குப் பார்வை. அப்பா சீரணி விக்கப்போகும் போது ஒரு அரட்டுப் பேரட்டுப் போகும்.

"இன்னிக்கு ரெண்டு கூடை சாணி வந்தாத்தான் சோறு..."

பயந்து பயந்து சாணியைத் தேடுகிறாள். மாடு மேய்க்கும் மூக்கையா காமாட்சி அக்காவுக்கு மட்டும் சாணியைத் தேடித் தேடிக் கண்டு பிடித்துக் கொடுப்பார். எல்லாப் பொடியன்களையும் மாட்டை மடக்க அனுப்பி விட்டு மூக்கையா காமாட்சி அக்காவையே சுத்திச் சுத்தி வருவார்.

மூக்கையாவுக்குப் பயந்து பயந்து முள்காடுகளில் நடந்து போகையில் ஓடைகளுக்குப் பக்கத்திலிருந்து பாட்டுச் சத்தம். காற்று அந்தப் பாட்டைப் பெருமையுடன் சுமந்து வருகிறது. பஞ்சவர்ணத்துக்கு அந்தப் பாட்டைக் கேட்க காதுக்கு இதமாக இருந்தது.

"சோதனைமேல் சோதனை போதுமடா சாமி..."குரல் சின்னப் பையன் குரல் மாதிரி கேட்கிறது. பாட்டைக் கேட்டுக் கொண்டே கூடையுடன் அந்தப் பக்கம் போகிறாள். உப்போடைக் கோரையில் பத்து பதினைந்து எருமை மாடுகள் மேய்கின்றன. தரையோடு தரையாக இருந்த புல்லை நக்கிக் கொண்டிருக்கின்றன. கருவ

www.padippakam.com



மரத்து நிழலில் பாண்டி படுத்துக்கொண்டு பாடிக் கொண்டிருக்கிறான். "சொந்தம் ஒரு கை விலங்கு நீ போட்டது..."

பஞ்சவர்ணம் அவனைத் தாண்டிப் போகையில் அவன் கூப்பிட்டான்.

"சாணி பொறுக்கிறியா?"

"ம்."

"ஒங்கப்பா சீரணி இன்னிக்குப் போட்டாரா..."

"ம்..."

"நாளைக்கு எனக்குக் கொஞ்சம் சீரணி தர மாட்டியா..."

பஞ்சவர்ணம் என்ன சொல்வதென்று முழிக்கிறாள். பயமற்ற அன்யோன்யம் அவளுக்குக் கிடைக்கிறது.

"சீரணியை வெளியே கொண்டு வந்தா எங்கப்பா அடிக்கும்..."

'பாவாடைக்குள்ளே மரைச்சுட்டு வா... எனக்கு நீ சீரணி கொடுத்தா... நான் ரெண்டு கூடை சாணி தாரேன்..."

"ம்... நீ பள்ளிக்கூடம் போவலையா..."

"இல்ல... எங்க ஆத்தா நாய்க்கரு வீட்ல மாடு மேயுடான்னுட்டா..."

"மாடு போடுற சாணியெல்லாம் நான் எடுத்துக்கு வேனாம்... யாருக்கும் தெரியாம ஒனக்கு சீரணி தருவேனாம்... ம்... என்ன பாண்டி..."

பஞ்சவர்ணத்துக்கு அவன் மேல் பிரியமாக இருந்தது. அவன் பாடிக் கொண்டிருக்கிறான். தரையில் கையால்

www.padippakam.com



தாளம் போட்டப்படி, "சித்தாடை கட்டிக்கிட்டு...சிங்காரம் பண்ணிக்கிட்டு..."—பாடுகிறான்.

முதலாளி மாடுகளுக்குப் பின்னால் பாண்டியும், பாண்டிக்குப் பின்னால் பஞ்சவர்ணமும் ஓடைக் காடுகளிலும், தரிசுக் காடுகளிலும் அலைகிறார்கள்" பாண்டியின் பாட்டுக் கேட்கும் தூரம் வரை மாடுகள் மேய்ந்து திரும்பும். பஞ்சவர்ணத்துக்குப் பாண்டியின் பாட்டாகக் கூடைநிறையச் சாணி. சோகமாகப் பாடு கிறான். சந்தோஷமாகப் பாடுகிறான். டப்பாங்குத்தாக அசிங்கமாகப் பாடுகிறான். அது எந்தப் பாட்டாக இருந்தாலும் பஞ்சவர்ணத்துக்குப் பிடிக்கும.

ஒவ்வொரு மதியமும் சாப்பிடும்போதுகூட காதுகளில் பாண்டி ரீங்கரிக்கிறான். ராத்திரிக் கனவுகளில் பஞ்சவர் ணத்துக்குப் பாண்டி புளியம்பழம் பிடுங்கிப் போடுகிறான்.

மதியம் சாப்பிட்டுவிட்டு, உடைந்த சீரணிகளைத் தின்னக் கொடுத்து கணிமாயில் அடையும் ஆடுகள் போனவுடன் சாணி பொறுக்கி வா என்று சொல்லு கிறாள் அம்மா. சீரணியைப் பேப்பரில் மடக்கி பாவாடையில் மறைந்து கண்மாய்க் கரைக்கு வருகிறாள் பஞ்சவர்ணம். ஒவ்வொரு ஆலமரத்துக்குக் கீழேயும் ஆட்டுக் கூட்டம் படுத்து அசை போடுகிறது. ஆடுகள் எழுந்து போறவரைக்கும் இருந்து பிறகு சாணி பொறுக்க வேண்டும்.

கண்மாயின் மேற்குக் கரையெல்லாம் பாண்டியைத் தேடுகிறாள். காணவேக் காணோம். இவள் பேசாமல் உட்கார்ந்தவுடன் "ஊ... ஊ..."— என்று குரல் கேட்கிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மறைவிடத்திலிருந்து குரல் கேட்கும். ஒவ்வொரு நாளும் ஆலமர வேரில் குரங்கு மாதிரிக் கவ்வித் தொங்குவான். சீரணியை இந்தா என்கிறாள். அவன் வாங்கித் தின்னுட்டு வேரில்

www.padippakam.com



ஊஞ்சலாடி வேருக்கு வேர் தாவினான். பஞ்சவர்ணம் வாயைப் பிளந்து பார்த்து சந்தோஷப்படுகிறாள்.

"நீயும் ஊஞ்சலாடுறயா..."

"வேண்டாம் போ..."

வேரில் ஊஞ்சலாடிக் கொண்டே கண்மாயின் நடு ஆழத்தில் போய் குதித்தான். பஞ்சவர்ணம் அய்யய்யோ என்று தேடியபொழுது அவன் முங்கு நீச்சில் கரையோரத் துக்கு வந்து எழுந்து "பஞ்சவர்ணம்" என்கிறான். இவன் கண்மாயில் குதித்தபொழுது தெறித்த நீர்த்திவளைகள் மாதிரி பஞ்சவர்ணத்துக்குச் சிரிப்பு. உயிர் போய் உயிர் வந்த சிரிப்பு.

ஆலமரங்களின் உச்சிகளுக்கெல்லாம் சென்று காய்ந்த விறகுகளை ஒடித்துப் போடுகிறான். பஞ்சவர்ணம் கீழிருந்து பொறுக்கி கட்டுகட்டி வீட்டில் படப்பாய் அடுக்கு கிறாள். அம்மாவுக்குப் பெருமை. "பஞ்சு சாணியோட் மழைக்காலத்துக்கான வெறகும் சேர்த்துட்டா... கெட்டிக்காரி..."

காடெல்லாம் பார்த்துக் கேலி செய்ய, ஒருநாள் பஞ்சவர்ணம் அம்மாவின் பழைய சேலையைத் கிழித்துத் தாவணியாகப் போட்டு வருகிறாள். மாடுகளை ஓடைக் குள் விட்டு விசிலிலேயே 'மஞ்சனத்தி மரத்தைப் பாரு மதினி போற போக்கைப் பாரு...' என்று இவன் பாடிக் கொண்டிருந்த பொழுது, இவனைப் பார்த்ததும் தாவணியை இழுத்து இழுத்து விட்டுக் கொண்டு வருகிறாள்.

"அய்ச் சக்கை... பெரிய மனுஷி ஆய்ட்டியா... அர்ரா..."

"போ... பாண்டி..."

www.padippakam.com



இவன் தாவணியை பிடித்து இழுத்து சீண்டிப் பார்க்கிறான். ஒவ்வொரு சீண்டலுக்கும் ஒரு சினுங்கல்.

"விடுபாண்டி... சீ விடு. நீ சுத்த மோசம்..."

இந்த மாதிரி சீண்டல்கள் பஞ்சவர்ணத்தை வீட்டிலெல்லாம் வாய்க்குள்ளேயே சிரிக்க வைக்கிறது. சீண்டல்களைச் சுமந்து கொஞ்ச காலம் போனபோது பஞ்சவர்ணம் சாணி பொறுக்க வரவில்லை. பாண்டி ஓடைக் காடுகளியெல்லாம் அவள் தடயததைத் தேடுகிறான். அவள் நடந்து வந்த சத்தங்களை பாதையில் காது வைத்துக் கேட்டுச் சந்தோஷப்படுகிறான் பஞ்சவர்ணத்தைப் பார்க்கவே முடியவில்லை. ஊர்ப் பொங்கலில் ரேடியோ பாடிய சோகப் பாட்டுக்களை எல்லாம் இவன் மாடுகளுக்குப் பாடிக் காண்பிக்கிறான்.

பஸ்ஸிலிருந்து இறங்கிய அவளுடைய சொந்தக்காரர்கள் எல்லாம் அதுக்குள்ளே வயசுக்கு வந்துட்டாளே என்று சொல்லிப் போகிறார்கள்.

மாடுகளுக்குப் பின்னால் அலைந்தது போதும் என்று மரம் வெட்டப் போனான் பாண்டி. இவன் வெட்டிய மரங்களைக் கொண்டு தேவமார்கள் மூட்டம் போட்டார்கள். மரம வெட்ட வெட்ட இவன் தோள்கள் திரண்டு உருண்டன. நெஞ்சை நிமிர்த்தி, பளபளக்கும் அரிவாளுடன் இவன் மரப வெட்டப் போகும் போது, பஞ்சவர்ணம் எதுக்கே தண்ணீர் எடுக்க வருகிறாள். ஒருவரை ஒருவர் கள்ளப் பார்வை பார்த்துக் கொண்டார்கள். பார்த்த பார்வையில் ஒவ்வொருவரின் உருவமும் இன்னொருவரின் ஆழம் காணாத மனசுக்குள் சென்று தங்கும்.

மரம் வெட்டித் திரும்பும் சாயங்காலம் நேரம், இவள் தலையில் குப்பைக் கூடையுடன் காட்டுக்குப் போகிறாள்.

www.padippakam.com



குப்பை போடப் போகும் போது பின்னாடி பாண்டி ஓடி வருவதாய் இவள் மனசுக்கு மட்டும் கேட்டு வெட்கமாய் இருக்கும். இவள் ஒத்தையில் குப்பை எடுத்துப் போகும் போது பாண்டி மனசு இவள் பின்னாடியே அலையும்.

இப்பவும் மனசுக்குள் அந்த நாள் வந்து விசுவரூபம் எடுக்கிறது. பாண்டி பக்கத்தில் வந்து பேச முடியாமல் எச்சில் விழுங்கிக் கொண்டு நிற்கிறான். அந்த நாளில் இவள் குப்பை போட்டுத் திரும்பிய போது பாண்டி முள் புதருக்குள்ளிருந்து வருகிறான். இவளுக்குப் பயம். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டாள்.

பாண்டி அவள் பக்கத்தில் வந்து நிற்கிறான். அவ்வளவுதான். இவள் குப்பைக் கூடையுடன் ஒரே ஓட்டமாக ஓடி வருகிறாள் ஊரை நோக்கி.

மறுநாள் குப்பை போடப் போகும்போது காட்டில் பார்க்கும் இடமெல்லாம் பாண்டி நிற்கிறான். எங்காவது ஒளிந்திருந்தால் நல்லதே என்று மனசுக்குள் ஏக்கம். எங்கும் காணோம். காணாதது இவளுக்கு வருத்தம். காட்டில் குப்பை போட்டுவிட்டு கல்லோடையில் இறங்கி அடுத்த கரையில் ஏறும்போறு பாண்டி திடுக்கென்று எதிரில் நிற்கிறான். எங்கோ ஒளிந்திருக்கிறான். கால்களை எடுத்து வைக்கமுடியாத அதிர்ச்சி. கல்லோடையின் கருவக்காட்டுப் புதர் அவர்களை வரவேற்கும். அதற்குப் பிறகு கல்லோடையின் புதருக்குள் இருந்த நிழல் இவர்களின் பாட்டைத்தான் பாடி வருகிறது. புதரில் உள்ள மணலெல்லாம் அலைக்கழியும்.

இவர்களின் குறும்புகளையும், சீண்டல்களையும், இவர்கள் பரிமாறிக் கொள்ளும் ஊரின் அந்தரங்கத்தையும், காட்டுக் கருவேல மரங்கள் கேட்டுத் தலையாட்டிச் சிரிக்கும். அந்த மரங்கள் இப்படிச் சந்தோஷமாக இருந்த ஒரு நாள் பஞ்சவர்ணத்தின் அண்ணன், தஞ்சாவூரில்

www.padippakam.com



கடை வைத்திருக்கிறவன் மாப்பிள்ளையோடு வருகிறான். எல்லார்க்கும் பிடிபடாத சந்தோசம்— பஞ்சவர்ணத்தைத் தவிர. மாப்பிள்ளைக்குப் பெண் பிடித்துப் போனது. அண்ணன் மாப்பிள்ளையைக் கெட்டிக்காரன் என்கிறான் பத்துப் பைசா கருப்பட்டியை இருபது பைசாவுக்கு விற்று விடும் கெட்டிக்காரன். கடைவைத்துக் கொடுத்தால் பிழைத்துக் கொள்வார்கள் என்றார்கள். தஞ்சாவூருக்குப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போய் அங்கேயே கல்யாணம் வைத்துக் கொள்ளலாம் என்றார்கள். நாளைக்குக் காலைல எட்ரைக்கு கிளம்பணும் என்றார்கள்.

பஞ்சவர்ணத்துக்குப் பயமும் சோகமும். வெளியே வந்து வண்ணாக்குடியை எட்டிப்பார்க்கிறாள். குடிசைகள் ஆளின்றி இவள் மனசைப் பிழியும். பாண்டி எந்தக் காட்டிலோ மரம் வெட்டுகிற சத்தம் இவள் நெஞ்சில் விழுந்தது.

அன்றைக்குச் சாயந்திரம் கடைசி கடைசியாகக் குப்பை எடுத்துப் போகிறாள் கண்ணெல்லாம் கண்ணீருடன். மனசு நிறைய பாண்டி நின்று மனசைப் பேதலித் தான் பார்க்கும் தூரம் வரை உள்ள காடுகளைப் பிரிய முடியாமல் இருந்தாள் பஞ்சவர்ணம். ஓடைக்குள் இறங்கிய வுடன் விக்கி விக்கி அழுகிறாள். புதரிலிருந்து எட்டிப் பார்த்தப் பாண்டியைப் பார்த்து குப்பையைக் கீழே போட்டுவிட்டு சத்தமாக அழுகிறாள்.

யாராச்சும் வந்துடுவாங்கன்னு கையைப் பிடிச்சு இழுத்து புதருக்குள் கொண்டு போனான். என்ன என்று அவள் தோளைப் பிடித்து உலுக்கிக் கேட்க, அவள் சொல்ல முடியாமல அழுது கொண்டிருக்கிறாள்.

இருவரும் கண்ணீர் வடிய ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள். நேரம் பாண்டியை போக

www.padippakam.com



வைத்தது. ஒன்றும் சொல்லாமல் அவள் தலையை வருடிக் கொடுத்து விட்டுப் போகிறான்.

வரிசையான கருவமரங்களைத் தாண்டி, கண்மாய்க் கரையில் ஏறும்போது அந்தப் பழைய அழுகை இன்னும் மனசில் கேவலுடன் இருக்கிறது. வண்ணான்கள் துவைக்கும் ஒலி கண்மாய்க்குள் கேட்கிறது. கல்லில் துணியை ஒவ்வொரு அடி அடிக்கும் போதும் ஒவ்வொருவனும் ஒரு ராகம் போடுவான். கண்மாய்க்குள் அந்த ராகம் நிறைந்திருக்கும்.

கிணற்றில் தண்ணீர் கொஞ்சம் இருந்தது. இறைத்துக் கொண்டே கண்மாய்க்குள் பார்த்தாள். நாலைந்து ஊத்தில் நாலைந்து வண்ணாத்திகள் துவைத்துக் கொண்டிருந்தார்கள். வண்ணாக்குடியைத் திரும்பிப் பார்த்தாள். ஒவ்வொரு குடிசையும் ஆளின்றி வெயிலில் காய்ந்தது. கிணற்றில் நீர் இறைக்கும்போது தஞ்சாவூர் வாழ்க்கை சோம்பேறி வாழ்க்கை என்று மனசு உணர்ந்தது, மனசின்றி அலங்கரிக்கப்பட்ட பெண் மாதிரி.

நீர் இறைத்து தண்ணீரை குடத்தில் திரும்பி ஊற்றும் போது அஞ்சு வயசுப் பையன் ஒருவன் ஈயச் சட்டியுடன் நின்று கொண்டிருந்தான். பார்த்தவுடன் பஞ்சவர்ணத்துக்கு பாண்டியின் ஞாபகம் வந்தது.

"அவனுக்கு கொஞ்சம் தண்ணி ஊத்தி விடுங்கம்மா..." ஒரு ஊத்திலிருந்து இப்படிக் குரல் வந்தது. திரும்பிப் பார்த்தாள். கொஞ்ச வயசு வண்ணாத்தி நின்றிருந்தாள் ஈரம் சொட்ட சொட்ட. திரும்பிப் பையனைப் பார்த்தாள். அசல் சின்னப் பாண்டி. காற்று ஊதிய பலூன் மாதிரி அவள் மனசு சந்தோசத்தால் விம்மியது.

"நீ யாரு மகன்டா..."

பையன் முழித்தான்.

படிப்பகம்

www.padippakam.com



"ஒங்க அப்பா பேரு என்னடா..."

"பாண்டி..."—மெதுவாகச் சொன்னான்.

குரல் இவள் காது வழி இறங்கி மனசில் பாண்டி வந்து இவளைக் கிச்சலங்காட்டினான். கண்கள் விரிய மன செல்லாம் அன்பு. பஞ்சவர்ணத்துக்கு மாரெல்லாம் பால் சுரக்கும்.

"படிக்கிறயா கண்ணா..."

"இல்ல..."

"ஒங்கப்பா எங்கய்யா போயிருக்காரு..."

"மரம் வெட்ட..."

சட்டியை வாங்கி அதில் நிறைய நீர் ஊற்றினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் காணோம். வண்ணாத்திகளைத் தவிர. வண்ணாத்திகளுக்குத் தெரியாமல் கிணத்துச் சுவர் மறைவில் நின்று, அவ னுக்குச் சட்டியைக் கொடுத்துவிட்டு, அவன் கன்னத்தில் பதிய ஒரு முத்தம் இட்டாள்.

ஊத்துத் தண்ணி உடம்பில் பட்ட சொரியுடன் அவன் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

படிப்பகம்

www.padippakam.com

இரவு போர்வையாய்க் கவிந்து இருந்தது. போர்வைக் குள்ளும் அவன் பார்வை ஊடுருவும். அவள் ஒரு கையை தலைக்கு அடியில் வைத்து ஒருக்களிததுப் படுததுக் கொண்டிருக்கிறாள். இருளெல்லாம் ஏக்கங்கொண்டு தவிக்கும். ராமசாமிக்கு அடுத்துப் படுத்துக் கொண்டு வானத்தைப் பார்த்து மனசை இவளின்மேல் பாய்ச்சினான். எங்கெங்கோ அலைந்த அவன் மனசை இருள் அவள்மீது படிய வைக்கும்.

இருக்கிற இருளெல்லாம் பயமாய் அவன் மனசில். இருள் தவறுகளை எல்லாம் போர்வை போட்டு மறைக்கும். அவன் இருபது வயது தொண்டையில் தாகமாய் நின்றது. தவறு செய்கிறோம் என்ற உணர்வே அவனுக்கு ஏற்படவில்லை.

அவள் கால்களுக்கும் வயசிருந்தது. பதினாலிலிருந்து பதினைந்துக்குள்ளே சந்தேகம் என்றது. இவன் ஒரு திண்ணையில் படுத்திருக்கிறான். நடுவில் வீட்டுக்குள் செல்லும் பாதை. பாதை வீட்டுக்காரர்களைத் தொலைத்து விட்டு வாடும் இன்னொரு திண்ணையில் இவள் படுத்துக் கொண்டிருக்கிறாள். இவளுடன் இன்னமும் ரெண்டு மூணு சிறுமிகள், படுத்துறங்கினர்.

www.padippakam.com

...ட்டுக்காரர்கள் வயித்துப்பாட்டுக்கு ஓடி எங்கேயோ ...ழுந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தத் திண்ணைகள் ரெண்டும் ஊருக்குப் பொதுவாயின. அவள் அந்த ஊரின் பள்ளியில் சமைக்கும் ஆயாவின் மகள். புருசன் இறந்த பிறகு ஐந்து வருடங்களாக புருஷனின் நினைவுகளுடன் வாழ்ந்து வரும் ஆயாவுக்கு ஒரே மகள். ஆயா எப்படியாவது தன், மகளைப் படிக்கப் போட்டு உத்தியோகத்தில் அமர்த்தி விடவேண்டும் என்று அவளை ஒன்பதாம் வகுப்புப் படிக்கப் போடுகிறாள். இப்பொழுது விடுமுறை. ஊரின் நடுவில் உள்ள அந்தத் திண்ணையில் யார் வேண்டுமானாலும் படுத்துக் கொள்வார்கள்.

மனசு திக்திக்கென்று இரத்த ஓட்டம் அதிகரிக்க அவன் மெதுவாக திண்ணைவிட்டுத் திண்ணைபோய் அவள் பக்கத்தில் படுத்துக் கொண்டான். கண்ணெல்லாம் எரிச்சல். உதடும் நாக்கும் வறண்டு போனது. இருளுக்குள்ளே தூரமாக ஆட்டுக் கிடைகளில் காக்கெடா சின்னச் சின்னக் குட்டிகளை விரட்டித் திரிகிறது. குட்டிகள் தப்பித்து ஓடும். ஓடித் திரும்பிக் கெடாவை முட்டும். கெடா முட்டுகளைக் கம்பீரமாக வாங்கி நிற்கும்.

உடலில் கூச்ச அலைகள் பரவவே, அவளுக்கு விழிப்பு வந்து, நிலைமையைச் சமாளிக்கத் தெரியாமல் ஓவென அழத் தொடங்கி விட்டாள். அவன் வேகமாக எழுந்து ஓடி அடுத்தத் திண்ணையில் ராமசாமிக்கு அடுத்துப் படுத்துக் கொண்டான்.

அவளுக்கு கோபம் அதிகமாகித் திண்ணைவிட்டுக் குதித்து ராமசாமிதான் அவன் என்று எண்ணி சொல்ல முடியாத வார்த்தைகளால் கத்திக்கொண்டு முதுகில் குத்திக் கொண்டிருந்தாள். ராமசாமி தூக்கத்தில் இருந்தானோ இல்லைப் பயமோ தெரியவில்லை. அடிகளை வாங்கிக் கொண்டே இருந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கத்தல் பக்கத்து வீட்டுப் பெண்ணை எழுப்பியது. எழுந்து வந்து என்ன ஏது என்று அவளிடம் கேட்க, அதற்கு அவள் "ரவிமாமா...ரவிமாமா..." விக்கி அழுது கொண்டே சொன்னாள்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது அவனுக்குப் பயம் அதிகமாகி ஒன்றுமே தெரியாது என்ற மாதிரி உறங்குவது போல நடித்தான்.

பக்கத்து வீட்டுப் பெண்ணுக்குச் சிரிப்பாய்...கூச்சமும் சங்கடமும் போல. "சரி...சரி... அழாமப் படுத்துக்கோ... காலையில பார்க்கலாம்..."—என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

ரவி அவள் அழுகையைக் கேட்டுக்கொண்டே கண்ணை மூடிக் கொண்டிருந்தான்.

"இருடா காலிப்பயலே... எங்கம்மாகிட்டச் சொல்றேன்" என்று அவள் கிழிந்த பாயைச் சுருட்டிக் கொண்டிருந்தாள். வீட்டுக்கு நடுச்சாமத்தில்போய்க் கதவைத் தட்டினாள். என்ன ஏது என்று ஆயா எழுந்து வந்தபோது அவள் விசும்பி விசும்பி அழுதாள். கூச்சமாயிருந்தது. விஷயம் கேள்விப்பட்டவுடன் ஆயாவுக்கு மனசைத் தட்டிவிட்ட ஆக்ரோஷம். வேகமாக வந்தாள்.

"ஏண்டா...ஒனக்கு அக்கா தங்கச்சி இல்லயா... பச்சை மண்ணைப் போட்டு...த்தூ... பாவி... நீ விளங்குவியாடா..."—என்று தன் எரிச்சலை வார்த்தையாக்கி விட்டுப் போனாள்.

இரவு எல்லா நிகழ்ச்சிகளையும் சுருட்டிக் கொண்டு ஓடியது. ஆயாவின் மனசில் மட்டும் அது கரும்புள்ளியாய் இருந்தது. பள்ளியில் சமைக்கும்போது எரியும் புகையில் புருஷன் வந்து வந்து போனான். ஆயாவின் மனசு நெருப்பாய் எரியும். பள்ளியின் பக்கம் சீனிவாசன்

www.padippakam.com



புல்லறுக்கப் போய்க் கொண்டிருந்தார். அவரது யோக்கியத்தையும், நேர்மையும் ஆயாவை அவரைக் கூப்பிடச் செய்தன.

“என்னம்மா...” —என்றார்.

பக்கத்தில் போய் இப்படி இப்படி என்று சொல்லி விட்டு, “நீங்கக் கூப்பிட்டுச் சத்தம் போட்டு வைய்ங் கண்ணே...”—என்றாள்.

“சரி... சரி...”—என்று மனசில் சிரித்துக் கொண்டு புல்லறுக்கப் போனார்.

அவனுக்குப் பகலெல்லாம் பயம். யாரையும் பார்க்கக் கூச்சம். யாராவது தெரிந்து கேட்டு விட்டால்... மனசு பயந்தது. வீட்டுக்குள்ளேயே இருந்தான். இவன் தவறை மறைகக இவனே முந்திக் கொண்டு தான் குற்ற வாளி இல்லை என்றான். அமமாவிடம் சொன்னான்.

“நான் ஒண்ணுமே செய்யாததுக்கு... என்னய இப்டி யெல்லாம் வய்றாபமா அந்த ஆயா...” —என்றான்.

“அதெதுக்கு ஒன்ன வய்யுது நீ சும்மா இருந்தா...”

“நான் ஒண்ணுமே செய்யலைம்மா... நான் தப்புப் பண்ணியிருந்தா என்னத்தானே அடிக்கணும்...ஏன் ராமசாமியை அடிக்கிறா... நீ வேணா அந்தச் சீதாக்கா கிட்டக் கேட்டுப் பாரு...”

ரவியின் அம்மா பக்கத்து வீடு போய் கேட்டாள். கிராமத்தில் எல்லாப் பெண்களுக்கும், ஆண்களால் உடம்பு தொடப்பட்டுத் தழும்பாகி, தழும்புகள் நிறைய வற்றை மூடி மறைத்துக் கொண்டிருந்தது. சீதாக்காவும் அப்படித்தான். அவளது மனசில் அது ஆண்களது உரிமையாகக்கூட இருக்கலாம்.

www.padippakam.com



“ரவி ஒண்ணும் செய்லைம்மா...பாவம் அப்பிராணி... என்ன அழுகைச் சத்தம்னுப் பாத்தா வஞ்சிகிட்டே ராம சாமியை அடிச்சிட்டிருந்தா...ரவிமேலே தப்பேயில்ல...”

ரவியின் அம்மாவுக்கு எரிச்சல்; “அந்த முண்டை யாரு மேலயாச்சும் பழியைப் போடுறதுன்னு அலையிறா... அதுக்கு எம்மவன் என்ன செய்வான்...”

ரவியின் அம்மாவுக்கு இது புதுசாகவும் இருந்தது எல்லாக் கிழவிகளுக்கும் அப்படித்தான். ஆண்கள் பெண் களிடம் நடந்து கொள்ளும் முறையை வெளியே சொல்லக்கூடாது. வெளியே சொன்னால்தானே பிரச்னை.

“நீ யேண்டா... வீட்டுக்குள்ளே முடங்கிட்டே... ஆம்பளைக்கு என்ன வெட்கம்...” —என்று சொல்லிக் கொண்டு ரவியின் அம்மா படியேறும் போது ஆயா பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருந் தாள். பார்த்தவுடன் பிள்ளையின் மீதுள்ள நம்பிக்கை கோவமாகியது.

“கழுதைக... பொட்டைகளை பெத்து வச்சுட்டு அலையுது... எப்டியாச்சும் பழியப் போட்டு கட்டி வைச்சுடலாம்னா யாரு ஏமாந்துட்டிருக்கா...”

ஆயாவுக்குச் சுருக்கென்றது. மனசில் விழுந்த கரும் புள்ளியை ஊசியால் குத்திய மாதிரி. திரும்பித் தாக்கி னாள்: “ஓ... மொள்ளமாரிப் புள்ளக்கு அவ பொண்ணு குடுப்பா... கண்டிக்க வக்குல்ல... ஒன்ன மாதிரிதானே... ஓமபுள்ளயும் இருக்கும்...”

“என்னடி சொன்னே... தேவடியா... அருப்புக் கோட்டை மில்லுல கூத்தடிச்சது தெரியாதாக்கும்... ஏமி புருசன் வெளிநாடு போய் சம்பாரிச்சா.. ஓம் மூக்குல ஏண்டி வேர்க்குது...”



படிப்பகம்

"ஆமாமா... ஏமாந்துட்டுருக்காக... ஒம் புருசன் சம்பாதிச்சது தெரியாதாக்கும்... எத்தனை பேருகிட்ட வெளிநாடு கூட்டிட்டுப் போறேன்னு... பணம் பறிச்சார்னு ஊருக்கேத் தெரியுமே... தூ... இதெல்லாம் ஒரு பொழைப்பா..."

"போடி... ஒம்பொழைப்பு எனக்குத் தெரியாதா..."

ஆக்ரோசம் மிஞ்சிக் கெட்ட வார்த்தைகளைத் தேடியது. கூட்டம் கூடியது. கூட்டம் குசுகுசுத்துச் சிரித்துக் கொண்டது. இருவரின் அந்தரங்கங்கள் வெளியே தெறித்து விழுந்தன. சீனிவாசன் வந்து ஒரு அரட்டுப் போட்டார். கப்சிப் என்றாகியது. ரவிதான் அமைதியைக் கிழித்தான்.

"நான் எப்ப அந்தப் புள்ளயப் புடிச்சி இழுத்தேன்... நான் பாட்டுக்கு வேற திண்ணயில படுத்து இருந்தேன்..."

"நாயே... நாயே... பேசாதேடா... படிக்கிற பையனும் மூஞ்சியும் பாரு..."

"என்ன மாமா... சின்னப் பொண்ணு பேச்சைக் கேட்டுட்டு... நீங்களே இப்படிப் பேசுறீங்க... ஏம்பையன் அப்படிச் செய்வானா..."— என்றாள் ரவியின் அம்மா.

"எனக்கு எல்லாம் தெரியும்... நீ ஒண்ணும் பேசாதே... சண்டை போட்டுக்குற விசயமா இது.. சிரிக்கப் போறாங்க... போங்க... போங்க... அருவமில்லாம மூஞ்சியில அடிக்கறத விட்டுட்டு..."

"இல்லண்ணே... நான் முந்தாநாத்து பத்ரை பஸ் விட்டு வரும் போது ஏம்மக பக்கத்துல படுத்திருந்தான்... என்னப் பாத்துதான் எழுந்து போனான்..."

"அப்பவே ஏங்கிட்டச் சொல்ல வேண்டியதானே... செருப்பால சாத்தியிருப்பேனே..."

“நான் எப்ப அவபக்கத்துல இருந்தேன்...”— ரவி அழுதான். சீனிவாசன் ஆயாவைப் போகச் சொன்னார். எல்லாரும் போங்க என்றார்.

ஆயா இப்பவும் மனசில் இரவு ஏற்படுத்திய இருட்டுப் புள்ளியுடன்தான் போனாள்.

கூட்டத்தில் நிறைய ரவிகளும், ஆயாவின் மகள்களும் இருந்தார்கள். அவர்களின் ரகசியங்கள் இருட்டில் இருந்தன. அதனால் வெளியில் வந்த இந்த ரகசியத்தைப் பார்த்துச் சிரித்து விட்டுப் போனார்கள். தப்பித்துக் கொண்டதற்கான சிரிப்பு.

நாலைந்து கிழவிகள் மட்டும் ரவியின் வீட்டுப் படியில் அமர்ந்து கொண்டார்கள். ரவியின் அம்மா தன் மகன் மீது தப்பில்லை என்று அவனுக்கு இல்லாத நற்குணங்க ளெல்லாம் இருப்பதாகச் சொன்னாள். கிழவிகள் பரம்பரையானக் குசுகுசுப்பை இப்பவும் தொடர்ந்தார்கள்.

“என்ன இருந்தாலும் அந்தச் சிறுக்கிக்கி அடக்கம் ஒடுக்கம் இல்லேம்மா... இப்படியா ஊரைக் கூட்றது... சே... கண்றாவி... நம்ம வயசுல நடக்காதது...”

“இல்லக்கா... நம்ம அலமேலு காத்துக் கருப்பா அந்த வீட்லதான அலையுறா...அவளுக்குத்தான் பயந்துருப்பா... அவளும் இப்படித் திரிஞ்சுதானே நாண்டுக்கிட்டா...”

www.padippakam.com

# கரைதல்

"எப்படா கண்ணா வந்தே?"

"இப்பத்தான் வந்தேன்பா..."

"பரீட்சை நல்லா எழுதினியா...அம்மா என்ன இன்னும் காணோம் காணோம்னு வருத்தப்பட்டுட்டே இருந்தா...நேத்து வர்ரேன்னு சொல்லிட்டு...ஏன் நேத்து வல்ல..."

"வரமுடியலைய்யா ... பரீட்சைக்கு முழிச்சிருந்து படிச்சதுனால ராத்திரி தூங்கிட்டு காலைல வந்தேன்..."

அப்பா கதவைத் திறந்து உள்ளே போனார். உடம்பெல்லாம் சுருங்கல் விழுந்து, வேஷ்டியை தார்பாய்ச்சி இருந்தார். உடம்பெல்லாம் வியர்வை கலந்த தூசு கம்பங்கருது பொரக்குறாங்க என்று சொல்லியது.

"அம்மாவும் நானும் மேலக்காட்டுல கம்பங்கதிரு பொறுக்கிட்டு இருக்கோம். மூணு சாக்கு இருக்கும். ஒண்ணை இப்பத்தான் கொண்டு வந்து போட்டேன்... இன்னும் ரெண்டு சாக்கு இருக்கு..."—கொஞ்சம் நிறுத்தி, "நீ ஒரு சாக்கு மூடை எடுத்து வந்துடேன்...நான் வரும்போது ஒண்ணு எடுத்து வந்துர்றேன்"—என்றார்.

www.padippakam.com



உடனே என் முகத்தில் வருத்த ரேகை...“சரி”—என்றேன். மனதில் ஒரு கசப்பு. பேச்செல்லாம் உள் வாங்கும். மனசுக்குள்ளே இன்ன இன்னாருக்கு இன்ன வேலை என்று படிமம். அப்பாவின் மீது...இனங்தெரியாத ஒன்றின் மீது எரிச்சல், கோபம். வந்தவுடன் வேலை. நான் எப்படி வேலை செய்ய முடியும். எம். ஏ. முடிச்சுட்டு மூட்டை தூக்கவா?

அப்பாவுக்கு மிகப்பெருமை. மகன் படிப்பது அவர் உடம்புக்கு வலுவூட்டும். கஷ்டப்பட்டு மகனைப் படிக்கப் போடுவதை ஊர் சொல்லும்போது மனசு கன்றுக் குட்டியாய் துள்ளும்.

“மூணு சாக்கு கதிர்தான் இருக்கும்னு கூலி ஆளு விட்டா கட்டுபடியாகாதேன்னு நாங்களே செஞ்சுட்டு இருக்கோம்...”

அப்பா பேசப் பேச நான் கதவுக்குத் துணையானேன். மனசுபோல கதவு ஆடிக்கொண்டிருந்தது. மனசின் சைத்தான் சாவியை ஆட்டிக்கொண்டிருந்தது.

“பூட்டை...ஏண்டா ... ஆட்டிட்டிருக்கே ... கண்ணா ...ஒன்னை வேலை சொன்னா அம்மா கோவிச்சுக்குவா... அப்பாவால முடியல கண்ணா...”

அப்பாவுக்கு வயசு அறுபது. அவர் பிறக்கும் போதே கூடப் பிறந்தது உழைப்பு. அவர் உழைப்பு எங்களை ஆளாக்கியது. இரண்டு அண்ணன்களும் மில்லில் உழைக்கிறார்கள். இவர்களது உழைப்பால்தான் என்னால் படிக்க முடிகிறது. உழைப்புக்குப் பல உருவம், படிக்க வைக்கும் இன்னொருத்தனைப் பணக்காரனாக்கும்.

“சாப்புட்டு வா...நான் போய்ட்டு இருக்கேன்...”— அப்பா கிளம்பினார்.

www.padippakam.com



கண்ணாடியில் உடம்பை பார்த்துக் கொண்டேன். கிராமத்துக்கு ஒவ்வாத உடம்பு. என் மனம் அழுதது. "என்னைப் போய் வேலை செய்யச் சொல்லலாமா...?"

அடுப்பறையில் மண்பானையைத் திறந்தேன். கம்பங் கூழ் இருந்தது ஒரு கை அள்ளினேன். கரப்பான் பூச்சி கம்பங் கூழில் குளித்து செத்திருந்தது. அதைத் தூக்கி எறிந்து விட்டு கொஞ்சம் கரைத்துக் குடித்தேன்.

போவோமா வேண்டாமா என்ற யோசனை. வெளியில் அடித்த உச்சி வெயில் என் மனசில் அடித்தது. ஊருக்கே வந்திருக்கக் கூடாது என்ற எண்ணம். வாழ்வின் அனைத்து எரிச்சலும் என் மனத்தில் இருந்த மாதிரி... துக்கம் தொண்டையை அடைத்தது. வரமுடியாது என்று சொல்லி இருக்கலாம். பயமும் மரியாதையும் அதைத் தடுக்கும்.

நடந்தேன். பாதி கிலோ மீட்டர் இருக்கும். வேர்வை கசகசவென்று கோபத்தை அதிகமாக்கியது. வெயிலும் சூடேற்றிற்று. ரெட்டைத் தடம் பாதை கால்களுக்குத் தெரியும். வண்டிப்பாதையின் நடுவிலும் பயிர் வைத்திருந்தார்கள். பருத்தி, நாத்து, கம்பு என்று காடெல்லாம் ஒரே விளைச்சல் மயம். எல்லாக் காட்டிலும் திட்டுதிட்டாய் மனிதர்கள். மனசில் ஒரு பாரம். முகத்தில் ஒளிகம்மி. சோர்வு.

ஒவ்வொரு காடு தாண்டும் போதும், பருத்தி, கம்பு, மல்லி என்று தாண்டிக் கொண்டே என் பின்னால் நகர்ந்தது. என் மனசின் அனலில் கல்லூரிக் கட்டிடம் ஆடியது. பேராசிரியர்கள் அவர்களுக்கே உரித்தான பாணியில் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த பரந்த காட்டுக்கு அதெல்லாம் தெரியாது. எப்பொழு தாவது தெரியும். தெரிகிற தூரம் என் மனசில் இல்லை. எதிரே எதிர் வீட்டு அத்தை காட்டுக்குப் போய்விட்டு வந்தாள்.

www.padippakam.com



“எப்படா வந்தே...”

இப்பத்தான் வந்தேன்தே...”

“இந்த வெயிலுல எப்டி போறே... படிக்கிற பையன் பேசாம உட்காருவியா... வெயில்ல அலைஞ்சுட்டு...”

“சும்ம இருக்காரா... தொண தொணன்னு... மூட்டை தூக்குடான்னுட்டாரு அப்பா...”

“படிச்ச புள்ளங்க எங்க வேலை செய்றாங்க... நம்ம குமாரு பத்தாம வகுப்பு முடிச்சுட்டு... அருப்புக் கோட்டையில படிக்கிறான்... அவன் லீவுல வந்தா கடைக்குக் கூடப் போகமாட்டேன்கிறான்...”— எனபது என் காதில் சத்தம் குறைந்து கொண்டே கேட்டது.

நான் நடந்து கொண்டே காடு அடைந்தேன். அம்மாவின் பாசம் அவள் முகத்தில் மலர்ந்து என்னை இழுக்கும். வெயிலில் கருகும் உடம்பில்தான் எவ்வளவு அன்பு ஒளி. அம்மா என்னைப் பார்த்த பார்வையில் ஆர்வம் நிறைய இருந்தது.

“பத்தரைக்கு வந்தியாடா... கண்ணு... எத்ன நாளு லீவு தங்கம்...”

“ஏழு நாள்ம்மா...”— பேச்சைச் சுருக்கினேன்.

“ஏண்டா...இந்த வட்டம் கிரங்கிப் போய்ட்டே... இந்த மனுசன் ஒன்னைப் போய் மூட்டை தூக்கச் சொன்னாரு பாரு... சாப்புட்டியா...”

“ம்... சாக்கு எங்க இருக்கு?...”

“எடுத்துடுவியாடா.. நான் ஒண்ணும் அப்பா ஒண்ணும் எடுத்துட்டு வந்துடறோம்... நீ போ...”— அம்மா மனசு பிள்ளைக்காக என்னமும் செய்யும்.

“நான் வந்துட்டேன்ல... ஒண்ணு எடுத்துட்டுப் போறேன்...”

"சரி... சரி... போய் தூக்கி விடுங்க... சும்மா நின்னுக்குட்டு..."

"நான் தூக்கிக்கிறேன்..."—கோபத்துடன் போனேன். அப்பா சும்மா இல்லை. கதிர் பொறுக்கிக் கொண்டு இருந்தார்.

"துண்டு ஒண்ணு எடுத்து வந்திருக்கக் கூடாது... செருப்பு போட்ருக்கியா... எடுத்துடுவியா... பாத்து எடு... வீட்ல போட்டுட்டு எங்கயும் போகாம... வீட்லேயே இரு... நான் வந்து சமைக்கிறேன்.. கம்பங்கூழ் எப்டிததான் சாப்பிட்டியோ..." அம்மா என்றால் அம்மாதான். அவளுடைய பாசம் என்னை கோவத்தின் உச்சியில் ஏற்றியது.

மூட்டையைத் தூக்கி நடந்தேன். மூட்டையும் மனசும் கனத்தது. சுமையின் கனமும், மன எரிச்சலும் நேர்விகிதத்திலிருந்தது. "ஏண்டா வந்தோம்"— என்றாகி விட்டது. கோபம். கோபம். அப்பா மேல், அம்மா மேல், இந்த ஊரின் மேல். எவ்வளவு உழைததாலும் இந்த ஊர் அப்படியே... பாமரத்தனமாய்... நகரங்களில் இவ்வளவு உழைப்பு இல்லாமலேயே கவர்ச்சியாய் இருக்கும். ஒரு வேளை இந்த உழைப்பு எல்லாம் நகரத்துக்குத்தான் போகிறதோ...

அப்பா அம்மாவுடன் பேசக்கூடாது. நாளையே கல்லூரி போய்விடவேண்டும். கழுத்து வலித்தது. எதிரே ஐயர் மாமா வந்தார்.

படிக்கிற பையனைப் பாருய்யா என்றார்..."

சிரிக்க முடியாமல் சிரித்தேன். அவர் சொன்ன அர்த்தம் புரியவில்லை. கேலியா? பாராட்டா? அவர் எதை நினைத்துச் சொன்னாலும் என்னால் கேலியாகத் தான் நினைக்க முடிந்தது.

www.padippakam.com



வீடு வந்து போட்டுவிட்டுப் பேசாமல் படுத்துக் கொண்டேன். ஊரின் ஒவ்வொரு இடமும் மனசில் வந்து போனது. மூன்று மணிக்கு மேல் அமமா வந்தாள். வரும் போதே விறகு எடுத்து வந்தாள். கால் புழுதி போகக் கழுவி சமைக்க ஆரம்பித்து விட்டாள். கடைக்கு ஓடிப் போய் பருப்பு, காய்கறி, அப்பளம் எல்லாம் எனக்கு ஸ்பெஷல். அவள் சாப்பிடாமலேயே தயாரித்துக் கொண்டிருந்தாள்.

நான் படுத்துக் கவனித்துக் கொண்டே இருந்தேன் கோபத்துடன். கொஞ்ச நேரம் போக, அப்பா மூட்டை தூக்கிக் கொண்டு வந்தார். பின் தண்ணீர் குடித்துவிட்டு அரிவாள் எடுத்துக் கொண்டு புல்லறுக்கப் புறப்பட்டார். போகும் போது திண்ணையில் இருந்த மூட்டையை எடுத்து வாசலில் கொட்டினார். கேபபக்கதிரைக் காயப் போட்டுவிட்டுப் புல்லறுக்கப் போனார்.

அம்மா சமையலில் ஆர்வமாய் இருந்தாள். "கம்மஞ் சோறு அப்படியே இருக்கு... சாப்டலயாடா... கண்ணா..." என்றாள்.

"... ..."

"கம்மஞ்சோறு உன்னால சாப்புட முடியுமா... பழக்க மில்லல்ல... சீக்கிரம சோறு ஆக்கிடுறேன்..."

"கம்மஞ் சோறுல... பூச்சி எல்லாம் இருக்கு..."

"பூச்சியா..."— அம்மா பயந்து போனாள். "காலைல காட்டுக்குப் போகனும்னு சொல்லி கோழி கூப்டற நேரம் சமைச்சேன்... தெரியாம விழுந்திருக்கும்... இருட்டுல ஒண்ணும் தெரியல... இதைத்தான் நானும் அய்யாவும் காட்ல சர்ப்பிட்டோம்..."

நான் குப்புறப் படுத்துக் கொண்டேன்.

படிப்பகம்

www.padippakam.com

# பாலம்

பிடுங்கிய களைகள் வெயிலில் காய்ந்தன. பச்சையாய் இருந்த காடு இப்ப தரை தெரிந்தது. பருத்தியும் உளுந்தும் சிறுசா இருந்ததால் கருப்புத்தரையை மூட முடியவில்லை. காலங்காலமாக களைகளைப் பறித்துக் கொண்டே இருககிறார்கள். உளுந்தஞ்செடி சிறுசாய் பச்சையாய் சின்னப்புள்ள மாதிரி கொஞ்ச வைத்தது. லட்சுமி வேகமாகக் களையெடுக்கிறாள். வெயில் உக்கிரமாய் பரவியது. எந்த உக்கிரமானாலும் பழகப் பழக உடம்பு தாங்கும். லட்சுமியை வெயில் ஒன்றும் செய்யவில்லை.

லட்சுமியின் மனசில் நிறையப் பேர் வந்தார்கள். ஊரில் சின்னப் புள்ளயில் வாழ்ந்த தாத்தாக்கள் எல்லாம் வந்தார்கள். தெரிந்த சொந்தக்காரர்கள் எல்லாம் வந்தார்கள். வந்து முன்னால் வெயிலில் எரிந்து மறைந்தார்கள். நிறையப் பேர் மனசுக்குப் பிடித்தமானவர்கள் மட்டும் வந்தார்கள். சுற்றும் முற்றும் பார்த்தாள். காட்டில் தான் மட்டும் புள்ளியாய் இருந்தாள். களைக்கும், தட்டைக்குமாக உயிரைவிட வேண்டியிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



மோகாலி பாப்பா வெயிலில் ஆடி அம்மா அம்மா என்கிறாள். லட்சுமி கண்ணீருடன் வெளியெங்கும் தேடு கிறாள். நெஞ்சில் முள் குத்திய பார்வை. பார்க்கும் திசையெல்லாம் மனசு எரிகிறது. மாரெல்லாம் பாலூறிப் பொங்கி—மனசு பேதலிக்கும்.

பெரியமாமவின் தம்பிப் பாசம்தான் லட்சுமிக்குத் தலையெழுத்து, அதற்கு முன்னால் காடே கதியெனக் கிடந்தாள். மனசெல்லாம் காட்டில் அலையும். அக்கா கல்யாணத்தின் போது பெரிய மாமா சொல்லுகிறார். அக்காளும் இவளும் உள்ளிருந்துக் கேட்கிறார்கள்.

"ஏம்மகனுக்கு பொண்ணு தர்ரதா இருந்தா எந்தம்பி மகனுக்கு சின்னவளைத் தரணும்...அப்டி இருந்தா இந்தக் கல்யாணம் நடக்கும்"...

அப்பா கொடுத்த வாக்கை மீறாமல் போனார்.

வீட்டுக்காரர் கண்ணு கண்ணுன்னுப் பிரியமா இருந்தார். காடெல்லாம அலைந்தார்கள். காட்டில் உள்ள களையெல்லாம் எடுத்தார்கள். காடெல்லாம் புல்லறுத்து மாட்டுக்குப் போட்டார்கள். ஊரெல்லாம் அவர்களின் உழைப்பை மெச்சியது. சிம்னி விளக்கில் இரவெல்லாம் அண்டிக் கிடந்தார்கள். சாமியிடம் கேட்ட புருஷனுக்கான குணங்கள் எல்லாம் வீட்டுக்காரரிடம் இருந்தது. அவளது சந்தோஷம் அதிக வேலை செய்தது.

கம்பர் தட்டை வேய்ந்த கூரை வீட்டிலும் ஈரக் காற்றாய் அன்பு வீசியது. வக்ரங்களைப் போர்வையாய் போர்த்திருந்த ஒரு இரவில் கிசுகிசுத்தாள். ஈரக்காற்றான அன்பு தன் வயிற்றில் ஆவியா உருவெடுத்திருக்கிறது என்று, வீட்டுக்காரர் இறுகக் கட்டிப்பிடித்து நெத்தியில் முத்தமிட்டதை இருள் பார்க்கும். எது செய்தாலும் இரவு இருளாக இருககும்.

செஞ்சுச்சு...அய்யோ..." லட்சுமி அரற்றிய அரற்றில் குடிசையெல்லாம் சோகம் நிறைந்தது.

நேரம் உச்சி நேரம். லட்சுமியின் நிழல் லட்சுமிக் குள்ளே மறையும். எச்சி துப்ப முடியாதிருந்த களைகள் வாழ்க்கையின் கஷ்டங்களாய் பரவியது. லட்சுமி ஆவேச மாய் களைகளைப் பறிக்கிறாள். கானலில் ரெட்டியா பட்டிப் பாலம் ஆடியது. பாலத்தின் மீது பாப்பா, என்னய "இங்கேயே விட்டுட்டுப் போயிடுய்யா..." —என்றாள். லட்சுமி குபுக்கென்று கண்ணீர் வடித்து ஒவென்று அழுதாள். வெயிலுடன் கூடிய வெளி அதை வாங்கி மறைக்கும்.

வேண்டுதலும், சுக்குக்காப்பியும் காய்ச்சலை விரட்ட முடியாதபோது, வீட்டுக்காரர் பாப்பாவை ரெட்டியாபட்டி கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார். அஞ்சு மைல் நடந்தார். அங்கே மருந்து இருந்தது. மருந்துக்கு மருந்தான பரிவு இல்லை அன்பு இல்லை. பாவப்பட்ட ஜென்மங்கள் வரிசையாய் நின்றார்கள். நர்சுகள் அவர்களுக்குள்ளே பேசிக்கொண்டு ஒவ்வொரு வர்க்கும் வரிசையாய் ஊசி போட்டார்கள்.

வீட்டுக்காரர் பாப்பாவைத் தூக்கிக் கொண்டு வேகாத வேனலில் திரும்பி வருகிறார். பாப்பா வெயிலில் வதங்கிப் போகிறாள். ரெட்டியாபட்டிப் பாலத்தின் கீழ் உள்ள தண்ணீர் வீட்டுக்காரருக்குத் தாகத்தை உண்டாக்கும். பாப்பாவைப் பாலத்தின் நிழலில் படுக்க வைத்துவிட்டு உடம்பைத் தொட்டு தொட்டுப் பார்க்கிறார். காய்ச்சல் அப்படியே கொதிக்கிறது.

"அ...ய்...யா அய்...யா அம்மா..."

"அம்மா வீட்ல இருக்குடா கண்ணு...இப்பப் போயி அம்மாவைப் பார்பபம்...அம்மா பாப்பாவை எப்பக் கொண்டு வருவேன்னு சாமி கும்புட்டுட்டே இருப்பா..."

www.padippakam.com



“அய்யா...”

“என்னம்மா கண்ணு... ஒனக்கும் ஒண்ணும் இல்லடா...” வீட்டுக்காரருக்கு பொல பொல என்று கண்ணீர் பாப்பா மேல் விழுந்தது.

“என்னய...இங்கேயே விட்டுட்டுப் போயிடுய்யா...”

“மகளே...”—காளை கதறிய கதறலில் அழுகைச் சோகம்...துண்டைப் போட்டு பாப்பாவை மூடி விறுவிறு என்று வருகிறார்.

வீட்டுக்கு வந்து இருவரும் சோகப்பட்டு அழுது கொண்டிருந்த முன்சாம நேரத்தில் பாப்பா இறந்து போனாள். மஞ்சள் நிறத்தில் அசையாதிருந்த பாப்பா லட்சுமியின் விண்ணுக்குக் கேட்கும் கதறலை கேட்க முடியாதிருந்தாள்.

களைக்குச்சி தரையில் விழுந்தது. காட்டில் ஒப்பாரி வைத்து அழுதாள். களைக்குச்சித் தோண்டத் தோண்டக் காலங்காலமாய் மண்ணுக்குள் இருந்த சோகத்தை வெயில் எரித்தது. எரித்து லட்சுமியின் மனசைப் பற்றியது.

“ஐயோ...எனக்குக் கொடுப்பினை இல்லையே...” வீட்டுக்காரர் பதினைஞ்சு ரூவாக்கு மரம் வெட்டப் போயிருக்கிறார். ஆறுதல் சொல்ல ஆளில்லாமல் லட்சுமி சத்தம் போட்டு அழுது கொண்டிருக்கிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

# மிச்சமாயிருக்கும் வேலைகள்

**கோ**ழிக் கூண்டிலிருந்து தன் ரெக்கைகளைப் பலமாகத் தட்டிக் கொண்டு செவலைச் சேவல் கூவியது. அதற்கு எப்படித்தான் நேரம் தெரியுமோ, பூமிக்குக் கீழே சூரியன் மேலே எழுவதை சேவல்கள் பார்க்கும். நல்ல சுகமான நித்திரைக்கான நேரமிது. வாடைக் காற்று வீசியது. மறுபடியும் செவலைச் சேவல் தன் கம்பீரததைக் காட்டியது. அந்தச் சத்தத்தைக் கேட்ட பாண்டி விழித்துக் கொண்டான். கோழிக் கூண்டின் மேல் உள்ள திண்ணையில் அவன் படுத்துக் கொண்டிருந் தான். மிகப் பெரியக் கொட்டாவியுடன் எழுந்து தன் அழுக்கான வேஷ்டியை சரிசெய்து கொண்டு வானத்தைப் பார்த்தான். சந்திரனுக்குப் பக்கத்தில் உள்ள அந்த நட்சத்திரம், மாட்டுத் தாழ்வாரத்தை ஒட்டியுள்ள வேப்பமரத்தின் உச்சிக்குச் சென்றுவிட்டால் அது கோழி கூப்பிடுற நேரம். அந்த நட்சத்திரம் மர உச்சிக்கு சென்று விட்டிருந்தது.

தான் படுத்துக் கொண்டிருந்த சாக்கை எடுத்து விட்டத்தில் செருகி வைத்தான். எதிர்ப்புறத்தில் உள்ள

www.padippakam.com



மாட்டுத் தாழ்வாரத்தைப் பார்த்தான். மாடுகள் ரெண்டும் படுத்துக் கொண்டிருந்தன. அதை வாஞ்சையோடு கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே இருந்தான்.

வீட்டினுள் விளக்கு வெளிச்சம் திடீரென்று தெரிந்தது. பாத்திரங்கள் சலசலக்கும் ஒலி. வீட்டுக்கார அம்மா எழுந்து கொண்டார்கள். பாத்திரங்கள் கழுவ ஏற்பாடு செய்து கொண்டிருப்பார்கள். இவன் கதவைத் தட்டியவுடனே கதவைத் திறந்துவிட்டார்கள். வீட்டிற்குள் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த கட்டிலில் முதலாளி படுத்துக் கொண்டிருந்தார்.

இவன் பருத்திவிதை ஊறப் போட்டிருந்த வாளியை எடுத்துக் கொண்டான். வெளியே வந்து சாக்கு எடுத்து அதை கொங்காணி செய்து உடலில் மாட்டிக் கொண் டான். வேட்டியை தொடை தெரிய தார்பாய்ச்சினான். வாளியை எடுத்துக்கொண்டு அலமேலு அம்மாள் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள உரலுக்குப் போனான். அலமேலு அம்மாள் இவன் பருத்திவிதை ஆட்டப் போகும் போதெல்லாம் வாசலில் சாணி தெளித்துக் கொண்டிருப்பாள். இவனுடைய உயரத்தில் சிவப்பாக வாட்டசாட்டமாக இருப்பாள் அலமேலு அம்மாள். அலமேலு அம்மாள் அவனுடன் பேசிக்கொள்வதெல்லாம் அந்த நேரத்தில்தான். "இன்னிக்கு எந்தக் காட்டுக்கு?" —என்றுதான் கேட்பாள்.

பக்கத்தில் போனவுடன் அலமேலு வாசல் தெளித்துக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு தெளிப்பிலும் பாண்டிக்கு வரவேற்பு. வரவேற்பு எப்பவும் ரகசியம்தான். வெட்ட வெளிக்கும் அடுத்தவர் மனசுக்கும் தெரியாத ரகசியம்.

அலமேலு அம்மாளின் முகத்திலும், மனசிலும் ஒரு அடக்கமுடியாத ஏக்கத்தை உண்டாக்கிவிட்டு, வீட்டுக் காரர் கோயம்புத்தூர் மில்லில் வேலைபார்க்கிறார். ஒவ்வொரு இரவும் அவர் மனசு ஊருக்கு வந்து அலமேலு

அம்மாளுடன் விளையாடும். இவள்மனசும் கோயம்புத்தூர் போகும். மனசு இப்படி அலைய அலைய உடம்பு எதற்கோ அலைகிறது. உடம்பு அலைகிற அலைச்சல் நடுங்க வைக்கிறது. ஒவ்வொருவரைப் பார்த்தும் பயப்பட வைக்கிறது. உடம்புக்கும் மனசுக்கும் பாண்டியிடம் மட்டும் கொஞ்சம் தைரியம். கூலிக்காரன்தானே!

இவள் உரலில் ஆட்டிக் கொண்டிருந்தபொழுது மெல்லக் கேட்டாள். "இன்னிக்கு எந்தக் காட்டுக்கு?"

"மேலக்காட்டுக்கு..."

அவள் உள்ளே போய் விட்டாள். பக்கத்தில் உள்ள ஊர்மடத்தில் நிறைய இளவட்டங்கள் தூங்கிக் கொண் டிருந்தார்கள். முதலாளி மகனும் அங்குதான் படுத்துக் கொண்டிருந்தான். இவன் பருத்திவிதை ஆட்டி முடித்து போகும் போது, முதலாளி மகனும் எழுந்து கூட வந்தான்.

"எப்பக் காலேஜுக்குப் போறீங்க சின்ன முதலாளி..."

"இன்னும் ஒரு வாரம் லீவு இருக்கு பாண்டி..."

பாண்டி ஆட்டிய பருத்தி விதையை மாட்டுத் தொட்டியில் ஊற்றினான். அந்தச் சத்தத்தையும், வாடையையும் கண்ட மாடுகள் எழுந்து கொண்டு உடலை முறுக்கி பெருமூச்சு விட்டுக் கத்தின. அதைப் பார்த்து இவன் சிரித்துக் கொண்டான். முதலாளி மகன் வீட்டிற்குள் சென்றவுடன் அம்மா காபி கொடுக்க, அதை குடித்துக் கொண்டிருந்தான். பாண்டி மாட்டுத் தொழுவத்துக்குள் சென்றவுடன், அவன் அருகாமையை உணர்ந்தவுடன் மாடுகள் ரெண்டும் அவசரம் காட்டின. அவன் அதை ரசித்துக் கொண்டிருந்த, அந்த அமைதி யான இரவில் அந்தப் பேச்சுக் குரல் தெளிவாகக் கேட்டது.

"என்ன மாவும்மா அது?"

www.padippakam.com



“கேப்பை...கூழு காய்ச்ச...”

“எதுக்கும்மா கேப்பைக் கூழு...”

“வேலைக்காரனுக்கு.. பருக்கையும் கம்மஞ்சோறும் போட்டுக் கட்டுபடியாகுமா...மத்தேனம் ஒரு வேளைக்கு கூழு வேணாம்...அதுக்கு...”

“இன்னிக்குக் காலையில என்னம்மா?”

“சாம்பார் வைச்சிருக்கேன்...முட்டைப் பொறியல்... இன்னிக்கு அப்பா வெளியூரு போறாரு...”

பாண்டி அதற்கு மேல் அந்தப் பேச்சைத் தன் காதில் வாங்காமல் மாட்டை அவிழ்க்கப் போனான். ஒரு மாட்டை அவிழ்த்து கையில் வைத்துக் கொண்டு, இன்னொரு மாட்டையும் அவிழ்த்து, ரெண்டையும் ஒரு சேர விட்டான். அப்பொழுதுதான் ரெண்டும் சமமாகக் குடிக்கும் என்ற எண்ணம். ரெண்டு மாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு குடிக்கையில் கொம்புகள் தட்டிக் கொண்டு ஒலிகள் எழும்பின.

வெள்ளை மாட்டை இழுத்துக் கொண்டு போய்க் கட்டினான். அவனுக்குப் பிடித்தமான கருமையும், வெண்மையும் கலந்த அந்த வலது மாட்டை அதிகம் குடிக்கவிட்டான். அதற்குள் பக்கத்து வீடுகள் சலசலக்க ஆரம்பித்தன. அந்த மாட்டையும் கட்டிவிட்டு, மாட்டுத் தொழுவத்தின் மேலுள்ள கூடையை எடுத்துக் குப்பை எடுக்க ஆரம்பித்தான். பருத்திமாரைக் கொண்டுக் கூட்டிச் சாணத்தையும், கூளத்தையும் அள்ளிப் போட்டான். துப்புரவாகக் குடித்து முடித்தவுடன் மாடுகளுக்கு நாத்து போட்டுவிட்டு மாட்டுக்கு வேண்டியக் கண்மாய்த் தண்ணீரை எடுக்க ஆரம்பித்தான். அந்த நேரத்தில் குடிநீர்க்கிணற்றில் ‘டப்டப்’ என்று வாளிகள் ஒலிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. தொட்டிக்குப் பக்கத்

படிப்பகம்

www.padippakam.com



தில் இருந்த மண்குடங்கள் நிரம்பியவுடன் அந்த பானையை இறக்கி வைத்தான்.

வீட்டுக்கார அம்மா வீட்டைப் பெருக்கி, அசுத்தங் களை ஒரு பெட்டியில் போட்டு, மாட்டுத் தொழுவத்தில் வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். பாண்டி அதை எடுத்துக் கூடையில் போட்டுவிட்டுப் பெட்டியை வீட்டிற்குள் வைத்தான். பின் கோழிக் கூண்டைத் திறந்து விட்டான். செவலைச் சேவல் சந்தோசத்துடன் பறந்து பக்கத்தில் இருந்த ஒரு கல்லின்மேல் ஏறிக்கொண்டது. கோழிகள் அதன் பின்னாடியே ரெக்கைகளை விரித்துக் கொண்டு ஓடின. அந்தக் கல்லில் அனைத்தும் ஒன்று கூடி ஒவ்வொன்றாகக் கலைந்து சென்றன. இவன் கூண்டைக் கூட்டி அள்ளிக் கூடையில் போட்டுக் குப்பைக்கு எடுத்துச் சென்றான்.

இப்பொழுது நன்கு விடிந்திருந்தது. மசகு டப்பாவைப் பார்த்தான். மசகு இல்லை. மேலக்காடு ரொம்பத் தூரம் ஆதலால் உழவுக்கு வண்டி போட்டுப் போக வேண்டும். பாண்டி நெற்தாளைப் படப்பில் எடுத்து, வீட்டின் முன்னால் போட்டு எரித்து, அந்தச் சாம்பலை ஒரு சிரட்டையில் விட்டு எண்ணெய் விட்டுக் குழப்பினான். அது மசகாகிக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் முதலாளி எழுந்து துண்டும் சோப்பும் சகிதமாகக் குளிக்கச் சென்றார்.

“என்னடா...மசகு காலியாயிடுச்சா...”

“ஆமாங்க...”

“எந்தக் காட்டுக்குப் போற இன்னிக்கு...”

“மேலக்காட்டுக்கு...ஒரு உழவு பாக்கிருக்கு...”

“ம்...”—அவர் குளிக்கச் சென்று விட்டார்.

மசகு தயாரித்துவிட்டு அதை வண்டிக்குப் போட ஒரு துணை ஆளைத் தேடிக் கொண்டிருந்தான். முதலாளி

www.padippakam.com



மகன் ஞாபகம் வர வீட்டிற்குள் சென்றபொழுது அவன் போர்வையை இழுத்து மூடித் தூங்கிக் கொண்டிருந்தான். அந்த வழியே பக்கத்து வீட்டு அய்யலுசாமி நாயக்கர் வெளியே போய்க் கொண்டிருந்தார். அவரை இழுத்துப் பிடித்து வண்டிக்கு மசகு போட்டான்.

"என்னப்பா உழவுதானே...வண்டி எதுக்கு?"

"மேலக்காடு பாருங்க...ரொம்ப தூரம்...அதான் வண்டி போட்டுட்டுப் போயி ஒத்தடிப்பு அடிச் சுடலாம்னு..."

அய்யலுசாமி நாயக்கர் ஆட்டுக்குக் கட்டியிருந்த வேப்பங் குழைகளில் ஒரு குச்சியை ஒடித்து பல்லில் இடுக்கிக் கொண்டார்.

"நாய்க்கரே...நமக்கும் ஒண்ணு ஒடிங்க..."—என்று இன்னொரு குச்சியை பாண்டி வாங்கிக் கொண்டான்.

கண்மாய்க்குச் சென்று வாய் அலம்பிக் கொண்டு சாப்பிட அமர்ந்தான். கம்பங் கூழிட்டு, சாம்பார் கலந்து அதை மிகச் சுவைத்துச் சாப்பிட்டான்...அப்பொழுது முதலாளி குளித்து விட்டு வந்திருந்தார். வேட்டி வெள்ளை வேளேர் என்று அவர் உடம்பில் இருந்தது. அவரது பருத்த சிவந்த உடம்புக்கு அந்த வேட்டி மிகப் பொருத்தமாக இருந்தது.

அவர் எப்பொழுதும் துப்புரவாக இருப்பார். அவருக்குத் தொழில் பருத்தி வியாபாரம் பண்ணுவது. பக்கதது ஊரில் நிறைய பேர் மல்லி அளக்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டு அதை இவர் வாங்கப் போகிறார். பருத்தி சீசனில், பருத்தி மற்ற நேரங்களில் எது கிடைத்தாலும் வாங்கி வியாபாரம பண்ணுவார்.

பாண்டி சாப்பிட்டு விட்டு, ஒரு நாத்துக்கட்டை எடுத்து வண்டியில் போட்டான். கலப்பையை நன்கு

www.padippakam.com



வண்டியில் கட்டிக் கொண்டான். வீட்டினுள் சென்று ரெடியாக வைத்திருந்த மண்கலயத்தை எடுத்துக் கொண்டான். அதில்தான் அவனுக்கு மதியச் சாப்பாடு. அதிலேதான் குடிக்கத் தண்ணீர் எல்லாம். உள்ளே ரெண்டு உப்பு வத்தல் மிதந்து கொண்டிருந்தது. வெயில் நேரத்தில் காட்டுச் சூழ்நிலையில், அந்தத் தண்ணி கூட ஒரு தேவாமிர்தந்தான். அதையும் வண்டியில் விழுகாமல் வைத்துவிட்டு, மாட்டை அவிழ்த்து தண்ணி காட்டிவிட்டு வண்டியில் பூட்டினான். அந்த நேரம் முதலாளி வெளியே வந்தார்.

“பாண்டி...மாடுக எப்படிப் போகுது...”—என்றார்.

“சொல்லணுமா முதலாளி...எல்லாரும் ஆச்சர்யப் படுறாங்க...எல்லா அம்சமும் இருக்கு முதலாளி...”

“ஒனக்கு வேலைக்குத் தோதா இருக்குமேன்னுதான் ...மூவாயிரம் போட்டுப் பிடிச்சேன்... சரிசரி...நீ போ...”

பாண்டி மாட்டைத் தட்டிக் கொடுத்து வண்டி ஓட்டிச் சென்றான்.

காட்டில் போய் வண்டியை ஒரு ஓரமாக நிப்பாட்டி, கலப்பையை மாடுகளின் கழுத்தில் மாட்டி உழுக ஆரம்பித்தான். பாண்டி மாடுகளின் போக்கைக் கண்டு மிக சந்தோசப்பட்டான். மாடுகள் எவ்வளவு கம்பீரமாகப் போகிறது. அதுவும் அந்த வலது மாடு இடது மாட்டைக் கொஞ்சம் முந்திக் கொண்டு... அந்த நடை. அவன் வெகுவாகச் சந்தோஷப்பட்டுப் போனான்.

கலப்பை தரையில் பதிந்து போக, சுட்ட ஈரல் மாதிரி மண்கட்டிகள் பெயர்ந்து விழுந்தன. காடு பிளந்து கலப்பைக்கு வழிவிட்டது. அதையே ரசித்தான். நேரம் போய்க் கொண்டிருந்தது. கலப்பை நிலத்தைப் பிளந்து நேரத்தை உள்ளே தள்ளும். பாண்டியின் நிழல் அவனுக்குக் கிழக்கே சாய ஆரம்பிததது. வெயில் தகித்தது.

www.padippakam.com



கானலில் கல்லோடையில் அலமேலு அம்மாள் ஆடிக் கொண்டிருந்தாள். கையில் அரிவாளோடு மஞ்சனத்தி செடிகளை வெட்டிக் கொண்டிருந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தால். மனசில் உள்ள சூடெல்லாம் வெளியே கானலாக ஆடியது. இவனும் சுற்றும் முற்றும் பார்த்தான். நான்கு இடங்களில் புள்ளி புள்ளியாக ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

காட்டில் தெரிந்த நான்கு இடங்களில் உள்ள புள்ளிகள் ஊரை நோக்கி நகர்ந்து போயின. ஓடையி லிருந்து மஞ்சனத்தி விறகுடன் அலமேலுஅம்மாள் வண்டியை நோக்கி வந்தாள். பாண்டிக்கு நெஞ்சு அடித்துக் கொண்டது. சந்தோசத்துடன் பயமாக இருந்தது. இரண்டு வருசமாக நடக்கிறதுதான் என்றாலும் பயம் புதுசாக.

தொப்பென்று விறகுக் கட்டு கீழே விழுந்தது. அலமேலுஅம்மாள் வண்டிக்கடியில் அமர்ந்து கொண்டாள். இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இவன் மாட்டை நிப்பாட்டி விட்டு வண்டிக்கடியில் வந்தான். இந்த வெயிலும், மனிதர்களற்ற வெட்ட வெளியும் அவனுக்குத் தைரியததைக் கொடுத்தது. பாண்டி பக்கத்தில் உட்கார்ந்தவுடன் அலமேலு அம்மாள், முந்தானையால் அவன் வேர்வையைத் துடைத்து விட்டாள். பாம்புகளாய் பெருமூச்சு விட்டுக் கொண் டார்கள். அந்த அமைதியான நேரத்தில் ரெண்டு புறாக்கள் கருவமரத்தில் கூடுகட்டிக் கொண்டிருந்தன. கூடு கட்டிக்கொண்டே கூங்... கூங்... என்று காதலித்தன.

அலமேலுஅம்மாளுக்கு சந்தோசமாக இருந்தது. எழுந்து கலயத்தை எடுத்துக் கேப்பைக் கூழைக் கரைத் தாள். பாண்டி அவளை நெருங்கி அமர்ந்து முகத்தில் அழுத்தி ஒரு முத்தம் கொடுத்தான். அலமேலு அம்மாள் கூழை ருசி பார்த்து அவனுக்கு ஊற்றினாள். அவன் கையில் வாங்கிக் குடித்துக் கொண்டே இருந்தான்.

www.padippakam.com



குடித்து விட்டு மஞ்சனத்தி இலைகளால் கையைத் துடைத்துக் கொண்டான்... அலமேலு அம்மாளின் மிருது அவனுக்கு மிகப் பிடிக்கும். திரும்பவும் அவள் வயிற்றைச் சுற்றிக் கையைப் போட முயற்சி செய்தான்.

கையை உதறிக் கன்னத்தில் செல்லமாகத் தட்டி "ஆசையைப் பாரு"— என்று எழுந்து கொண்டாள். வேகமாகச் சென்று, விறகுக் கட்டைத் தலையில் வைத்து விறுவிறு என்று நடந்தாள். நடக்க நடக்கக் கானலில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தாள். உருவம் மறைய மறைய இவனுக்கு ஏக்கமா சோகமா என்று தெரியாமல் ஏதோ ஒன்று அதிமாகிக் கொண்டே போனது.

பின் கொஞ்ச நேரம் உழுதுவிட்டு வண்டி பூட்டினான். மனசு சந்தோசமாக இருந்தாலும உடம்பு அலுப்பா யிருந்தது. மனசெல்லாம் அலமேலு அம்மாள்தான். அவள்தான் எப்படி நடிக்கிறாள்? ஊரும் சூழ்நிலையும் அவளை நடிக்க வைக்கிறது. அலமேலு அம்மாளுக்காக இவன் எதையும் செய்யக் காத்திருந்தான்.

இவன் வீட்டிற்கு வந்தபோது, நிறைய பேர் காட்டில் வேலை செய்து விட்டுக் கண்மாயில் குளித்துக் கொண் டிருந்தார்கள். வந்ததும் மாட்டிற்குத் தண்ணீர் விட்டான். கண்மாய்க்கு இழுத்துச் சென்று மாடுகளைக் கழுவினான். நெற்தாளைக் கொண்டு மாட்டை நன்கு தேய்த்துக் கழுவினான். மா ் கள் சுத்தமாகப் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. தொழுவத்தில் கட்டிவிட்டு படப்பிலிருந்துக் கூளத்தைப் பிடுங்கிப் போட்டான். இவனும் கண்மாயில் போய் குளித்து விட்டு வந்தான்.

கோழிக் கூண்டின்மேல் கொஞ்ச நேரம் உட்கார்ந்து ஊருககுள்ளே பார்வையை விட்டான். எல்லார் வீட்டுக்கு மேலேயும் புகை போய்க் கொண்டிருந்தது. காட்டிலிருந்து வந்ததும பெண்கள் சமைக்கிறார்கள். மழை மேகமா யிருநதது. அய்யர் வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

www.padippakam.com



அலமேலு அம்மாள் வந்து கொண்டிருந்தாள். இவனைப் பார்த்து ஒரு சிரிப்பு கூடக் கிடையாது. இவன் இருப்ப தாகவே அவள் காட்டிக் கொள்ளவில்லை. வீட்டுப் படியேறியதும் 'அக்கா' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே போனாள். உள்ளே என்ன செய்கிறார்கள் என்று தெரியாமல் பேச்சுக் குரல் மட்டும் கேட்டது.

"வா... வா அலமேலு! என்ன இன்னிக்கு ஆளையேப் பார்க்க முடியலை..."

"விறகு வேண்டியிருக்குல்ல... அதான் கக்கரைக்கு போய் வெட்டிட்டு வந்தேன்..."

"வெறகுக்கு அவ்வளவு தூரமா..."

"ஆமா... போனேன் நாம் பாட்டுக்கு... என்ன வேலை நடக்கு..."

"நேத்து அரிசி மூடை வாங்கினோம்... கல்லு ப்ர்க்குறேன்...என்ன ஊர்லேர்ந்து, லட்டர் வந்துச்சா..."

"ம் வந்துச்சு... பணம் அனுப்புனாரு..."

"நீ அங்க போய் நிம்மதியா இருக்குறத விட்டுட்டு இங்க வெயில்ல காய்ற... அதுவும் இந்த வயசுல தனியா இருக்கலாமா..."

"என்ன வயசுக்கா... முப்பத்தைஞ்சாச்சு... ரெண்டு குழந்தை பெத்தாச்சு... இனி என்ன... போய்ச் சேர வேண்டியதுதான்..."— அலமேலு அம்மாளின் அத்தனை சொற்களும் சோகத்தை சுமந்து வந்தன. அவளுடைய விரக்தி முகத்திலிருந்து வீடு எங்கும் பரவும். அந்த விரக்தி யோடு அவள் மனசு கோயம்புத்தூர் போகும். பணம் ரெண்டு பேருக்கும் நடுவில் இவ்வளவு தூரத்தை உண்டாக்கி விட்டது.

"அடுத்த வாட்டி அவரு வரும்போது குழந்தைகளோட நீயும் கிளம்பிரு... பேசாம..."

www.padippakam.com



"அவரு சம்மதிக்க மாட்டேங்றாரே...காடு கரை களை யாரு பார்த்துக்குவாங்றாரு...என்ன பெரிய காடு கரை...அடுத்தவாட்டிக் கூடப்போயிரலாம்னுதான் இருக் கேன்..." ஊருக்கு அவர் ஓடிவந்து தலை வருடி விடுவ தாகக் கற்பனை அலமேலு அம்மாவுக்கு. அந்த கற்பனை பெருமூச்சுகளாய் வந்தது. அவளது பெருமூச்சு குப்பென்று துக்கத்தை வெளியே தள்ளி பாண்டியின் மனசில் அறையும்.

பாண்டி எழுந்து வெளியே போனான். மழை தூர ஆரம்பித்திருந்தது. வீட்டிலிருந்த பசுமாட்டை அவிழ்த்து வீட்டினுள் கட்டினான். ஓடிப்போய் ராத்திரிக்கான மாட்டுக் கூளத்தைப் படப்பிலிருந்து பிடுங்கினான். படப்பி லிருந்துநெற்தாளை உருவி உருவிப் போட்டுக் கொண்டே நிறையக் கடவுளை வேண்டிக் கொண்டான்.

"ஐயனாரே... மாரியாத்தா... நீதான் எனக்குத் தொணை...எப்படியாவது நீதான் அலமேலு அம்மாளை இங்கேயே இருக்க வைக்கணும்...அந்தாளு வந்து கூட்டிட்டுப் போயிடக் கூடாது..."

மழை தூறலோடு போய்விட்டது. கூளத்தைக் கட்டாகக் கட்டித் தொழுவத்தில் போட்டான். மாடுகளுக் கான கண்மாய்த் தண்ணீரை நான்கு குடங்கள் எடுத் தான். சாயங்காலமாகிவிட்டிருந்தது. கோழிக் கூண்டுப் பக்கத்தில் கோழிகள் சேவலைச் சேவலைச் சூழ்ந்து கொண்டு கத்திக் கொண்டிருந்தன. இன்னும் சிறிது நேரத்தில் இருட்டிவிடும்.

பாண்டி வீட்டினுள் சென்று ஒரு மண் சட்டியில் தவிடு போட்டு, அதனுடன் வீட்டுக்கார அம்மாளிடம் கேட்டுக் கொஞ்சம் கம்பங்கூழிட்டு நன்கு பிசைந்தான். கோழி களுக்கு வைத்தான். கோழிகள் மிக வேகமாகக் கொத்திச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அந்த வேகமானத் தின்னலில் கோழிகளுக்கு விக்கல் எடுத்தது. கழுத்தை

www.padippakam.com



வளைத்து, உடம்பைச் சுருக்கி விக்கலை சரி செய்து கொண்டது. ஒரு வெள்ளைச் சேவல் சாப்பிட வந்தது. அதை செவலைச் சேவல் கொத்தி விரட்டியது.

தவிடு காலியானதும் கோழிகள் கலைந்து சென்றன. ஒரு இடத்திற்குச் சென்றவுடன் ஒரு புழுவைக் கொத்தி, தன் வாயில் கவ்விக் கொண்டே "கொக் கொக்"—என்று கோழிகளை அழைத்தது செவலைச் சேவல் சாம்பல் நிறக்கோழி ஓடி வந்து அதைப் பெற்றுக் கொண்டது. அந்த அன்பின் முதிர்ச்சியாக ரெக்கையை விரித்துக் கொண்டு கோழியைச் சுற்றியது. உடனே கோழி லாவகமாகக் கீழே படுத்துக் கொண்டது. செவலைச் சேவல் அதன்மீது அவசரமாக ஏறித் தன் திறமையைக் காட்டியது. பாண்டி அதை ரசித்துப் பார்த்தான்.

பாண்டி எழுந்து மாடுகளுக்குப் பக்கத்தில் போய் காடியில் அமர்ந்து கொண்டான். மாடுகளின் காதுகளில் இருந்த உண்ணிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் இருட்டி விட்டது.

திரும்பவும கோழிக் கூண்டின்மேல் உட்கார்ந்து வீட்டுக்கார அம்மா சாப்பிடக் கூப்பிடக் காத்திருந்தான், சாப்பிட்டு விட்டு ரெண்டு வேலைகள் இருபபதாக எண்ணிக் கொண்டான்.

"பருத்தி வெதய ஊறப்போடணும்...அப்புறம் தொழுவத்தைக் கூட்டி ஒதுக்கி வைச்சுட்டுத் தூங்க வேண்டியது தான்..."

www.padippakam.com

# கண் காணாத் தொலைவு

"பஸ் ஸ்டாண்டை விட்டு இறங்குனவுடனே மேற்கே பார்த்தா உச்சியில தண்ணித் தொட்டி தெரியும். அது பக்கம் போயிக் கொஞ்சம் கிழக்கே திரும்பினா பெரிய பெரிய வீடுகளா ஒரு தெரு இருக்கும். அங்கே போய்க் கேட்டா சொல்லுவாங்க..." — என்று சுப்பையா அண்ணாச்சி சொன்னதை வைத்து நடராஜன் பஸ்சிலிருந்து இறங்கியவுடனே ரோட்டுக்கு வந்து மேற்கே பார்த்தார். கொஞ்ச தூரத்தில் தண்ணீர்த் தொட்டி பிரம்மாண்டமாகத் தெரிந்தது.

சட்டை போடாத உடம்பை நாலு முழ துண்டால் மூடிக்கொண்டு, வேஷ்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு நடந்தார். தணணீர்த் தொட்டியை நோக்கி, ரோட்டில் ஜன நெருக்கடியாக இருந்தது. இவ்வளவு நெருக்கம் கிராமவாசியான நடராஜனுக்குப் புதுசு. விலகி விலகி ஒரு ஓரமாக நடந்து போனார். "கொஞ்ச தூரம் போனவுடனே எடது கைப் பக்கம் ஒரு சின்ன ரோடு போகும்...அதுல போனா பைபாஸ் ரோட்டுல போய்ச் சேரும்...பைபாஸ் ரோட்டுலயே போனா ... தண்ணீர்த் தொட்டிப் பக்கந்தான்."

www.padippakam.com



சுப்பையா சொன்னதை வைத்து இடது பக்கமாகப் பார்த்துக் கொண்டே போனார். "போனவுடனே... செங்கையா பேசுறானோ...இல்லையோ..."—மனதில் எண்ணிப் பயந்தார். "எதுக்கு சின்னய்யா நீங்க கூலி வேலை செஞ்சுக்குட்டுன்னு...திருப்பி அனுப்பிடுவானோ... அப்படிச் செய்ய மாட்டான்..மனசு திறந்துக் கஷ்டத்தைச் சொன்னாப் புரிஞ்சுக்குவான்...ரொம்பப் புத்திசாலிப் பையன் ... ரொம்ப வறுமைப்பட்டக் குடும்பத்துல பொறந்து...அங்கிங்கேக் கடன் வாங்கிப் பெரிய படிப்பு படிச்சு...இன்னிக்குச் சாத்தூர் காலேஜ்ல வாத்யாரு... அவன் சம்சாரம் கூட என்னவோ டெலிபோன்ல வேலை செய்றதாச் சொன்னாங்க...கல்யாணத்துல பார்த்தது... ரொம்ப அழகான பொண்ணு..."

நடராஜன் தன்னுடைய மனைவி தாயாரு பற்றி எண்ணிக் கொண்டார். "தாயாரு கூட வயசுல அப்படித்தான் இருந்தா...அவளும் டவுண்ல இருந்தா... இன்னும் ரொம்ப அழகா இருப்பா...இப்பத்தானே ஏ விசயத்துல ராட்சசியாயிட்டா..."

நடராஜன், முகம் சுருங்கி தொண்டை அடைத்து எச்சில் கூட்டி விழுங்கினார். சுற்றிலும் பார்த்தார். பஸ்ஸில், சைக்கிளில், லாரியில் மனிதர்கள் போய் வந்து கொண்டே இருந்தார்கள். "அழுதா பைத்தியக்காரன்னு... நெனைக்கப் போறாங்க..."— கண்களை வேகமாக மூடி மூடி திறந்து கண்ணீரை அடக்கிக் கொண்டார்.

"சுப்பையா அண்ணாச்சிதான் சொன்னாரு... எம் மருமவ ஒரே பொண்ணுதானே...ஏஞ்சம்பந்திக்கும் வயசாயிட்டுதா...நல்ல தோட்டம...கவனிச்சுக்க ஒரு ஆள் பார்த்து விட்டுடுங்கன்னு ஏம்பையனகிட்டச் சொன்னா ராம். பையன் ஏங்கிட்டச் சொன்னான்...அதான் நல்ல ஆளைப் பாக்கணும்னாரு. அப்பவே வீட்டுக்கு வழி கேட்டு வைச்சது நல்லதாப் போச்சு...நான் அந்த வேலைக்குப்

www.padippakam.com



போறேன்னு சொன்னா விடமாட்டாரே...நமக்கும் அவருக்கும் ஒரு அஞ்சாறு வயசு முன்னப் பின்ன...அவரு பையன் இன்னிக்கு காலேஜ் வாத்யாரு...நமக்கு ஒரு வயசுல குழந்தை...அவமானம்...சே...குழந்தை ஆசை தாயாரை அரக்கியாக்கிடுச்சே...''

குழந்தையை நினைக்கும் போதெல்லாம் அழ முயல்கிறார். சிந்தித்துக் கொண்டே போன நடராஜன் மனதில் சற்று முன்தான் இடப்பக்கம் சின்னரோடு வழியா ஒரு லாரி போனது தெரிந்தது. பின்னாடியே வந்து அந்த ரோட்டில் போனார். பைபாஸ் ரோடு வந்தது. தண்ணீர் தொட்டிப் பக்கமாகத் தெரிந்தது. நடந்தார். அங்குள்ள ஒவ்வொரு வீடாகப் பார்த்துக் கொண்டே போனார். பெரிய பெரிய வீடுகளாயிருந்தன. டவுனில் உழைப்பு இல்லாமலேயே இவ்வளவு வசதியா என அதிசயித்தார்.

தண்ணீர் தொட்டி சுற்றி பல தூண்கள் தாங்க அந்தரத்தில் பிரம்மாண்டமாகத் தெரிந்தது. அண்ணாந்து பார்ததார். ஏறுவதற்குக்கூட வசதி இருந்தது. அதிலிருந்து திரும்பித் தெருப் பக்கமாக வந்தார். "இனி வீடு எங்க இருக்குன்னு விசாரிக்கணுமே...வீடு பேரு கூட செங்கையாவோட அம்மா பேருன்னாங்க லட்சுமி பவனமனு...''

அங்கும் இங்கும் பார்த்தார். ஒரு வீட்டு வாசலில் மாலை ஐந்தரை மணிக் காற்றை அனுபவித்து, ஒரு வயதான பெண் இளம் பெண்ணுக்கு தலைவாரிக் கொண்டிருந்தாள். அவர்களிடம் கேட்கலாம் என்று பக்கத்தில் போனார். அவர்கள் காரியத்தில் கண்ணாயிருந்தார்கள். இவரைப் பார்க்கவில்லை.

செங்கையாவங்க வீடு தெரியுமாம்மா...''— கொஞ்சம் பலமாகக் கேட்டார்.

www.padippakam.com



அம்மாவும் மகளும் ஏறிட்டுப் பார்த்து, "செங்கையாவா..."— என முழித்தார்கள்,

நடராஜன் ஆவலுடன் பதிலை எதிர்பார்த்து, பின் ஏமாந்து, "ஆமா... செங்கையா... அவருகூட காலேஜ்ல வாத்தியாரா இருக்காரே... வீடுகூட லட்சுமி பவனம்னு..." எனக் கேட்டார்.

சின்னப் பெண்ணுக்கு புரிந்து கொண்ட உணர்ச்சி முகத்தில் தெரிந்தது. "ஆமாம்மா... பவானிக்கா, அவங்க வீட்டைக் கேட்குறாங்க..."

"ஆமாமா... அவங்கதான்..."— வேகமாக தலையசைத்தார் நடராஜன்.

சின்னப் பெண் எழுந்து, "இந்தப் பாதையிலேயே போய் அந்தோ தெரியுது பாருங்க வேப்ப மரம்... அது பக்கத்துல ஒரு வீடு இருக்குல்ல... அந்த வீடுதான். கீழே வாடகைக்கு விட்டுட்டு மேலே குடியிருக்காங்க..."— என்று வழி காட்டினாள்.

நடராஜன் அவள் சொன்ன திசையில் போய் வீட்டை அடைந்தார்.

வீட்டைச் சுற்றி சின்னச் சுவராக வளைத்து இருந்தார்கள். வாசலில் நின்று அழைக்கலாமா வேண்டாமா என யோசிக்கையில் ஒரு பெண் வந்தாள். யாரையோ வேண்டாதவங்களை பார்ப்பது மாதிரி பார்த்தாள். அவள் இருக்கிற வளமைக்கு சட்டை போடாத கருத்த இவரது உடம்பு விசித்திரமாகத் தெரிந்திருக்கும்.

"யாரு..."— என்றாள் அதிகாரத் தோரணையில்.

"செங்கையா வீடு இதுதானே..."— குரல் சுருதி குறைந்தது.

"ஆமா... நீங்க யாரு..."



படிப்பகம்

www.padippakam.com



"நான் அவங்க ஊரு... தூரத்து உறவு... நடராஜன்னு சொல்லுங்கம்மா... தெரியும்..."— என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, "வாங்க... சின்னயா... வாங்க... இப்பத்தான் வர்ரீங்களா... மேலே ஏறி வாங்க..."— என்று சொல்லிக் கொண்டு மேலே நின்று வரவேற்றான்.

"இப்பத்தான் வர்ரேன்பா..."— இவர் சொன்னதும் அந்தப் பெண் ஒன்றும் பேசாமல் விலகி நின்று மாடிப்படி களைக் காட்டினாள்.

செங்கையாவின் முகத்தைப் பார்த்தார். ஆச்சர்யமும் ஏன் என்ற கேள்வியும் தெரிந்தது. சிரித்துக் கொண்டே இருந்தான். "ஊர்ல எல்லாரும் சௌக்யமா இருக்காங் களா சின்னய்யா..."

"இருக்காங்க... நல்லா இருக்காங்க..."

"வீட்டைச் சுற்றிப் பார்த்தார். யாருமே இல்லை. வீடு சுத்தமாக இருந்தது. பார்க்க அழகாக இருந்தது. செங்கையாவைப் பார்த்தார். அவன் இவரையே பார்ததுக் கொண்டிருந்தான். "காரணத்தைத் தேடுறானோ..."— தலையைக் குனிந்து கொண்டார்.

"பவானிக்கு ரெண்டு மணியிலேர்ந்து எட்டு மணி வரைக்கும் வேலை... போயிருக்கா... பையன் பக்கத்து வீட்ல டி. வி. பாக்குறான்."

பிறகுதான் நடராஜன் சுதாரித்துக் கொண்டு, "பையன் நல்லா இருக்கானா..."— என்றார்.

"நல்லா இருக்கான்... இப்பத்தான் ஸ்கூலுக்குப் போக ஆரம்பிச்சிருக்கான்... சித்தி மருந்து குடிச்சுட்டாங் களாமே, இப்ப சௌக்கியமா சின்னய்யா.. அய்யா போன தடவை வரும்போது சொன்னாரு... நடராஜனுக்கு ரொம்பக் கஷ்டம்னு..."

www.padippakam.com



“ரொம்ப செலவழிச்சுட்டேன்... ஒரு வைராக்கியத் தோட... அதனால இப்ப நல்லா குணமாயிருச்சு...” —வருத்தப்பட்டார்.

“உட்காருங்க சின்னய்யா... டீ பிளாஸ்க்ல இருக்கு... கொண்டாரேன்... ஆமா, பாப்பா நல்லா இருக்கா... பாப்பா பொறந்து ஒரு வருஷம் இருக்குமுல்ல... பாக்கவே முடியல... ஊருக்கு வந்தாதானே...”— என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனான்.

நடராஜன் இன்னொரு அறையில் போய் உட்கார நினைத்தார். கட்டில் போட்டு மெத்தை இட்டிருந்தார்கள். உட்கார்ந்தார், மெத்தென்றிருந்தது. சுவரில் சுண்ணாம்பு வெள்ளையாக, நல்ல வாடையுடன் அறையே அமைதியாக இருந்தது. இந்த வீடும் செங்கையாவும் அவருக்குப் பெரிதாகத் தோன்றி அழவைத்தார்கள். அவரது மனசில் குழந்தை சிரித்து அவரை அதிகமாக அழ வைத்தாள். அந்தக் குழந்தை பிறக்காவிட்டால் நாம் இங்கே வந்திருக்க வேண்டாமே என எண்ணிக் கொண்டார்.

“ஊர்ல வெள்ளாமை எப்டி சின்னய்யா...நல்ல வெளச்சலா...”—என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான்.

“ஹூம்”—என்றார் குனிந்து கொண்டு அழுகையை, கண்ணீரை அடக்க முயன்றார். அவரைப் பார்த்த செங்கையா கொஞ்சம் ஆச்சர்யமான அமைதியாகி, “என்ன சின்னய்யா...ஏன் அழுறீங்க...சித்திக்கும் ஒண்ணும் இல்லியே ... மருந்து குடிச்சதெல்லாம் குணமாயிடுச்சுல்ல...”

துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார். அழுகையை அடக்கினார். செங்கையா அமைதியாகி, அவரையே உற்றுப் பார்த்தான். இவருக்குக் கூச்சமாகக்

கூட இருந்தது. "காபி சாப்பிடுங்க...ஆறிப் போகும்...வீட்ல ஏதாச்சும் வருத்தமா..."

"இருக்கட்டும்...அதெல்லாம் ஒண்ணுமில்ல...ஆமா... உங்க மாமா தோட்டத்துக்கு வேலை ஆள் வேணுமனு ஒங்கய்யாகிட்டச் சொல்லியிருந்தியாமே..."—என்றார் கண்களைத் துடைத்துக் கொண்டே.

"ஆமா..."—இன்னும் வியப்போடுதான் அவரைப் பார்த்தான். "ஊர்ல ஏதாச்சும் பிரச்னையா..."

"இல்ல...செங்கையா...". ரொம்ப அழுகை வந்தது. "அந்த வேலையை எனக்குக் கொடு...நல்லாச் சாப்பாடு போட்டாக்கூடப் போதும். மறுத்துராதேப்பா ... நான் மனம்நொந்து போய் வந்துருக்கேன்."

"என்ன சின்னய்யா...நீங்க போய் அந்த வேலையை செஞ்சுட்டு...ஊர்ல இருக்குற வளமான காடுகறை என்ன உங்களுக்கு...அதுல ஒழுங்கா வேலை செஞ்சு வெள்ளாமை எடுத்தா போதாதா...அய்யா கிட்டவும் சொல்லியிருக்கேன்...நீங்களும் ஒரு நல்ல ஆள் கிடைச்சா சொல்லுங்க...ஏன் அழுதீங்க ... ஊர்ல ஏதாச்சும் பிரச்னையா சின்னயா..."

"இல்லப்பா...ஊர்ல என்னால இருக்க முடியலை. வீட்ல உங்க சித்தி என்னை அந்நியமா நினைக்கிறா..." —குனிந்து அழுதார். பிறகு, "ஒரு மாடு மாதிரி...எனக்கும் ஊர்ல இருக்கப்பிடிக்கல...குழந்தையைப் பாக்றப்பெல்லாம் வாழ்க்கையே வெறுக்குது..."

"ஏன் சின்னய்யா...பாப்பாவைப் புடிக்கலயா..."

"ஹும்..."—நான் பாப்பாவை எடுத்துக்குறதுல்ல... அவளை அன்பா வைச்சுக்குறதுல்ல...ஏன், தொடுறது கூட இல்லேன்னு எங்க சித்தி ஊரெல்லாம் புலம்புறா... எனக்குப் பிடிக்காம எப்படி தொடமுடியும்...குழந்தையை காரணம் வைச்சுத்தான். நான் ஊருக்குள்ள போற

www.padippakam.com



துல்ல...ஊர்ல இருக்குறவங்கல்லாம் அவபேச்சைக் கேட்டுக் கண்டிக்கிறப்ப, தூக்குக் கயிறுல நிக்ற மாதிரி இருக்கு..."

வீடு அமைதியாக இருந்தது. செங்கையா அவரையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். இவர் மனது எங்கோ புள்ளியிட்டிருக்கிறது என உணர்ந்தான். அடக்கி வைத்தத் தண்ணீரை திறந்து விட்டது மாதிரி மனதைக் கொட்டினார். செங்கையாவுக்குப் பெருமையாகக்கூட இருந்தது. ஐம்பத்தைந்து வயசு மனிதர் அழுது உணர்ச்சிகளைக் கொட்டுவதென்றால்...? வீட்டில் இரண்டு பேர் மட்டும்தான் இருந்தார்கள், மௌனம்.

"நீங்க இருங்க... சின்னய்யா...நான் பையனைப் பாத்துட்டு வாரேன்..."

நடராஜன் வெள்ளையான சுவரை வெறித்தார். சுவருக்குள்ளே ஊரே இருந்தது. அய்யா மடந்தை போய் பொண்ணு கேட்டு வருகிறார். பொண்ணு வெளியே நடந்தால் காலெல்லாம் புண்ணாகும் என்றார். அவ்வளவு செல்லம் தாயாருக்கு. தாயாருக்காக வீடெல்லாம் அனுசரிச்சுப் போச்சு...நடராஜன் கண்படுகிற இடமெல்லாம் தாயாரு இருந்தாள்.

தாயாருவின் சிரிப்பும் வரிசைப் படுத்திய நடவடிக்கையும் அவளையே சுத்தி சுத்தி வரச் செய்தது. வருஷங்களும் அதே இருப்போடு சுத்தி சுத்தி வருகிறது. வருஷங்கள் சுத்திய சுத்தில் அய்யா காலமாகிறார். ஒவ்வொரு வருஷமும் தாயாரின் மனசில் ஒரு கரும்புள்ளி விழுந்து சிரிப்பை மறைத்துக் கொண்டே வந்தது. அந்தக் கரும்புள்ளியின்மேல் நிறையக் குழந்தைகள் சிரித்து விளையாண்டிருக்கும். கண்ணனும் ராதையும் நெய்களவாண்டார்கள். அவளது ஏக்கம் நடராஜனைப் பணியச் செய்தது.

www.padippakam.com



"தாயாரு... ஏஞ் செல்லம்... நமக்கு குழந்தை இல்லேன்னா... என்ன செய்ய... நானில்லையா... நானிருக்குந்தொட்டு ஒனக்கு என்ன கவலை... பூப்போல வச்சிருக்க மாட்டேனா..."

தாயாரு முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுகிறாள். அந்தக் கண்ணீர் அவர் மீது இருந்த பாசம் மரியாதைகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைக்கும்.

எங்கு போனாலும் நடராஜனை தாயாருவின் குழந்தை ஆசை விரட்டியது. அதைக் குறைக்க அவர் நிறைய வழிகளைத்தேடினார். எவ்வளவு தேடினாலும் தாத்தாக்கள் உபயோகித்த வழிதான் சரியெனப்பட்டது. ஊரில் உள்ள தன் தங்கையின் ஏழு வயது மகனை அழைத்து வருகிறார். தாயாருவின் குழந்தை ஆசை அப்புறமும் குறையவில்லை.

தாத்தாவின் வழிகளெல்லாம் மதிப்பிழந்து வனாந்தரமானக் காட்டில் ஓடி ஒளிகிறது என்று கண்டு கொண்டார். அந்தப் பையனுக்கு சாதம் போடும் போது தாயாருவின் கை சோத்துப் பானைக்குள் ஆழமாக இறங்க மறுக்கும். அவரது தங்கை வந்து பார்த்த பொழுது, குழந்தையைக் கண்டு மாரடித்து அழுதாள். மலடிக்கு எப்படிக் குழந்தைப் பாசம் வரும் என்றாள். தாயாரு மச்சு வீட்டுக்குள்ளேயே மூன்று நாள் அழுதாள்.

நிறைய வருஷங்கள் ஓடி நடராஜனுக்கு அம்பது வயசு என்றார்கள். அத்தனை வருஷங்களும் தாயாரு மச்சி வீட்டு இருளிலேயே இருந்தாள். அந்த இருளில் அவளிடம் இச்சையோடு நாடிய நாலைந்து ஆண்கள் அலைந்தார்கள். அவர்கள் இருட்டில் தாயாருவை இச்சையோடு பார்த்தார்கள். கடைசியில் மேலவீட்டு ரங்கசாமி தாயாருவை அந்த இருளில் ஈண்டிக் கிடந்தான். நடராஜனுக்குக் கண்ணை மறைக்கும் அந்த இருள். தாயாரு அந்த இருளை விட்டு வெளியே வந்த போது

www.padippakam.com



மூன்று மாசம் என்றாள். கேட்டவுடன் நடராஜனின் மனசு அந்த இருளில் மறையும். இருளில் ஊரெல்லாம் அவரைப் பார்த்து சிரித்தது. தொந்திக் குருசாமி நாடார் இருளோடு இருளாய் இருந்து சொல்லுகிறார். "மாடு மலையேறி மேஞ்சாலும் கன்னுக்குட்டி கோனாரு கன்னுக்குட்டி தானே..." அவருக்கு கெத்தாளம்.

செங்கையா மெல்ல அறைக்கு வந்தான். வந்தவுடன் நடராஜனுக்கு செங்கையாவின் வீட்டு வெள்ளைச் சுவர் தெரிந்தது.

செங்கையாவுக்கு ஒரு மாதிரியான நிலைமை. பேச்சை திசை திருப்ப வேண்டும் என்ற எண்ணம். "சரி... சின்னய்யா... சாப்புட்டு படுத்துட்டு காலையில ஊருக்குப் போங்க. நான் போய் பவானியைக் கூட்டியா ரேன்"— எனப் போக முயற்சித்தான்.

"அந்த வேலைய பற்றி ஒண்ணும் சொல்லலையே! ஒனக்குப் புண்ணியமாப் போகும்... மறுத்துராதேப்பா. எனக்கு ஊர்ல இருக்கவே பிடிக்கல. யாரார்க்கோ நான் ஒழைச்சுப் போட முடியுமா? அவளுக்கும் ஆப்ரேஷன் பண்ணுனதுனால வேலை செய்ய முடியல. அவ மருந்து குடிச்சப்ப கூட துடிச்சுப் போனேன்!... ஆனா அது அவளுக்காக இல்லை; குழந்தைப் பொறுப்பு ஏந்தலையில விழுந்துடுமேன்னுதான். அந்தக் குழந்தை வளர வளர..." ஓவென்று முகத்தை மூடி அழுதார். "அவங்க மூஞ்சியில முழிக்காம தூரமா இருக்கணுமனுட்டுத்தான் ஒன்னத தேடி வந்தேன்... மறுத்துராதேபபா. நீ எவ்ள கூலி கொடுத் தாலும் சரி; இல்லேன்னு மட்டும் சொல்லிடாதே!"— என்று கெஞ்சினார்.

செங்கையா தலையாட்டியபடியே அமைதியாகிப் போனான்.

# கொக்குகள் பறந்து போய்விட்டன

குருசாமி தாத்தா புறப்பட்டு விட்டார். தலையில் தலைப்பாகையாய் அழுக்கடைந்த துண்டு. பழைய வேஷ்டியைத் தார்பாய்ச்சிக் கொண்டார். சுருங்கல் விழுந்த வேஷ்டி மாதிரி கருத்த முரட்டுத்தனமானது அவருடைய உடம்பு. வயோதிகத்தின் காரணமாகத் தலை ஆடிக்கொண்டே இருக்கும். கையில் ஈயத் தூக்குச் சட்டியுடன் அவர் புறப்பாடு இருக்கும். அதுவரைக்கும் திண்ணையில் உட்கார்ந்து நாக்கைச் சப்பிக் கொண்டுத் தலையாட்டிக் கொண்டே இருப்பார். நிறைய வருசத்தைத் தின்று விட்ட தலையசைப்பு.

இவரது உடம்பு முழுவதும் காட்டில் கரைந்து தேய்ந்தது. அதனால்தான் காட்டில் உரம் அதிகம். காட்டில் களைகள் எல்லாம் குருசாமித் தாத்தாவைப் பார்த்து அலறும். அவர் எப்பொழுதும் கூடையுடன்தான் இருப்பார் முந்தி. ஊரில் ஆடுமாடுகள் போடும் சாணி யெல்லாம் அவர் காட்டில் விழுகும். இப்பொழுது கண் துப்புரவாகத் தெரியவில்லை. வீட்டுப் பெண்கள் விடிஞ்சா

www.padippakam.com



காடே எனத் தவம் கிடக்கிறார்கள். இந்த வருசம் வெள்ளாமை நல்லாயிருக்குன்னு பேசிக்கிட்டது அவருக்குக் கேட்டது.

குருசாமி தாத்தாவுக்கு ரெண்டு பெண்கள். ரெண்டு பெண்களையும் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதென்பது அவருக்கு ஊரில் அடிக்கும் வெயிலை எல்லாம் சுருட்டி வைப்பது போன்றது. காடு அவரின் நிறைய உழைப்பை வாங்கிக் கொண்டு வயித்துப்பாட்டுக்கு மட்டும்தான் தானியம் கொடுத்தது. ரெண்டு பெண்களும் சின்னப் புள்ளயிலிருந்து கூடையுடன் ஓடைக் காடெல்லாம் அலைந்தார்கள். ஊர்க்கால் மாடுகளுக்குப் பின்னால் கூடையுடன் அலைவார்கள். வயசுக்கு வந்தது எல்லாம் காட்டில்தான். பெண் வயசுக்கு வந்தது ரகசியமாக இருக்கும். தெரிந்தால் காடே கதியென அலையும் பெண் களுக்கு அது ஆபத்தாகும் என்றார்கள்.

மாடு மேய்க்கும் சக்கிலியனோடு பெரிய பெண் ஓடைக்காடுகளில் சீமைக் கருவேல மரங்களின் கீழே சிரித்த சிரிப்பு வீடுவரைக் கேட்டது. தாலி கழுததில் விழுந்த பிறகு சிரிக்கிற சிரிப்பு குருசாமித் தாத்தாவை மௌனமாக்கும். இந்தச் சிரிப்பு அவரை அருப்புக் கோட்டைக்கு விரட்டி ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு ஆளை பேருக்கு மாப்பிள்ளை ஆக்கி வைத்தது.

பெண்டாட்டி மகள்களுடன் சேர்ந்து இன்னும் வேலை செய்கிறாள். சின்னவள் கல்யாணம இன்னும் தொலை தூரத்தில் கானலில் ஆடும். வயசான பிறகு தாத்தாவுக்கு அதெல்லாம் விசயம் கிடையாது. வாய்க்கு ருசியாக இனிப்பா காரமா ஏதாவது சாப்பிட வேண்டும் என்பது தான் அவரது பிடிவாதமான குணம்.

பிறந்ததிலிருந்து கம்பும். கேப்பையும் சாப்பிட்டு நாக்கெல்லாம் செத்துப் போகும் போல. நெல்லுச்

www.padippakam.com



சோறுக்கு ஆலாய் பறந்தார். இரவில் பெண்கள் வீட்டில் இருக்கும்போது அவர்பாட்டுக்குக் கத்திக் கொண்டே இருப்பார். ஒரே ரகளை.

“நெல்லுச் சோறு ஆக்கிப் போடுங்கடி.”

ஒரே புலம்பலாய் இருந்தது. வச்சுக்கிட்டுப் போடாமலிருப்பது போல. ஊர் பிரசிடண்ட் ஐயாதான் சொன்னார். குருசாமி தாத்தாவுக்கு. மதியம் ஊர்ப்பள்ளிக் கூடத்தில் சத்துணவு வாங்கிக் கொள்ளலாம். கோடையில் சின்னமகள் கண்மாய்க் கரையில் அடையும் ஆடுகள் பக்கத்திலேயே இருப்பாள், பொழுது சாயும் நேரம் ஆடுகள் காட்டுககுப் போனவுடன் புழுக்கையைப் பொறுக்குவதற்காக. கண்மாய்க்கரை மேலேதான் பள்ளிககூடம். அதனால் கோடையில் அவளே சாப்பாடு வாங்கிக் கொடுப்பாள்.

இப்பொழுது எல்லாரும் களையெடுக்கப் போயிருக்கிறார்கள். வாங்கிக் கொடுக்க ஆளில்லை.

அவரது கைக்கு வீட்டுத் திண்ணையின் விளிம்பு எங்கு இருக்கு என்று தெரியும். அதைப் பிடித்து மெல்ல இறங்குவார். கீழே மண்ணால் ஆன இரண்டு படி. அவரது கடந்த வாழ்க்கையெல்லாம படிகளுக்குள்ளே மறைந்திருக்கும். எல்லாமே அவர் மனசில் பதிஞ்சு இருக்கும். ரெண்டுபடி இறங்கியதும் இடப்பக்கம் திரும்ப வேண்டும். தலையை ஆட்டிக் கொண்டே இடது பக்கம் திரும்புகிறார். மணலுடன் கூடிய பாதை நேராய்ப் போய் வண்டிப்பாதையில் சேரும். சின்ன வயசில் உருளை விட்ட வண்டிப்பாதை. பின் வாலிப முறுக்கோடு தண்ணி எடுக்கப்போகும் பெண்களுக்குப் பின்னால் இச்சையுடன் சுற்றித் திரிந்த வண்டிப்பாதை, நிறைய வண்டிகள் தடத்தைப் பதித்துப் போகின்றன. வண்டிப்பாதை அருகில் ஒரு சின்னமேடு. மேடு வந்ததும் நின்று வண்டிப் பாதையை மனசில் கொண்டு வந்தார். எண்பது வயது

www.padippakam.com



அனுபவம் அவருக்குப் பாதை அமைப்பு. எங்கெங்கு மேடு, பெரிய கல், வளைவு இருக்கும் என்று தெரியும். எண்பது வருசமாக ஊரில் எந்த மாற்றமும் இல்லை. ஜனத்தொகைதான் தலைகீழாகக் குறைந்திருக்கிறது. மெதுவாக அந்த மேட்டிலிருந்து வண்டிப்பாதைக்கு இறங்கினார்.

அவரது கால்கள் மணலின் நிறம் அறியும். வண்டிப் பாதை நேரே மேற்கே போகும். வலப்பக்கம் திரும்பி நடக்க வேண்டும். சிறிது தூரம் வரை நேராக நடக்க வேண்டும்.

மெதுவாக நடந்து கொண்டிருந்தார். அப்படியே கருப்பசாமி கோவில் மனசில் வந்தது. கருப்பசாமி கையில் ஓங்கிய அரிவாளோடு வீராவேசமாக நின்று கொண்டிருப்பார். முந்தியெல்லாம் குருசாமி தாத்தா வுக்கு ராத்தி இந்தக் கோயில் பக்கம் வரப்பயம். ராத்திரி கருப்பசாமி குதிரையில் வேட்டைக்குப் போவார். வேட்டைக்குப் போகும்போது யாராவது மனிதர்கள் எதிரே வந்தால் சாட்டையால் ஒரேயடி. சன்னி வந்து செத்துப் போவார்கள்.

இடப்பக்கம் இருக்கும் அக்கோயிலைச் சுற்றி நிறைய முள் மரங்கள். இப்பொழுது வெட்டியிருப்பார்களோ என்னவோ என எண்ணிக் கொண்டார்.

இன்னும் சிறிது தூரம் வரை நடந்தவுடன் அண்ணாமலை நாடார் வீடு வரும். வந்துவிட்டது எனக் காட்ட வலப்பக்கம் ஒரு ஆடு கத்தியது. அண்ணாமலை நிறைய ஆடு வளர்ப்பார். அவர் நடக்க நடக்க பாதையின் மீதுள்ள பிரசிடண்ட் வீட்டுச் சுவர் அவர் பின்னால் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து கொண்டிருந்தது. அந்த வீடு முழுவதும நகர்ந்ததும் இடப்பக்கம் நாய்க்கர் தோட்டத்து முள்வேலி நகர்ந்தது.

www.padippakam.com



கோட்டி சுப்பா நாயக்கரை நினைத்தாலே குருசாமி தாத்தாவுக்கு சிரிப்பு. நாயக்கருக்கு அவர் அப்பா வழி நிறைய நிலம் இருந்தது. சரியான கஞ்சாம்பட்டி, ஒரு பைசா செலவு பண்ணமாட்டார். பெண்டாட்டி இவருடன் இருக்கப் பிடிக்காமல் மறுமாசமே பிறந்த வீட்டுக்குப் போய் அங்கு யாருடனோ இருப்பதாக ஊரில் செய்தி. வருகிற வரவெல்லாம் அருப்புக்கோட்டை பேங்குக்குப் போகும். இவருக்கு எப்பவும் சொத்தக் கத்திரிக்காய்தான் வெஞ்சனம். பணம் சேர்த்து சேர்த்துப் பின்னாடி யாருக்கு விட்டுட்டுப் போகப் போறாரோ கஞ்சாம்பட்டி நாயக்கரு...

முள்வேலி பாதியைக் கடந்து விட்டார். பாதியைக் கடந்ததும் ஒரு புளிய மரம் வலப்பக்கம் இருக்கும். அதற்குக் கீழே தெருத் தண்ணீர்க் குழாய் இருக்கும். அதை ஊர்ஜிதப்படுத்தக் காலால் தடவிப் பார்த்துக் கொண்டே நடந்தார். சிமெண்ட் சுவர் தென்பட்டது. சரியாகத்தான் வந்திருக்கிறோம் என எண்ணிக் கொண்டார். இன்னும் பத்தடி நகர்ந்தால் வண்டிப்பாதை இடக் பக்கம் திரும்பும். திரும்பாமல் நேராகச் சென்றால் கண்மாய்க் கரையில் ஏறிக் கண்மாய்க்குள் செல்லும் பாதை. அங்கே நிறைய புளிய, ஆலமரங்கள் பறவைகள் கத்துவது லேசாகக் கேட்டது. அந்தக் கரையின் மேலே உள்ளது பிள்ளையார் கோவில்.

இவர் வண்டிப்பாதை இடப்பக்கம் திரும்பும். இடத் திற்கு வந்து விட்டார். அந்த முக்கில் இடப்பக்கம் ஒரு பெரிய கல் இருக்கும். அதை நின்றுக் காலால் தடவிப் பார்த்துக் கொண்டார். அந்தக் கல் அவர் மனசில் கதை சொல்லும். வீட்டு இடத்தாவா வந்து சொர்ண நாடார் மாரியப்ப நாடாரை வெட்டி, அவர் மயிரிழையில் தப்பிய பிறகு ஊர்ப் பஞ்சாயத்து கூடி ரெண்டு பேரின் இடங்

www.padippakam.com



களுக்கு நடுவில் போட்ட கல். அந்தக் கல்லை வைத்துத் தான அவரவர் இடத்தை அளந்து கொள்ள வேண்டும்·

இடப்பச்கம் திரும்பி நேராக நடக்க வேண்டும். இரு புறமும் முள்ளும் முள் மரங்களும். பார்த்து நடக்க வேண்டும். கொஞ்ச தூரம வந்த பின்னர் ஏகாலி தெரு வரும. ஏகாலி தெருவுக்கேயான ஒரு வாடை அடிக்கும். குருசாமி தாத்தாவுக்கு அதெல்லாம் பழக்கம். குருசாமி தாதகா முறுககேறி இருந்த காலத்தில் அங்கு ஒரு வண்ணாத்தி இருந்தாள். பொமமின்னுபேர் நாயக்கருக்குப் பொறந்த அவ தளதளன்னு இருப்பா. மூக்கு பொமமி மூக்கு பொமமி' என்று அழைப்பார்கள். குருசாமித் தாதகா தன் பொக்கை வாயால் சிரித்துக் கொள்கிறார். ஊர்க்காவல் இருந்த மூக்கையாத்தேவன் பொம்மி புல்லறுக்கும் போது கையைப் பிடிக்க, அவள் மூக்கையாததேவனின் மூக்கை அரிவாளால் காயப்படுத்தி விட்டாள். அதிலிருந்து மூக்கு பொம்மியானாள். பொமமிக்கு வயசில் குருசாமித் தாத்தாமேல் பிரியம். கம்மங்காடுகளிளும சோளக்காடுகளிலும் ஜோடியாக அலைந்தார்கள்.

வண்டிப்பாதை நேராப் போய், ஒத்தையடிப் பாதை அதிலிருந்து மேற்கே பிரியும். அதில் போனால் கடைசியில் பள்ளிக் கூடம் தான். ஒத்தையடிப் பாதையில் நடக்கும் போது பாதையை விட்டு சிறிது விலகி விடுவார். கால்களில் கற்கள் குத்தியவுடன் அது பாதையில்லை என்று எண்ணி சரியான பாதைக்கு வந்து விடுவார். இந்தப் பாதை மேலத்தெரு ஒட்டியே போகும். கரிசலில் ஒதலைதயடிப்பாதை சிமெண்ட் போட்ட மாதிரி இறுகிப் போய் இருக்கும.

மேலத்தெருவில் இருந்த ஒவ்வொரு வீடும் மனசில் வந்து மறையும். மேலத்தெருவில் நிறைய நரிகள் இருந்தன. அந்த நரிகளின் தந்திரத்துக்கு ஊரில்

எல்லார்க்கும் பயம். பொன்னு செட்டியாருக்குத் தானேப் பெண்பார்த்துக் கல்யாணம் பண்ணி வைத்து, அந்தப் பெண்ணைத் தானே வைப்பாக வைத்துக் கொண்ட பெருமாள் நாயக்கர் போன்ற நரிகள். பிடிக்காத வர்கள் படப்புகளில் எல்லாம் தீ வைக்கும் நரிகள்.

குருசாமித் தாத்தாவின் வீட்டிலிருந்து நேராகக் கண்மாய்க்கு வந்து, கிழக்குக் கரையின் கீழேயே வடக்குப் பக்கம் சென்று பின் மேற்குப் பக்கம் திரும்பி வடக்குக் கரையின் மேலே சென்றால், கண்மாய் முடியும் இடத்திற்குச் சற்றுத் தள்ளி உள்ளது பள்ளிக்கூடம்.

அந்தப் பாதையில் நடந்தார். இதுவரைக் கண்மாய்க் கரையின் கீழேயே வந்தவர், இனி அதன் மீது ஏறி வர வேண்டும். கரைமீது ஏறும் பாதையின் ஓரத்தில் அவருக்கு வலப்பக்கம் பேரம்மன் கோவில் கட்டிடம் உள்ளது. அதைத் தடவிப் பார்த்துக் கொண்டார். பேரம்மன் சாமி கேட்ட வரம் தரும் சாமி என்று ஊரில் பேர். அந்தக் காலத்தில் கல்யாணம் முடித்த மறுநாளே கணவன் இறக்க அவனுடன் உடன்கட்டை ஏறிய சாமி. கண்மாய்க்கரை நெடுக பிரம்மாண்டமான ஆலமரங்கள்.

முந்தியெல்லாம் ஆலமரங்களில் கொக்குகள் நிறைய இருக்கும். ஒரே இரைச்சல், வெள்ளன எழுந்து போனால் ஆலமரத்துக்குக் கீழே கூடை நிறைய மீன் பொறுக்கலாம் கொக்குகள் குஞ்சுகளுக்கு ஊட்டும் போது தவறி விழுந்த மீன்கள், இப்பக் கொக்குகளே காணோம. கொக்குகள் குருசாமித் தாத்தாவின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டு எங்கேயோ பறந்து போயின.

அவருக்குத் தெரிந்து அந்தக் கண்மாய்க்கரையின் மீது ஒரு வெள்ளாவி இருக்கிறது. வண்ணான் இடிய இடிய அதைப் புதுப்பித்துக் கொண்டு வந்தான். அது ஏகாலி அழகுவின் வெள்ளாவியாதலால் ‘அழகு

www.padippakam.com



வெள்ளாவி' அஞ்சாறு வருசங்களுக்கு முன்னால் திடீரென்று அழகு ஏகாலிக்கு அனுமன்சாமி இறங்கினார். எல்லாரும் அவன் காலில் விழுந்து குறிகேட்க ஆரமபிக்க, இப்ப அவன் கோடாங்கிக் காரனாகி விட்டான்.

"எல்லாரும் ஓடி வாங்க.. நாயி வெள்ளாவிக்குள்ள குட்டி போட்டுருக்கு...ஓடி வாங்க"—என்று கத்தினான் சிறுவன்.

ஓ...அந்த வெள்ளாவி வந்து விட்டது. நாய் பாதுகாப்பான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறது.

இன்னும் சிறிது தூரம் நடந்தால் அடிபம்ப் குழாய் வரும். அதன் கழிவுத் தண்ணீரைப் பேரம்மன் கோவில் நந்தவனத்தில் விட வாய்க்கால் கட்டி, அதன் மீது பெரிய பட்டை கல் வைத்திருபபார்கள். அந்தக் கல்லின் மீது ஏறிச் செல்ல வேண்டும். தாத்தாவுக்கு நினைத்தாலே பயமாக இருக்கிறது. அந்தக கல்லை அடையாளம் கண்டு, பிறகு மெதுவாக ஏறி இறங்க வேண்டும் என எண்ணினார்.

குருசாமித் தாத்தா மனசுக்குள் சின்னப் பிள்ளையாகி கண்மாய்க்கரை ஆலமர வேர்களில் ஊஞ்சலாடினார். ஒரு வேர்விட்டு இன்னொரு வேர் தவ்வினார். மரங்களில் காய்ந்து போனக் குச்சிகளை நுனிக் கொப்பு வரை சென்று மூக்குப் பொம்மிக்கு ஒடித்துத் தருகிறார். அதையெல்லாம் இந்த மரங்களும் வெளியும் நினைவு வைத்திருக்கும்.

கால், அடுத்த எட்டில் பட்டைக் கல் வரும் என உணர்ந்தது. அதன்மீது மெதுவாக ஊர்ந்து ஏறி இறங்கிச் சென்றார். கொஞ்சதூரம் சென்றதும் இடப்பக்கம் பாழடைந்த கிணறு இருக்கும். கிணற்றில் சீமைக் கருவேல மரங்கள் முளைத்து கிணற்றை மறைக்கும். அந்த மறைப்பில் நிறைய காலம் இருக்கும்.

www.padippakam.com



குருசாமித் தாத்தாவின் வாலிபமும் அதில் இருந்தது. வாலிபத்தில் கிணற்றில் தெக்கு தெக்கென தண்ணீர் இருக்கும். நிறைய வாத்துகள் தண்ணீரில் மிதக்கும். முட்டையிடும். குருசாமித் தாத்தா முங்கி தரையில் இருக்கும் முட்டையை எடுத்துச் சாகசம் பண்ணுவார். அந்தத் தண்ணீரை எல்லாம் காலம் குடித்து விட்டது.

கால் உணர்ந்தது போலவே காதும் உணர்ந்தது பள்ளிக்கூடம் பக்கத்தில் வந்துவிட்டது என்று. மாணவர்களின் கசகச என்ற சத்தம் காதில் நுழைந்தது. இன்னும் கொஞ்சதூரம் போனவுடன் இரண்டு பெரிய வேப்பமரங்கள் அதற்குக் கீழே அமர்ந்து விடுவார் குருசாமித் தாத்தா. பள்ளியில் சமைக்கும் ஆயா அவரைக் கூட்டிப் போய் சாதம் போட்டு அனுப்புவாள். இன்னும் மணி அடிக்கலை.

குருசாமித் தாத்தா அந்த அம்மாவின் வரவிற்காகக் காத்து இருக்கிறார்.

☐☐☐

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

கண்மாயில் அப்போது தண்ணீர் தெத்
www.padippakam.com
த் தென்று அலையடிக்கும். கரையில் நின்று
ற்றுக்கு அசையும் முண்டுகள் பெருத்த மரங்
. மரங்களின் கிளைகளில் ஆனந்தக் கூச்ச
ல் கெச வால் பசங்கள். தண்ணீரைத்
ாட்டு நிற்கும் கிளைகளிலிருந்து உள்ளே
ய்ந்து முங்கு நீச்சலிலேயே நடுக் கண்மாய்
ாகும் சாகசம். நடுக் கண்மாயில் நாணல்
ர்களிடையே கொக்குகள். வெள்ளைக்
ாக்குகள். தூர தூர திசைகளிலிருந்து எங்
ஊருக்கு வந்த விருந்தாளிக் கொக்குகள்.



படிப்பகம்